# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 16 வெள்ளிக்கிழமை (02.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 006




09 என்னத்தைச் சொல்ல?



21 பேச்சுக்கான திகதி 72 மணி நேரத்தில்



25 பந்தாடியது பாகிஸ்தான்

# தெரிவுக் குழுவில் உடனடியாக இடம்பெறப்போவதே இல்லை

## தீர்வு பற்றிய இணக்கமே முதல்தேவை அரசிடம் கூட்டமைப்புத் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 2

அரசு-கூட்டமைப்பு இடையே நடைபெற்று வரும் அரசியல் பேச்சில் தீர்வுக்கான இணக்கம் ஒன்று எட்டப்படாமல், அரசு அமைக்கும் நாடாளு மன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஒருபோதும் இடம்பெறாது என்று அரசிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது கூட்ட மைப்பு. நேற்று நடந்த 14ஆவது சுற்றுப் பேச்சின் போது தமது இந்த தெளிவான, நிரந்தரமான முடிவு அரச தரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித் தார்.

இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான பேச்சு கடந்த ஜனவரி மாதம் முதல் இடம்பெற்று வருகின்றது. 14ஆம் கட்டப் பேச்சு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதுவரை நடைபெற்ற பேச்சுக்களில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டது என்று சொல்வதற்கு இல்லை என்று சம்பந்தர் தெரிவித்தார். எனினும் பேசப் படவேண்டிய விடயங்கள் தொடர்பில் பட்டியலிடப் பட்டுள்ளது என்று கூறிய சம்பந்தன், நேற் றைய பேச்சில் தெரிவுக்குழு பற்றி முக்கியமாக ஆராயப்பட்டதாகக் கூறினார்.

''நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச்

பக் 27

# கைதிகளின் போராட்டம் முடிவு

அனுராதபுரம், டிசெ.2

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வந்த உண்ணா விரதம் நேற்று கைவிடப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் சிறைக்குச் சென்று சிறை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

''கைதிகள் தாக்கப்பட்டது போன்ற சம்பவங்கள் இனி வரும் காலங்களில் நடக்காது என்று கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு அதி காரிகள் வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து தற்காலிகமாகப் போராட்டம் கைவிடப்பட்டது'' என்று கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அனு ராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் அர

பக் 27

# ஆணைக்குழு அறிக்கையின்படி குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

## ஆனால் போர்க்குற்றம் நிகழவில்லை என்கிறார் கெஹலிய

கொழும்பு, நவ.2

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின்படி குற்றவாளிகளாக இனங்காணப்படுவோர் தண்டிக்கப்படு வார்கள். பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளதைப்போன்று சிலர் தண்டிக்கப்பட லாம்; சிலர் தண்டிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், வெளிநாடுகள் இதில் தலை யிட்டு தண்டனை வழங்குவதை அரசும், எமது மக்களும் ஏற்கமாட்டோம். ஆனால் போர்க்குற்றம் ஏதும் நிகழவில்லை என் பதே தொடர்ந்தும் அரசின் நிலைப்பாடு.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாள ரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல 'நேற்றுத் தெரி வித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத் தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

''போரை பலர் பல கோணங் களில் பார்க்கலாம். இதிலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நாம் பல நியாயமான காரணங்களை

பக் 26



அனுராதபுர சிறைச்சாலைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் நேற்று விஜயம் செய்து அங்குள்ள கைதிகளின் நிலை பற்றி கேட்டறிந் தனர்.

# பொன்சேகா மீதான வழக்கை அரசு வாபஸ் பெற வேண்டும்

## ரணில் கோரிக்கை

கொழும்பு, டிசெ.2

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார் என்ற காரணத்துக்காக சிறைக்கு அனுப் பப்பட்டுள்ள பொன்சேகா மீதான வழக்குகளை அரசு உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

நாட்டில் அடிப்படை மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. அதனால் தான், சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற் கான ஆணைக்குழு அமைக் கும் தீர்மானத்தை அரசு எதிர்த் தது. அவ்வாறில்லாவிட்டால் அந்தத் தீர்மானத்தில் கையெ ழுத்திட மறுத்தது ஏன்?

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க நாடாளு மன்றில் நேற்று கேள்வி எழுப்பினார்.

பக் 28

# முன்னாள் போராளிகளுக்கு எதிராகச் சதி

## அமைச்சர் கஜதீரவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ.2

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை மீண்டும் இருண்ட யுகத் திற்கு அழைத்துச்செல்ல வெளிச்சக்திகள் முயற்சித்து வருகின்றன. இதன் ஓர் அங்கமாகவே அனுராதபுரம் தாக் குதல் சம்பவம்

பக் 28

# அமெரிக்காவுடன் நேரடிச் சண்டையை என்றோ ஒருநாள் எதிர்பார்த்த புலிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 2

என்றாவது ஒருநாள் அமெரிக்கா தங்களுடன் நேரடியாகச் சண்டை யிடும் என்று புலிகள் நினைத்தார் கள் என்பதுடன் தமது அமைப்புத் தொடர்பில் அமெரிக்கா கொண் டிருந்த நிலைப்பாடு குறித்தும் அவர்கள் தீவிர கவலை கொண்டி ருந்தார்கள் என்று 2002 ஒக்ரோபர் மாதத்தில் கொழும்பில் இருந்து வொஷிங்ரனுக்கு அனுப்பப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அப்போது கொழும்பில் அமெரிக் கத் தூதராகப் பணியாற்றிய அஸ்லி வில்ஸ் அனுப்பி வைத்த 'கேபிள்' செய்தியை 'விக்கி லீக்ஸ்' இணை யம் கசிய விட்டுள்ளது.

அமெரிக்காவுடன் நேரடியான தொடர்புகள் இல்லாத காரணத்தால் வேறு வழிவகைகளில் தமது இயக்கம் தொடர்பான வொஷிங்ர னின் நிலைப்பாட்டை அறியப் புலிகள் கடுமை யாக முயன்றனர் என்று அந்த 'கேபிள்' செய்தியில்

பக் 27

# உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட வெளி நாட்டவருக்கு அனுமதியில்லை

## பீரிஸ் மீண்டும் பழைய பல்லவி

கொழும்பு, டிசெ.2

நமது நாட்டில் ஏற்படும் பிரச்சினை களுக்கு நாமே தீர்வு காணவேண்டும். அதனை சர்வதேசத்திடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை. நமது பிரச்சினைகளை நம் நாட்டிற்குள், நமது மண்ணில் நமது மக்களின் விருப்பத்திற் கிணங்க தீர்த்துக்கொள்ளவேண்டும். நமக்கென தனியான கௌரவம், இறைமை, நாகரிகம், கலாசாரம், பண்பாட்டு விழு மியங்கள் என்பன உள்ளன. அவற்றை நாம் தாரைவார்க்கத் தயாராக இல்லை இவ்வாறு வெளிவிவகார அமைச் சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் ஜனாதிபதி செயலகம்

பக் 27

# எண்ணெய் ஆய்வில் சீனாவுக்கும் அனுமதி இலங்கையின் முடிவுக்கு இந்தியா ஆட்சேபம்

கொழும்பு, டிசெ.2

மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் ஆராய் வுப் பணிகளில் ஈடுபடு வதற்கான அனுமதியை சீனாவிடமும் வழங்கு வதற்கு இலங்கை அரசு கொள்கையளவில் தீர்மா னமொன்றை எடுத்திருப் பதாக நம்பகரமாகத் தெரிய வருகிறது.

அதேசமயம், இலங்கை அரசின் இந்தத் தீர்மானம் தொடர்பில் இந்தியாவும் உத்தியோகப்பற்றற்ற ரீதி யில் ஆட்சேபனையை வெளியிட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

மன்னார் கடற்படுக்கை யில் எண்ணெய் ஆராய் வுப் பணிகளை ஏற்கனவே இந்திய நிறுவனமொன்று மேற்கொண்டு வருகின் றது. இந்தக் கடற்படுக்கை யில் சுமார் எட்டு இடங்க ளில் எண்ணெய் வளம் இருப்பதாகக் கண் டறியப்பட்டுள் ளது.

இந்த இடங்க

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழைக்கான சாத்தியமும் உள்ளது.

## திருமறைக் கலாமன்ற தினம் நாளை

யாழ்ப்பாணம், டிசெ.2

திருமறைக் கலாமன்றத் தினம் நாளை சனிக்கிழமை சிறப்பிக்கப் படவுள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு வகை யான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாளைக் காலை 7 மணிக்கு மன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் நன்றி வழி பாடும், மாலை 4 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும், காலை 9.30 மணிக்கு கலைத் தூது மணி மண்டபத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

மாலையில் இடம்பெறவுள்ள கலை நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விபண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இதில் நடனங்கள், நாடகம், பாட்டு, கவியரங்கம், கலைஞர் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை இலங்கையிலுள்ள அனைத்து திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களும் கலந்துகொள்ளும் திருமறைக் கலாமன்ற தின நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வவுனியா புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (த)

# கிளி,முல்லை மாவட்டங்களில் 4 மருத்துவமனைகள் திருத்தம்

கொழும்பு, டிசெ. 2

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள 4 வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட உள்ளதாக அரசு அறிவித்துள்ளது. போரினால் அழிந்து போன இந்த மருத்துவமனைகள் அமெரிக்க பசுபிக் கட்டளை மையத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட உள்ளன என்று அரச இணையத்தளம் நேற்று செய்தி வெளியிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையும் கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் ஆதார வைத்தியசாலை, பூநகரி மற்றும் பளை பிரதேச வைத்தியசாலைகள் என்பனவே புனரமைக்கப்பட உள்ளன.

இந்த வைத்தியசாலைகளைப் புனரமைக்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்தமுன்மொழிவுகளை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைப் பிரிவு, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த வைத்திய சாலைகள் புனரமைக்கப்பட உள்ளன. இதற்காக 23 மில்லியன் ரூபாய் செலவிடப்பட உள்ளது. (உ)

# வைத்தியசாலைகளை அமெ. புனரமைக்கக் கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.2

வடக்கில் நான்கு வைத்திய சாலைகளை புனரமைக்கும் ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க இராணுவத் தலைமையகத் திட்டத்துக்கு அமைச்சரவையில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் இந்தத் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அமெரிக்கா ஏதோவொரு வகையில் உள்நோக்கத்துடன் தந்திரோபாயத்தைக் கையாள்கின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர்கள், நாட்டின் பாதுகாப்புக்கு இதனால் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் எதிர்வு கூறியுள்ளனர். ''பசுபிக் தலைமையகம் நிதியைத்தான் பெற்றுக்கொடுக்கும். நிர்மாண நடவடிக்கைகளை அரசுதான் முன்னெடுக்கும்'' என்று கூறிச் சமாளித்துள்ளார்.

ஜனாதிபதியின் கூற்றை அங்கீகரித்த அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், சரத் அமுனுகம, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஜனாதிபதியின் முடிவை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த சட்டமூலம் குறித்து சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இறுதியில் குறித்த திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் கடல் மார்க்கமாக தப்பித்துச் செல்ல முயன்றவேளை, சர்வதேச கடற்பரப்பில் அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தலைமையகத்துக்குச் சொந்தமான கப்பலொன்று தரித்து நின்றுகொண்டிருந்தது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-சி)

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு இதய இயக்கிகள் உட்பட ரூ.60 லட்சம் பெறுமதியான உபகரணங்கள்

## புலம்பெயர் தமிழர்கள் அமைப்பு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.போதனா வைத்திய சாலை இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு 60 இலட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர இருதய இயக்கி மற்றும் உபகரணங்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழர்களின் அமைப்பான சுகாதார அமைப்பு அவற்றை வழங்கியுள்ளது. இதன்மூலம் இருதய நோயாளிகள் பயனடைவர் என்று போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் பூ.லக்ஷ்மன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தச் சத்திர சிகிச்சையின் போது ஒருவருக்கு மட்டும் பொருத்தப்படும் இதய இயக்கியின் பெறுமதி மூன்று லட்சம் ரூபாவாகும். இந்த அமைப்பின் உதவியின் மூலம் 20 பேருக்கு இங்கு சிகிச்சையளிக்கமுடியும்.

நிரந்தர இதய இயக்கி பொருத்தும் சிகிச்சை முறை யாழ்ப்பாணத்தில் போதனா வைத்தியசாலையில் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 64 பேருக்கு அந்தச் சிகிச்சை அளிக்க சுகாதார அமைச்சு உதவியிருந்தது. ஆனால் இன்று வரை 70 இதுக்கும் மேற்பட்டோருக்கு அவ்வாறு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் செலவிலேயே அவர்களுக்கான இந்த நிரந்தர இதய இயக்கி கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்படுகின்றது. தற்போது 20 பேருக்கு சிகிச்சையளிக்க இந்த அமைப்பு உதவி செய்துள்ளது என்றார் வைத்திய நிபுணர் லக்ஷ்மன். (ஒ-4)

# மோசடி செய்த மின்பாவனையாளர் 115 பேரும் நஷ்டஈடாக 1 கோடி 82 லட்சம் செலுத்த வேண்டும்

## அதைவிட தண்டப்பணம் 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம்,டிசெ.2

சட்ட ரீதியாக மின் இணைப்புப் பெற்று மின்மானியில் மோசடி செய்து சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் 115 பேர் நீதிமன்றில் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதை அடுத்து ஒருகோடியே 82 இலட்சத்து 13 ஆயிரத்து 51 ரூபாவை நஷ்ட ஈட்டுத் தொகையாகத் தமக்குச் செலுத்த வேண்டும் என்று மின்சார சபையினர் நீதிமன்றில் கணக்குப் பட்டியல் சமர்ப்பித்துள்ளனர் இந்தத் தொகையைச் செலுத்துமாறு நீதிவான் 115 பேருக்கும் உத்தரவிட்டார்.

இது தவிர குற்றப்பணமாக 115 பேரும் 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நீதிமன்றுக்குச் செலுத்துமாறும் நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவை அடுத்து சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றில் இந்தத் தொகையை செலுத்தி வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை முதல் திங்கள் வரையான மூன்று நாள்களும் யாழ். நகர்ப்பகுதியில் மேற்கொண்ட திடீர்ப்பரிசோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கொழும்பு மின்சார சபையின் விசேட பரிசோதனைப் பிரிவிலிருந்து வந்தவர்களே யாழ்.பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கையில் இறங்கி இருந்தனர்.(ஒ-4)

# கொழும்பு - தூத்துக்குடி பயணிகள் சேவை கப்பலை தடுத்து வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு - தூத்துக்குடிக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்ட இந்தியாவின் எம்.வி. ஸ்கோஷியா பிரின்ஸ் கப்பலைக் கைப்பற்றி தடுத்து வைக்குமாறு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இக்கப்பலுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டமைக்கான கொடுப்பனவுகளை குறித்த கப்பல் நிறுவனம் செலுத்தத் தவறியது எனக்கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை எம்.ஏ.ரஸாக் அன்ட் கம்பனி மேற்கொண்டது எனவும் இதற்காக கப்பல் நிறுவனம் 478,173.23 அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது என்றும் எம்.ஏ.ரஸாக் அன்ட் கம்பனியின் நிதி முகாமையாளர் ஜெய்னுல் ஆப்தீன் மொஹமட் தாரிக்கினால் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மனுதாரர் சார்பில் கே.பி. லோ அசோஷியேட்ஸின் கே.பூபாலசிங்கத்தின் நெறிப்படுத்தலில், தமயந்தி பிரான்சிஸ் நீதிமன்றில் ஆஜரானார்.

தமது கட்சிக்காரர், மேற்படி கப்பல் கம்பனியின் கோரிக்கைக்கு இணங்க எம்.வி. ஸ்கோஷியா கப்பலுக்கு இவ்வருடம் ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் எரிபொருள், எரிவாயு, உராய்வு நீக்கி எண்ணெய் முதலானவற்றை லங்கா மரைன்ஸ் சேர்விசஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஊடாக விநியோகித்தார் என சட்டத்தரணி தமயந்தி பிரான்சிஸ் கூறினார்.

இதற்காக செலுத்தப்பட வேண்டிய 478,173.23 டொலர்களை செலுத்துமாறு பல தடவை கோரப்பட்ட போதிலும் இப்பணம் செலுத்தப்படவில்லை எனவும் நீதிமன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

# பதவி நீக்கம்

முக்கிய மூன்று நிறுவனங்களின் தலைவர்களை உடனடியாக பதவிநீக்கம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனவசம, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனவியல் கூட்டுத்தாபனம் ஆகிய முக்கிய நிறுவனங்களுக்குத் தலைமை வகித்தவர்களே பதவிநீக்கம் செய்யப்படவுள்ளனர். குறித்த அதிகாரிகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட விசாரணைகளையடுத்தே அவர்களை பதவிநீக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய சில நிறுவனங்களின் தலைவர்களையும் அரசு குறிவைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நிகழ்வுகள் இன்று

### திட்டமிடல் கூட்டம்

யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் ஜே/69 கிராம சேவகர் பிரிவு மக்களுக்கான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் காலை 9 மணிக்கு குருநகர் சனசமூக நிலையக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இந்தத் திட்டமிடல் கூட்டத்தில் ஜே/69 கிராம சேவகர் பிரிவு மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார். (த-311)

**வாராந்த நிகழ்வு**

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் முற்பகல் 10.30 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். (ம-236)

**பொதுக் கூட்டம்**

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத்தின் [illegible] முற்பகல் 10 மணிக்கு [illegible] தலைமையில் எரிஞ்ச அம்மன் கோயிலடியில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாப்புவிதிகள் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ம-236)

**மணி விழா**

தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் வா.தியாகேந்திரனின் மணிவிழா நிகழ்வுகள் முற்பகல் 10 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மாவட்டத்தில் புயல் தாக்கும் அபாயம்

## இன்று நண்பகல் 12 மணிக்குள் கரையைக் கடக்கலாம்

முல்லைத்தீவு, டிசெ. 2

முல்லைத்தீவுக் கரையோரத்தை இன்று புயல் தாக்கும் அபாயம் இருப்பதாக பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று நண்பகல் 12 மணி முதல் இன்று நண்பகல் 12 மணி வரையான 24 மணிநேரத்துக்கு அந்தப் பகுதியில் புயல் அபாயம் நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டப் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் அனைத்தும் நேற்று நண்பகலுடன் இழுத்து மூடப்பட்டன. மக்களை அவதானமாக இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. புயல் தாக்கினால் எதிர் கொள்வதற்கான தயார் நிலையில் மாவட்டம் வைக்கப்பட்டுள்ளதாக பேரிடர் முகாமைத்துவ முல்லைத்தீவு நிலைய அதிகாரி வித்தியானந்தன் குலாஸ் தெரிவித்தார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் நேற்று நண்பகல் 12 மணிமுதல் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையான 24 மணித்தியாலங்களுக்குள் முல்லைத்தீவுக் கரையைக் கடக்கக்கூடும் என்று பேரிடர் முகாமைத்துவ நிலையம் தனது எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

புயல் எச்சரிக்கை திடீரென விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் பகல் நேரத்தில் பதற்றம் நிலவியது.

பிரதேச செயலகங்கள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் என அனைத்து இடங்களுக்கும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. பாடசாலைகள் அனைத்தும் நண்பகல் 12 மணியுடன் மூடப்பட்டன. மாணவர்கள் அவசர அவசரமாக வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறே அரச அலுவலகங்களும் மூடப்பட்டன.

புயல் தொடர்பான எச்சரிக்கை ஒலிபெருக்கிகள் மூலம் முல்லைத்தீவு மாவட்ட பேரிடர் முகாமைத்துவ இணைப்பு நிலையத்தினால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. புயல் தாக்கத்தில் இருந்து பாதுகாப்புத் தேடுவது தொடர்பான வழிமுறைகளும் பொலிஸாரினால் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டன.

அவசர நிலையை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முகாமைத்துவ இணைப்பு நிலையத்தினால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. எனினும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை-நேற்றிரவு வரை- அங்கு புயல் கரையைக் கடக்கவில்லை.

இன்று நண்பகல் வரை புயல் அபாயம் உள்ளமையால் மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

(உ-த-6)

## கட்சி யாப்பை மீறிய மொஹான் மீது ஐ.தே.க. ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, டிசெ.2

கட்சியின் யாப்பை அப்பட்டமாக மீறிச்செயற்பட்ட மொஹான் லால் கிறேரோவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாக நேற்று அறிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நடத்தப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்தாலும், அக்கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. மொஹான் லால் கிறேரோ ஆதரவாக வாக்களித்தார்.

குறித்த எம்.பியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மந்திராலோசனை நடத்திய பின்னரே அவர் அதிரடியாக பட்ஜட்டுக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில் இலங்கை இளைஞர் வெட்டிக்கொலை

கொழும்பு, டிசெ.2

பிரிட்டனில் இலங்கையைச் சேர்ந்த இளைஞரொருவர் இனந் தெரியாதவர்களால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

30 வயதான இவர் கடையொன்றில் பணியாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரின் கழுத்துப் பகுதியில் கத்திவெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் சிகிச்சை பயனின்றி இவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலைக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனத் கூறியுள்ள அந்நாட்டுப் பொலிஸார், சம்பவம் தொடர்பில் ஆழமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறியுள்ளனர்.

சுமார் 12 மாதங்களாக பிரிட்டனில் வசித்துவரும் இந்த இளைஞரின் இலங்கையிலுள்ள குடும்பத்தினரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இளைஞர் பிரிட்டனில் இலங்கையர் ஒருவருக்குச் சொந்தமான கடையொன்றிலேயே பணியாற்றி வந்தார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## விபத்தில் வயோதிப பெண்மணி சாவு

யாழ்ப்பாணம்,டிசெ.2

சைக்கிளில் பின்புறம் அமர்ந்து சென்ற வயோதிபப் பெண் மணி மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதால் உயிரிழந்தார் கல்வியங்காட்டுப் பகுதியில் வசித்து வந்த விநாயகமூர்த்தி சரஸ்வதி (வயது-76) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்றுக்காலை சைக்கிள் 'கரிய'லில் அமர்ந்து சென்றுகொண்டிருந்த குறித்த வயோதிபப் பெண் மீது கந்தர்மடம் பகுதியில் திடீர் என பின்புறமாக வந்த மோட்டர் சைக்கிள் ஒன்று மோதியது. கீழே விழுந்த வயோதிபப் பெண் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ங)



யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக எயிட்ஸ்தினம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது. எயிட்ஸ் நோயால் உயிரிழந்தோருக்கு இதன்போது அஞ்சலி செலுத்தப்பட்டது.

## மன்னார் தள்ளாடி முகாமில் பெண் சிப்பாய் தற்கொலை

மன்னார்,டிசெ.2

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த இராணுவப் பெண் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் தம்புள்ளையைச் சேர்ந்த இந்திராணி மல்லிகா(வயது- 24) என்ற சிப்பாயே ஆவார். இவர் காலை 5.30 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்த போது தான் வைத்திருந்த துப்பாக்கியினால் தன்னைத்தானே சுட்டுள்ளார் இதன் போது படுகாயமடைந்த இவர் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி சடலத்தைப் பார்வையிட்டதுடன் உறவினர் களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதனை அடுத்து இது தொடர்பான விசாரணையை மன்னார் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-601)

## அமைச்சரவைத் தீர்மானங்கள்

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சில,

* கொழும்பிலுள்ள காலிமுகத்திடலுக்கு முன்னால் காணப்படும் இராணுவத் தலைமையகத்தை அண்மித்துள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பில் சொகுசு ஹோட்டல் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்க ஷெடரன் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற இந்தியாவின் வரையறுக்கப்பட்ட பி.சி. கம்பனிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான ஆரம்பகட்டப் பணிகளுக்காக 73.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுவதோடு, இந்தத் திட்டத்துக்கென 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன. 99 வருட குத்தகை அடிப்படையில் இந்தக் காணி வழங்கப்படும்.

* அம்பேபுஸ்ஸ - தம்புள்ளைக்கு இடையிலான வீதியைப் புனரமைக்கவென சர்வதேச அபிவிருத்திச்சங்கம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

* ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விவசாயப்பீடத்திற்கென 143 மில்லியன் ரூபா செலவில் புதிய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்தப் பணிகளை எதிர்வரும் 4 வருடங்களில் நிறைவுசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி இணைப்புச் செயலாளர் என்ற பேரில் அதிகாரம் செய்வோர் குறித்து அரசு எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.2

ஜனாதிபதி அலுவலகத்தில் பணிபுரியும் இணைப்புச் செயலாளர் அல்லது வேறு சிரேஷ்ட நபர் எனக் கூறிக் கொண்டு சில நபர்கள் தவறாக செயற்பட்டு வருகின்றனர் என்றும், இது குறித்து அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறி வுறுத்தியுள்ளது.

இவ்வாறான சிலர் பொலிஸ் நிலையங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, தாம் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து பேசுகின்றோம் எனக்கூறி அதிகாரம் செய்து வருகின்றனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு அதிகாரம் செய்யக் கூடிய அனுமதி ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவுக்கும், அலுவலகப் பிரதானி காமினி செனரத்துக்குமே உள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, வேறு பதவிகளைக் கூறி எவராவது அதிகாரம் செய்தால் உடனடியாக அறியத்தருமாறு பொலிஸ் மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி ஊடகப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

சிந்தியுங்கள்..! சொல்லுங்கள்..! வெல்லுங்கள்..!

நீங்கள் உங்கள் பிள்ளைகளை புத்திசாலியாக உருவாக்க முயற்சிப்பீர்கள் என்பது எமக்குத் தெரியும்

அதனால் ஞாயிற்றுக்கிழமை II பக்கத்தில் பிர[illegible] அவசியமானதா?" என்ற கட்டுரையை வாசித்து அதன் கீழுள்ள கேள்விக்கு பதிலளித்து பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய், கருநாட்டுக்கேணியில் 262 குடும்பங்கள் தற்காலிக வீடுகளில்

முல்லைத்தீவு, டிசெ.2

மீள்குடியமர்த்தப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் வாழ்ந்து வருவதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கொக்கிளாய் மீள்குடிய மர்ந்த 162 குடும்பங்களும், கருநாட்டுக் கேணியில் மீள் குடியமர்ந்த 100 குடும்பங்களும் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன.

அதிலும் மூன்றுக்குக் குறைவான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் வழங்கப்படவில்லை. இதனால் இத்தகைய குடும்பங்கள் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றன.

இங்கு மீள்குடியமர்ந்த மக்களுக்கு வாழ்வாதார உதவிகளாக நிலக்கடலை, பயறு, நெல் ஆகிய விதை தானியங்கள் வழங்கப்பட்டன. ஆனால் நிலத்தைப் பண்படுத்துவதற்கான உழவு கூலி வழங்கப்படவில்லை. இதனால் மிகவும் வறிய நிலையிலுள்ள இவர்கள் உழுதல் செய்வதற்கான உழவு கூலியை வழங்க முடியாத இக்கட்டான நிலையில் உள்ளனர்.

மேலும் இங்கு குடிதண்ணீர் வசதிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இங்குள்ள சில கிணறுகள் சுகாதாரத்துக்கு ஏற்புடையதாக இல்லாமல் நிலமட்டத்துடன் காணப்படுகின்றன. இதனால் இந்த மக்கள் குடிதண்ணீர் தேடி நீண்ட தூரம் அலைகின்றனர்.

எனவே இங்குள்ள கிணறுகள் யாவும் இறைத்துத் துப்புரவு செய்யப்படுவதுடன் இவற்றுக்குப் பாதுகாப்பான சுற்றுச் சுவர்களும் அமைக்கப்பட வேண்டும்.

இங்கு ஆரம்ப சுகாதார நிலையமொன்று உள்ளது. ஆனால் நிரந்தர மருத்துவர் இல்லை. தற்காலிகமாக ஒரு மருத்துவர் வாரத்தில் மூன்று நாள்கள் வந்து செல்கின்றார். இதனால் முழுமையான வைத்திய சேவைகள் கிடைப்பதில்லை. மேலும் இங்கு காணப் பட்ட ஒரேயொரு அம்புலன்ஸ் வண்டியும் பழுதான நிலையில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அதுவும் திரும்பி வருவதாகக் காணோம். காட்டுப் பிரதேசத்தில் வாழும் தமக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரின் சேவை மிகவும் அவசியமானதென இந்த மக்கள் கூறுகின்றனர்.

குறிப்பாகச் சந்தை வசதிகள் இங்கில்லை. வீதிகளும் மோசமான நிலையில் உள்ளன. அவற்றின் புனரமைப்பு வேலைகளும் இடைநடுவிலே நின்றுவிட்டன. கடந்த மூன்று மாத காலமாக இவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிவாரணமும் நிறுத்தப்பட்டு விட்டது.

எனவே தமது அவல நிலையைக் கருத்தில் கொண்டு அதிகாரிகள் தமக்கு உதவ வேண்டுமென்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. (க-500)

## மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாட்டில் நடைபெற்று வரும் விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி, டிசெ.2

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மனித உரிமைகள் பாதுகாவலர்களான சி.ஜீவநாயகம், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும், மு.தமிழ்செல்வன் சிறுவர், பெண்கள் உரிமைகள் தொடர்பாகவும், சி.சிவேந்திரன் பெண்கள், சிறுவர் உரிமைகள் மீறப்படும் போது யாரிடம் எப்படி முறையிடலாம் என்பதைப் பற்றியும் நா.கமல்ராஜ் பெண்கள், சிறுவர் உரிமைகள் மீறப்படும் போது முறையிடப்பட வேண்டிய நிறுவனங்கள் தொலைபேசி இலக்கங்கள் போன்ற கருத்துக்களை வழங்கினர்.

இந்தக் கருத்தரங்கில் ஊற்றுப்புல பகுதியைச் சேர்ந்த பெண்கள், சிறுவர் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சிப் பகுதியில் பல இடங்களில் மனித உரிமை கள் ஆணைக்குழுவின் ஏற் பாட்டில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-426)

## மொழி சார்ந்த உரிமைகள் குறித்து மன்னாரில் நேற்று நடந்த செயலமர்வு

மன்னாரில் மொழி சார்ந்த உரிமைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று மக்கள் ஆதரவு மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வை மன்னார் மாவட்ட அரச அதிபர் ஜே.ஏ.சரத் ரவீந்திர ஆரம்பித்து வைத்தார்.

சிறுபான்மை மொழி உரிமைகள், உறுதிப்படுத்தல், மேம்படுத்தல், வலுவூட்டுதல் தொடர்பாக மன்னார் அரச திணைக்கள அதிகாரிகளுக்கான ஒருநாள் செயலமர்வு இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வு மூலம் மொழிசார் பிரச்சினைகள் சட்டங்கள், அரசியல் யாப்புரிமைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையை மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## செஞ்சிலுவைச் சங்க கிளைக்கு கிளிநொச்சியில் புதிய கட்டடம்

கிளிநொச்சி, டிசெ.2

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளைக்கான புதிய கட்டடமொன்று கிளிநொச்சி பாரதிபுரச்சந்தியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஒரு ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு அதற்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தியடையும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளிநொச்சி மாவட்ட கிளை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் 14 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் இந்தக் கட்டடம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-405)

## கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பம்



வவுனியா,டிசெ.2

வவுனியாவில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபையின் உபதலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

வவுனியா நகரப் பாதையில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும் இதன் காரணமாகவே விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

இதனைத் தொடர்ந்து நகர சபைக் கூட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து உரிமையாளரிடமிருந்து தண்டம் அறவிடுவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இந்த நடவடிக்கை கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் நகரசபையால் முன்னெடுக்கப்பட்டு, உரிமையாளர்கள் தமது கால்நடைகளை பொறுப்பேற்காத நிலையில் அவை ஏலத்தில் விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-எ)

## சிறப்பாக நடைபெற்று முடிந்த கோட்டைச் சுவடுகள் நூல் வெளியீடு

அக்கராயன், டிசெ.2

முல்லைத்தீவு மாவட்டம் கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையில் 'கோட்டைச் சுவடுகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பாடசாலை அதிபர் இ.தங்கராசா தலைமை வகித்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், தமிழ்மொழி வாழ்த்து, மாணவிகளின் வரவேற்பு நடனம் ஆகியன இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து இலங்கை வேதாந்த மன்றத்தைச் சேர்ந்த மங்களம்மா ஆசியுரை வழங்கினார்.

வாழ்த்துரையை துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.செல்வரத்தினம் நிகழ்த்தினார். வெளியீட்டுரையைப் பாடசாலையின் பிரதி முதல்வர் அ.அன்ரன் டயஸ் நிகழ்த்தினார்.

நூலை துணுக்காய் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா வெளியிட்டு வைக்க முதல் பிரதியைக் கிராம அலுவலர் ச.மரியதாஸ் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

நூல் மதிப்பீட்டுரையை மல்லாவி பொது நூலகத்தின் பிரதம நூலகர் கவிஞர் வேல்.லவேந்திரா நிகழ்த்தினார். ஏற்புரையை நூலாசிரியர் வே.ஜீவரூபன் நிகழ்த்தினார். (க-410)

## வர்த்தக நிலைய சுற்றாடலை பேணிப் பாதுகாக்க பொலிஸார் நடவடிக்கை

வவுனியா பிரதேசத்தில் வர்த்தக நிலைய சுற்றாடலை பேணிப் பாதுகாக்க வேண்டுமென வவுனியா பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விற்பனைக்காக வைக்கப்படும் பொருள்கள் அனைத்தும் சுகாதார முறைப்படி இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனை அலட்சியப்படுத்தும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தண்டனையும் வழங்கப்படுமெனவும் வவுனியா பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (எ)

# முல்லைத்தீவு மாவட்ட கோட்டைகட்டியகுளம் மக்கள் நாளாந்தம் எதிர்கொண்டு வரும் இடர்பாடுகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோட்டை கட்டியகுளம் கிராமம் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள் இன்றி மக் கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். போரால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த இந்தக் கிராம மக்கள் முன்னைய காலங்களில் இருந்த வசதி வாய்ப்புக்கள் இன்றி நாளாந்தம் தமது வாழ்வில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தக் கிராமம் பழைய நிலைக்கு மீண்டுவர இன்னும் எத்தனை வருடங்கள் ஆகுமோ என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

1964 ஆம் ஆண்டு இந்தக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. 210 குடும்பங்களுக்கு 2 ஏக்கர் வயல் காணியும் 2 ஏக்கர் மேட்டுக்காணியும் வழங்கப்பட்டுள்ளன.

கோட்டைகட்டிய குளம் கிராமத்தின் வடக்கு எல்லையாக அம்பலப்பெருமாள்குளம் கிராமமும் கிழக்கு எல்லையாகப் பழைய முறிகண்டியும் தெற்கு தென்மேற்கு எல்லையாகத் தென்னியன்குளம் கிராமமும் உயிலங்குளம் கிராமமும் அமைந்துள்ளது. மேற்குப் பகுதி குடியிருப்பின் பின்புக்கமாக அடர்ந்த காட்டுப் பகுதியுள்ளது. கிராமத்தின் வயல்களுக்குப் பிரதான நீர் வழங்கும் கோட்டை கட்டியகுளம் கிழக்கெல்லையில் அமைந்துள்ளன. கோட்டை கட்டிய குளத்துக்கு மேலதிகமாக கீழ் குளம் ஒன்று உள்ளது. 1983 ஆம் ஆண்டு கீழ் குளம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் 2002 ஆம்ஆண்டு புனரமைப்பு வேலைகள் நிறைவு பெற்றது.

கோட்டைகட்டியகுளத்துக்கு ஆரம்பகால போக்குவரத்துத் துணுக்காய் உயிலங்குளம் ஊடாக இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தக் கிராமத்துக்கு வருபவர்கள் அக்கராயன்ஊடாகச்செல்லும்குறும்பாதையைப் பயன்படுத்தி வந்தனர்.

இந்தக் கிராமம் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்திருந்தது. 1978 இல் யாழ், வன்னி, மன்னாரின் சில பகுதிகள் இணைக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டபோது கோட்டைகட்டியகுளம் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைந்து கொண்டது. இந்தக் கிராமத்தில் சிவன் ஆலயம் ஒன்று உள்ளது. இந்தக் கிராம மக்கள் விவசாயத்தினையே பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். மேலும் வேட்டையாடல், நன்னீர் மீன்பிடி, விலங்கு வேளாண்மையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இடம்பெயர்வுக்கு முன்னர் பெருமளவு மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். மீள்குடியமர்வுக்குப் பின்னர் மக்கள் தொகை குறைந்து காணப்படுகின்றது. (410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஏமாற்றம் நிரம்பி வழியும் 2012 வரவு - செலவுத் திட்டம்

அடுத்த ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் வடபகுதி மக்களை அரசாங்கம் முற்றாகப் புறக்கணித்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட அவர்கள், வரவு - செலவுத் திட்டத்தினால் தமக்கு விமோசனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது குமுறினார் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்கா. அவர் தமது உரையின்போது, வடபகுதி மக்களின் கஷ்டங்களையும், வரவு - செலவுத் திட்டத்தில் அவற்றை நிவர்த்தி செய்வதில் ஒரு துளியேனும் அரசு அக்கறை காட்டவில்லை என்பதனையும் விலாவாரியாக வெளிப்படுத்தினார்.

- ★ பல லட்சம் வீடுகள் வடக்கில் அழிக்கப்பட்டுவிட்டன.
- ★ இளம்பெண்கள் 27 ஆயிரம் பேர் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.
- ★ தாய், தந்தையரை இழந்த 5,000 பிள்ளைகளும், பெற்றோரில் ஒருவரை இழந்த 12,000 பிள்ளைகளும் உள்ளனர்.
- ★ யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மொத்தம் 88,516 வீடுகள் முற்றாகவும் 69,220 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

அவர் தெரிவித்த மேற்கண்ட புள்ளிவிவரங்களை விட, போரினால் உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு ஏற்பட்ட இழப்புகளைத் தாங்க முடியாது, தமது எதிர்காலத்தை தொலைத்த பல லட்சக் கணக்கானோரின் விவரங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியே நிதி அமைச்சருமாவார். ஆனால் அவரது வரவு - செலவுத் திட்ட உரையில் மேற்கூறிய சாராருக்கு எவ்வித நிவாரண ஏற்பாடுகளும் அறிவிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு உண்டான பாதிப்புகளுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரண அல்லது புனர்வாழ்வுச் செலவுகளுக்கு எந்தவகைசார்ந்த போதுமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்பதனை அநுரகுமார திஸநாயக்கா நாடாளுமன்றில் இன்னும் பல புள்ளிவிவரங்களுடன் பகிரங்கப்படுத்தி உள்ளார்.

அதுமட்டுமன்றி, போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் 0.6 சதவீதத்தையே அரசு ஒதுக்கியுள்ளது என்பதும் பாதுகாப்பு அமைச்சுக்கு 20 சதவீதம் ஒதுக்கியுள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு - புனர்வாழ்வு - குறித்த தேவைகளை அரசாங்கம் வேண்டுமென்றே புறக்கணித்து விட்டது. குடியிருக்க ஓர் இல்லிடமும் இன்றி, அடிப்படை வசதிகளில் கால்வாசிதானும் இன்றி, உயிர், உடைமை இழப்புகளால் பாதிக்கப்பட்டு பல்லாற்றானும் நொடிந்து, தாழ்ந்து போயுள்ள தமிழ் மக்களுக்கு, தான் செய்ய வேண்டியுள்ள செயல்பொறுப்பை மறந்துவிட்ட நிலையில் அரசு - நிதி அமைச்சர் - ஜனாதிபதி தனது வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளார்.

மனிதாபிமானப் போரை நடத்தித் தமிழ் மக்களை ஆயுததாரிகளிடம் இருந்து தாம் மீட்டுவிட்டதாக அறிக்கை வெளியிடும் ஜனாதிபதியும் அவரது அரசும், அதனால் பாதிப்புற்ற மக்களை அடியோடு மறந்துவிட்டதனையே அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் விளம்பி நிற்கின்றது. போரில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கையை தமிழர் தரப்பும் சர்வதேசமும் பெருக்கிக் காட்டுவதாகக் குற்றம் சாட்டும் அரசு, தனது கணக்குப் பிரகாரமாகவேனும் உறவினருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி எதனையும் ஒதுக்கவில்லை.

இந்த இலட்சணத்தில், தெற்கில் கொழும்பில் இருந்து காலிக்கு அதிவேகப்பாதை அமைத்தது போன்று, வடபகுதிக்கு, ஏ-9 பாதையை அதிவேகப் பாதையாக மாற்றப் போவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

போர் முடிவுற்று இரண்டரை வருடங்களாவிட்டன. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர, அவசிய தேவைகளை, சேவைகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்கு அரசுக்கு மனமில்லை. மெத்தனம் காட்டுகிறது.

ஆனால் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கென வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆறு மாதங்களில் மட்டும் 29 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமா? தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் ''மிஹின் லங்கா'' விமானப் போக்குவரத்து நிறுவனத்துக்குக் கடந்த மூன்று வருடங்களில் மட்டும் 8,000 மில்லியன் ரூபா வரவு - செலவுத் திட்டங்களூடாக ஒதுக்கப்பட்டுள்ளது. ''கோப்'' எனப்படும் அரச நிறுவனங்களைக் கண்காணிக்கும் நாடாளுமன்றக்குழு அமைப்பின் கணக்கு அறிக்கையும் அதனைச் சுட்டிக்காட்டி இருந்தது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்களைப் புறந்தள்ளித் தயாரிக்கப்பட்டுள்ள 2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், தெற்கின் விவசாயிகள், தொழிலாளர்கள், தனியார் துறையினர், அரச துறையினர் என்று சகல தரப்புகளுக்கும், மட்டத்தினருக்கும் ஏமாற்றம் அளிப்பதாகவே பொருளியல் விமர்சகர்கள் தொட்டுக் காட்டுகின்றனர். மொத்தத்தில் சகல தரப்பு மக்களினதும் சுமைகளையும் வேதனைகளையும் ஏறெடுத்தும் பார்க்காத, இறுமாப்பும் இரும்புத் தனமும் சேர்த்துக் குழைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் மக்களைப் புறந்தள்ளித் தயாரிக்கப்பட்டது என்பது தெளிந்த நீரோடை போன்று துலக்கமாகத் தெரிகின்றது.

# காலாவதியான 10,000 ஊசிகள் பொலிஸ் ஆஸ்பத்திரிக் களஞ்சியத்தில்

## விசேட புலனாய்வுப் பிரிவு கைப்பற்றியது

கொழும்பு, டிசெ.2

பயன்படுத்தத்தக்க கால எல்லை முடிவடைந்த - காலாவதியான 10 ஆயிரம் 'சிரிஞ்சர்' ஊசிகள் பொலிஸ் வைத்தியசாலைக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்புப் பிரதேச வைத்தியசாலையொன்றில் கடமையாற்றும் வைத்தியரொருவரால் கொழும்புப் பிரதேசத்திலுள்ள மருந்தகம் ஒன்றிலிருந்து இவை கொள்வனவு செய்யப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் பேரில் அவரால் அனுப்பப்பட்ட விசேட பொலிஸ் பிரிவினர் குறிப்பிட்ட 'சிரிஞ்சர்' ஊசிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காலாவதியான ஊசிகளில் சில மேலதிக பரிசோதனைகளுக்காக அரச இரசாயனப் பரிசோதனைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக் காலம் காலாவதியான இச் 'சிரிஞ்சர்' ஊசிகள் ஒவ்வொன்றும் மூன்று ரூபாவுக்குக்கொள்வனவு செய்யப்பட்டு, 11 ரூபாவுக்குக் கொள்வனவு செய்ததாக கணக்கிடப்பட்டுள்ளதாகவும், இந்தச் சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட வைத்தியரிடமும் மருந்து விற்பனை நிலையத்தின் ஊழியரொருவரிடமும் விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (த-ஞ)

# அரச பெருந்தோட்ட ஊழியர்கள் சேமலாப நிதியில் பெரும் மோசடி

## 25 கோடி ரூபாவுக்கு மேல் நிலுவையில்

கொழும்பு, டிசெ, 2

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பன்னிரண்டுக்கும் அதிகமான தோட்டங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பெயரில் வைப்பில் இடப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதி இதுவரை செலுத்தப்படவில்லையெனவும் அந்த வகையில் 25 கோடி ரூபாவுக்கு அதிகமான தொகை நிலுவையில் உள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகம் மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படும் 12 தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் 5964 பேருக்கான ஊழியர் சேமலாப நிதி கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்படாது நிலுவையில் உள்ளது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்துக்கமைய ஒவ்வொரு மாதம் முடிந்ததும் அதற்கடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக ஊழியர் சேமலாப நிதிக்கு உரித்துடைய தொழிலாளர்களுக்கான பங்குப் பணம் வேலை கொள்வோரால் அனுப்பிவைக்கப்பட வேண்டியிருப்பினும் இதுவரையில் அந்தத்தொகை அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தற்போது ஒன்றிணைக்கப்பட்ட 12 தோட்டங்களின் மொத்தம் 9700 ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ள நிலப்பகுதியை நிர்வகித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-ஞ)

# 46 கிலோ வெண் சந்தனக் கட்டைகளை கொட்டகொட பொலிஸார் கைப்பற்றினர்

கொழும்பு, டிசெ, 2

ஊவா பரணகம மாவட்டத்தின் கொட்டகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 46 கிலோ எடையுள்ள வெண்சந்தன மரக் கட்டைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருட்டுத்தனமாக வெட்டிச் சேர்க்கப்பட்ட இந்த வெண்சந்தனக் கட்டைகள் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவை கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (த-ஞ)

# பெரியபுராணம் காட்டும் ஐயர்

ஐயர் என்ற சொல் மரியாதைக்குரிய உயர்நிலைச் சொல்லாகும். பெருமையில் சிறந்தவர் ஐயர் என்ற பொருள் அகராதியில் உண்டு. இன்று பெரும்பாலும் குலமரபு சார்ந்து இந்தச்சொல் கையாளப்படுகின்றது. மேலைப் புலத்தார் தமது சமய காரியங்களை நம்மத்தியில் முன்னெடுப்பதற்கு வருகை தந்த ஆரம்ப காலங்களில் தம்மை ஐயர் என்றே குறிப்பிட்டனர். போப் ஐயர், சீகன்பால்கு ஐயர் என்ற பெயர்கள் இதற்குச் சான்று.

ஞானக்கதிர்

பெரிய புராணத்தில் ஐந்து தடவைகள் தான் ஐயர் என்ற உயர்சொல்லைச் சேக்கிழார் அடியவர்கள் பால் கையாள்கிறார். அவற்றுள் மூன்று சந்தர்ப்பங்கள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற பாணர் குலத்தவருக்கும் ஒரு சந்தர்ப்பம் திருநாளைப்போவார் என்ற நந்தனாருக்கும் ஒரு சந்தர்ப்பம் கண்ணப்பர் என்ற வேடருக்கும் உரியதாகின்றன.

ஒரு மனிதனுக்கு உண்மையான உயர்வைத் தருவது அவனது செயல் பற்றிய முயற்சியே ஆகும். பெருமையும் சிறுமையும் தத்தம் செயல்களாலேயே ஏற்படுகின்றன.

ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## நாளை

கார்த்திகை 17, சனிக்கிழமை 03.12.2011

திதி: அட்டமி காலை 7. 57வரை

நட்சத்திரம்: பூரட்டாதி பின்னிரவு 5.26 வரை

சுபநேரம்: 3.15 - 4.45 வரை, ராகு காலம்: 9.15 -10.45 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியிலிருந்து 25 மீற்றர் தூரத்துக்குள் வாகனங்களை நிறுத்தி வைக்கத் தடை

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை தீர்மானம்

சண்டிலிப்பாய், டிசெ.2

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்துக்கு வசதியாகவும் விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடனும் போக்குவரத்து விதிமுறைகளுக்கமைய பிரதான சந்திகள், வளைவுகளிலிருந்து 25 மீற்றர் தூரத்துக்குள் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர் கே.கௌரிகாந்தனால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

சாவல்கட்டில் அமைந்துள்ள சந்தை இட நெருக்கடியான நிலையில் இருப்பதால் அங்கு செல்லும் மக்களும் வியாபாரிகளும் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள்.

எனவே காலத்திற்கேற்றவாறு முன்னுரிமை அடிப்படையில் சந்தையை நவீனமான முறையில் அமைக்க வேண்டும்.

மானிப்பாயிலுள்ள பிப்பிலி இந்து மயானத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை இருப்பதால் மயானத்தின் உறுதி அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் ஆகியவற்றைச் சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்து பிரதேச சபையால் நிராகரிக்கப்பட்ட பத்து ஆண்டு காலப் பகுதிக்குட்பட்ட விண்ணப்பங்களைச் சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் விபத்துக்களையும் இட நெருக்கடிகளையும் தவிர்ப்பதற்கு வீதிகள் சந்திகளிலிருந்து 25 மீற்றர் தூரத்துக்குள் வாகனங்கள் நிறுத்துவது தடை செயப்படவேண்டும். (த- 115)

# பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு மல்லாகத்தில் திறந்து வைப்பு



வலி.வடக்கு, நவ.2

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இதுவரை இயங்கிய காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு தற்போது மல்லாகம் சந்திக்கு அண்மையாக மல்லாகம் நீதிமன்ற வீதியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் மக்களுடைய நன்மை கருதி நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மல்லாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, சுன்னாகம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, வலி.வடக்குப் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கமகே, வடமாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வி.இந்திரன், காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரெரா மற்றும் திருமதி ச.சபாநாதன் உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா திறந்து வைத்தார். (த- 86)

## மணியந்தோட்டம் பகுதிக்கு விரைவில் மின் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.2

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மணியந்தோட்டம் பகுதிக்கு இந்த மாத இறுதிக்குள் மின்சார விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது முதற்கட்டமாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின்மாற்றிகளைப் புதிதாகப் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்புத்துறை துறைமுகச் சந்தியூடாக மணியம் தோட்டம் வரைக்கும் முதற்கட்டமாக மின்சார இணைப்பு வழங்கப்படவுள்ளது. (த-26)

# வாடிக்கையாளர் நலன் பேணும் வர்த்தகர்களுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், டிசெ.2

வாடிக்கையாளர் நலன் கருதியும் சமூக நலன் கருதியும் போதையூட்டக் கூடிய பொருள்கள் விற்பனை செய்வதை இடைநிறுத்திக் கொண்ட வர்த்தகர்கள், உணவு நிலைய உரிமையாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

புகையிலை உற்பத்திப் பொருள்களான சிகரெட், பீடி சுருட்டு, போதையூட்டக் கூடிய பாக்கு வகைகள், லேகியம் போன்றவற்றை விற்பனை செய்வதை இந்தக் கடைகளின் உரிமையாளர்கள் இடைநிறுத்திக் கொண்டனர் என்பதற்காகப் பாராட்டப்படுகின்றனர்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்தும் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட உள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள சுகாதாரக் கல்வித் திட்டப் பணிப்பாளர் எஸ். பிரணவன் தெரிவித்தார். (த- 4)

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உலர் உணவுப் பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொம்மைவெளி, நாவாந்துறை, கொட்டடி, மீனாட்சிபுரம், கொழும்புத்துறை பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று யாழ்.பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற உலர் உணவுப் பொருள்களே இவ்வாறு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்பட்டது.

ஒரு அங்கத்தவருக்கு 385 ரூபாவும், இரு அங்கத்தவருக்கு 490 ரூபாவும், மூன்று அங்கத்தவருக்கு 595 ரூபாவும், நான்கு அங்கத்த வருக்கு 700 ரூபாவும், 5 அங் கத்தவருக்கு மேற்பட்டோருக்கு 805 ரூபாவும் என உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (த-26)

## விபத்தில் மாணவன் காயம்

அளவெட்டி, டிசெ.2

பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானான். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கே.கே.எஸ். வீதியில் சோடாக் கம்பனி வீதிக்குத் திரும்பும் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

நடேஸ்வராக் கல்லூரி ஆரம்பப் பிரிவு பாடசாலையில் கல்வி பயிலும் றமேஸ்குமார் துசாந்தன் (வயது-09) என்ற மாணவனே மேற்படி விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இவருடன் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த தி.சதீஸ்குமார் (வயது- 26) என்பவரும் இந்த விபத்தில் காயமடைந்துள்ளார். (த- 36)

# நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை சீராக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.2

நெடுந்தீவுக்கான குடி தண்ணீர் விநியோகத்தைச் சீர்செய்யும் வகையில் சாராப்பிட்டியில் இருந்து நெடுந்தீவுப் பிரதேச சபைவரையான 4.6 கி.மீற்றர் தூரம் வரை புதிய நீர் விநியோகக் குழாய் பொருத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள நீர் விநியோகக் குழாய்கள் சேதமடைந்துள்ளதை அடுத்து நீர்விநியோகச் சேவை அடிக்கடி ஸ்தம்பிதமடைந்து வந்த நிலையில் பிரதேசசபை, யுனிசெப் அமைப்பின் ஒத்துழைப்புடன் புதிய குழாய்களைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

சாராப்பிட்டி நெழுவினி பகுதிக்கான புதிய நீர்விநியோகக் குழாய் பொருத்தும் வேலைகள் ஜனவரியில் இடம் பெறலாம் எனத் தெரிகின்றது. இதற்கான விநியோகக் குழாய்கள் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளன. (த-7)

# 3 தபாலகங்கள் ஜனவரியில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ். குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் உள்ள மூன்று தபாலகங்களை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம் தெரிவித்தார்.

குரும்பசிட்டி, கீரிமலை, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் உள்ள மூன்று தபால் நிலையங்களையும் திறந்து வைப்பதற்கு மத்திய தபால் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதி கிடைத்ததையடுத்துத் தபாலகங்கள் அதே இடங்களில் மீளத் திறக்கப்படவுள்ளன. அத்துடன் இந்த உபதபால் நிலையங்களுக்கான பதில் உப தபாலதிபர்களை நியமிப்பதற்கும் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேற்படி மூன்று இடங்களிலும் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் இந்தப் பதில் உபதபாலதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 12 ஆம் திக திக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த- 26)

## நுளம்பை கட்டுப்படுத்த புகையூட்டல்

அளவெட்டி, டிசெ.2

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் தெல்லிப்பழை சுகாதாரப் பணிமனைப் பிரதேசத்தில் நுளம்புப் பெருக்கங்கள் உள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு புகையூட்டும் நடவடிக்கையில் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் சுகாதாரப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள பகுதி மற்றும் கட்டுவன் மேற்குப் பகுதிகளில் புகையூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த- 36)

# நெடுந்தீவு வீட்டுத் திட்டங்களுக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.2

நெடுந்தீவு வீட்டுத் திட்டங்களில் குடியிருக்கும் மக்கள் தமக்கான மின்சாரத்தைக் கட்டணம் செலுத்திப் பெறத் தயாராக உள்ளதாகவும் மின்சார சபையினர் மின் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்தக் குடியிருப்பாளர்களுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

எனினும் அதற்குத் தமக்கு அனுமதி வழங்கப்படவில்லை [illegible] தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீட்டுத் திட்டத்தில் உள்ள மக்களிடம் கேட்ட போது, கட்டணம் செலுத்தி மின்சாரம் பெறுவதற்கு நாம் தயார். மின்சார சபை இணைப்பை வழங்க முன்வரவேண்டும் எனத் தெரிவித்தனர். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விரோதச் செயல்களுக்கு எதிராக பாடசாலை மட்டத்தில் மாணவர் குழுக்கள்

## கல்வி, சுகாதாரத் திணைக்களங்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.2

பாடசாலைகளில் புகைத்தல், மதுப்பாவனை, போதைப் பொருள் பாவனை ஆகியவற்றுக்கு எதிராக மாணவர் குழுக்களை அமைத்து அவர்கள் மூலமாகச் சக மாணவர்களுக்கு அறிவூட்டும் வேலைத் திட்டமொன்றை மாகாணக் கல்வித் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

அதற்கான மாணவர் வழிப்படுத்துநர்களைப் பயிற்றுவிப்பதற்குச் சுகாதாரத் திணைக்களம் அனுசரணை வழங்கவுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார திணைக்கள சுகாதாரக் கல்வித் திட்ட அதிகாரி எஸ். பிரணவன் தெரிவித்தார்.

சுகாதாரத் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற புகைபொருள் கட்டுப்பாடு குழுவின் சமகாலப் புகைத்தல் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலின் போதே இவ்வாறு மாணவர் குழுக்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சமுதாய நலத்துறையினர், கல்வி அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இது பற்றி பிரணவன் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலத்தில் பாடசாலை மாணவர்கள் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்றி எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாதிருப்பதற்காக இந்த மாணவர் குழுக்களை அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலைகள், கிராமங்கள், நகர்ப்புறங்கள் எனச் சமூக மட்டத்தில் இது தொடர்பாக விசேட விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாகவும் இது நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதன் மூலமாக இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை மாணவர்கள் மத்தியில் கட்டுப்படுத்த வேண்டும்.

கல்வி அதிகாரிகள் இதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதனால் அவற்றுக்கு அனுசரணை வழங்கி திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப் படுத்த நாம் முன்வந்துள்ளோம்.

இது தவிர 21 வயதுக்குட்பட்டவர்களுக்குப் புகையிலை விற்பனை செய்வதனைக் கண்காணித்து கட்டுப்படுத்தக் கடும் நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஆராயப்பட்டது.- என்றார். (த-4)

## தரிசு நிலத்தில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், டிசெ.2

மண்டைதீவுப் பகுதியில் ஊருவயல், தில்லைக்குடா போன்ற பகுதிகளில் நூறு ஏக்கர் தரிசு நிலம் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் உலர் வலயத் தன்மையைத் தாங்கக் கூடிய ஏ.ரி.353 நெல் இனத்தைப் பயன்படுத்தி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு செய்கை பண்ணுவதற்கு விவசாயத் திணைக்களம் ஏ.ரி 353 இன விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

உலக உணவு தாபனத்தின் அனுசரணை யுடன் வழங்கப்பட்ட இந்த உதவியுடன் உற்பத்தி தொடர்பான பயிற்சிகளையும் திணைக்களம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-7)

## முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்.குடாநாட்டில் முத்திரைகளுக்கு இப்போது தட்டுப்பாடு இல்லை என்றும் போதியளவு முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் யாழ். பிரதம தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு பிரதம அஞ்சல் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற தொழிற் சங்கப் போராட்டத்தின் காரணமாக முத்திரைகள் எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது போதியளவு முத்திரைகள் எடுத்துவரப் பட்டு சகல அஞ்சல் நிலை யங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார் அந்த அதிகாரி.

தொழிற்சங்கப் போராட்டத்தின் காரணமாக முத்திரைகள் குடாநாட்டுக்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டமையால் பல தபாலகங்களில் முத்திரைத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## நெடுந்தீவில் 21 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

நெடுந்தீவில் பலத்த மழையினால் வீடுகளில் வெள்ள நீர் புகுந்து கொண்டதால் 21 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் தமது உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளதாகவும், இது தொடர்பாக யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.சிறி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன் கிழமையும் நெடுந்தீவில் பலத்த மழை பெய்துள்ளது. வீதிகள் பெரும்பாலும் வெள்ளத்துள் மூழ்கியுள்ளன. வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் 21 குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். (த-7)

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச்சேவையில் மீண்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாற்றம் செய்யப்பட்ட நேர அட்டவணைப்படியே சேவை இடம்பெறும் என நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.சிறி தெரிவித்தார்.

இதன்படி நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு காலை 6.15 மணிக்கு வடதாரகையும், காலை 7 மணிக்கு தனியார் படகும், காலை10.30 மணிக்குக் குமுதினியும், பி.ப 2 மணிக்கு வடதாரகையும் பிற்பகல் 3.30 மணிக்குக் குமுதினியும் புறப்படும்.

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு காலை 8.30 மணிக்கு குமுதினியும், காலை 10 மணிக்கு வடதாரகையும், நண்பகல் 12.30 மணிக்குக் குமுதினியும், மாலை 4 மணிக்குத் தனியார் படகும் மாலை 5 மணிக்கு வடதாரகைப் புறப்படும்.

இந்த நேர அட்டவணை உடனடியாகவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுள்ளது. (த-7)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கான உதவிக் கொடுப்பனவு அதிகரிப்பு

யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பணியாளர் நலனோம்புக் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவுகளை அதிகரித்துள்ளதாக அதன் செயலாளர் செ. கெங்காதரன் தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தின் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது இந்தக் கொடுப்பனவுத் தீர்மானம் சபையில் கொண்டுவரப்பட்டு அதிகரிப்பட்டதாக அவர் கூறினார். கூட்டுறவுப் பணியாளர் ஒருவர் சேவையின் போது இயற்கை மரணமடைந்தால் இந்தச் சங்கத்தினால் முன்னர் 15 ஆயிரம் ரூபா நிதி உதவிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. தற்போது அந்தக் கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவற்றை விடப் பணியாளர் ஒருவர் சேவையின் போது விபத்து ஏற்பட்டு ஒரு கை, கால், கண் இழந்தால் 10 ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவாக வழங்கப்படும். இதனைவிட இரு கைகள், கால்கள், கண்களை இழப்பின் 35 ஆயிரம் ரூபா நிதி உதவிக் கொடுப்பனவாக வழங்கப்படும். பணியாளரின் உடல் பூரணமாக இயங்காதவிடத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும்.

கூட்டுறவுப் பணியாளர் ஒருவர் இருதய மற்றும் சிறுநீரக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவாராயின் அவருக்கு உதவு தொகையாக 10 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும். (த-26)

## கீரிமலை மயானத்தை நாளை முதல் பயன்படுத்தக் கடற்படையினர் அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ.2

கீரிமலை மயானத்தை நாளை சனிக்கிழமை முதல் மக்கள் பயன்படுத்துவதற்குக் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் மேற்கொண்ட முயற்சியினால் கடற்படையினர் மேற்படி அனுமதியை வழங்கியுள்ளனர் என்று வலி வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டமை வருமாறு:

கீரிமலை மயானம் 21 வருடகாலமாகக் கடற்படையினரின் கட்டுப்பாட்டினுள் இருந்து வந்தது. தற்போது கடற்படையினருடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து நாளை சனிக்கிழமை முதல் மயானத்தைப் பயன்படுத்த அவர்கள் அனுமதியளித்துள்ளனர். சனிக்கிழமைக்குப் பின்னர் பிரதேச சபையால் மயானம் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் அதனைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டுமைதானத்தை முன்னர் பிரதேசசபையால் நிர்வகிக்க முடியாமல் போனதால் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. தற்போது மீண்டும் அந்த மைதானத்தைப் பிரதேச சபை பொறுப்பேற்கவுள்ளது. அத்துடன் மாகாண அரசுக்குக் கீழுள்ள விடயங்கள் மத்திய அரசினால் பொறுப் பேற்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கலாசார விழா பிரதேசசபையினால் முன்னர் கொண்டாடப் பட்டுவந்துள்ளது. தற்போது அது பிரதேச செயலகங்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அண்மையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெற்ற கலாசார விழாவுக்கு உரிய முறையில் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப் படவில்லை என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (த-15)

## விழிப்புக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை இன்னும் இல்லை

### புகைப்படங்களை வழங்கி 2 மாதங்கள்

சண்டிலிப்பாய், டிசெ.2

விழிப்புக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்காகப் புகைப்படம் எடுத்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்து இரு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை. இந்த நிலை குறித்து உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் இடம்பெற்று வந்த கிறிஸ்பூதம், மர்ம மனிதன், திருட்டுக்கள், கொள்ளைகள் போன்ற குற்றச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகப் பொலிஸாரின் அனுசரணையுடன் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்தக் குழுக்கள் தற்பொழுது பொலி ஸாருடன் இணைந்து கிரா மங்கள் தோறும் கடமையில் ஈடுபட்டு வருகின்றன.

விழிப்புக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்க முன்வந்துள்ள பொலிஸார் உறுப்பினர்களிடமிருந்து ரூபா 200 பெற்றுப் புகைப்படம் எடுத்தனர். புகைப்படம் எடுத்து இரு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை அடையாள அட்டை வழங்கப்படவில்லை.

''அடையாள அட்டை இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. அவற்றுக்கான படங்களை பொலிஸாரிடம் வழங்கி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. அடையாள அட்டை இதுவரை கிடைக்காமையால் நாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.'' என்றார் விழிப்புக் குழு உறுப்பினர் ஒருவர்.

அடையாள அட்டையின்றி விழிப்புக்குழுவில் செயற்படப் பின் நிற்கும் உறுப்பினர்கள் விரைவாக அடையாள அட்டையைத் தந்துதவுமாறு சம்பந்தப் பட்டவர்களைக் கோரியுள்ளனர். (த-115)

## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.2

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 47 ஆவது நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையின் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் பந்துரணவக்க, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் இதில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். [illegible] கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (த- 26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்

## வானுறையும் தெய்வங்கள் வாழ்த்து முன்னை

ஐயகோ! கொடும் போரதுவும் சூழ்ந்து கொள்ள
அன்னை தமிழ் பூவிழந்து பொட்டிழந்துவாட
செப் பரிய தமிழர் வாழ்வு சிதைந்து மாழ
வலு விழந்து நிலை குலைந்தெமது வட மாகாணம்
பேயுறையும் சுடுகாடாய் போகு மென்று
பெரும் பேரறிஞர் எல்லாம் பிதற்றி நின்றார்.

மேடையிலே பேசுவது மட்டுமன்றி
பெருமையுடன் அறிக்கைகள் விடுதல் அன்றி
வெந்து மனம் வேதனையில் மாண்டார் அன்றி
கூட்டத்தில் கூடி நிதம் பிதற்றல் அன்றி
கொண்டிருந்தார் வேறொன்றும் இல்லை இல்லை
அஞ்சி அஞ்சி செயலற்று அகதியானார்.

வெளிநாடு சென்றிருந்த எம் செயல்வீரன்
செப்பரிய சீரோங்கு வாமதேவா தந்த
சிந்தனையில் செயற்திறனில் சிறந்த மேலோன்
அன்புள்ளம் அரவணைக்கும் அன்னை உளம் கொண்ட
திண்ணிய நெஞ்சுரம் மிக்க செயல் வீரன்
தியாகேந்திரன் செயற்பட முனைந்து நின்றான்

தியாகி அறக்கொடை எனும் ஸ்தாபனத்தை
திட்டமிட்டு உருவாக்கி எமக்களித்தான்
தயக்கமின்றி பல இலட்சம் முதலும் இட்டு
தக்கபல் பேரறிஞர் தம்மோடு பேசிப் பேசி
அரியதொரு பொக்கிசத்தை அவிட்டு வைத்து
அன்னை தமிழ்த் தாய்க்கு"ஆபரணம் என்றான்

கல்வியினை கண்ணாகப் போற்றி நின்று
களங்கமின்றி அனாதைகட்கு கல்வி ஊட்டி
இருப்பதற்கு இடவசதி செய்து தந்து
இங்கிதமாய் இனிய பல உணவும் ஊட்டி
வாகனத்தில் அமரவைத்து கூட்டிச்சென்று
வண்ணமார் கல்வியை ஊட்டுகின்றான்.

கைத்தொழிலால் ஏழையுவதிகளை , வாலிபரை
காக்க எண்ணி. கைத்தொழிலை ஊக்குவித்ததோடு
சித்தத்தில் கற்பனையில் உதித்ததொரு
சீரோங்கு (TCT) எனும் மண்டபத்தைக்கட்டி
பற்பலரும் வியந்தேற்ற பாங்கான அங்காடிகட்டி
பல்வகை வியாபாரம் செய்து காட்டுகின்றான்



உயர்திரு.
**வாமதேவா தியாகேந்திரன்**

மாபெரிய மண்டபமும் , மணவறையும் நல்கி
மனம் மகிழ நாசுவைக்க உணவும் நல்கி
தேறுகின்ற பணமதனை திரட்டி ஒன்றாய்
செய்கின்றான் ஏழைகட்டு திருப்பணிகள் அன்றோ
வக்கற்று வழியற்று வாடும் ஏழைகளே
வானுறையும் தெய்வங்கள் என்று செப்பி

ஏழையின் புன்சிரிப்பில் இறைவனைக்காணுகின்றான்
உலகுக்கோர் உவமையடா! தம்பி நீயும்
பொல்லூண்டும் முதியவரைப் பொருளாய் எண்ணி
அன்புடனே அழைத்து வந்து மருந்து நல்கும் பண்பு
ஆருக்கு இங்குண்டு சொல்வாய் தம்பி!
வையகத்தில் பரிதி போல் வாழ்வாய் நீடு
வானுறையும் தெய்வங்கள் ஆசி நல்கும்

ஆக்கம் : விகடகவி மு.திருநாவுக்கரசு
*( ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி)*

(சி-6504)(1,6,9)

**வாழ்த்துவோர் : TCT சமூகம்**

---

# கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி
# கேள்வி அறிவித்தல் - 2011
## கரைச்சிப் பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தால் (இக்ராட்) பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பதிவுத் தரமுடைய ஒப்பந்தக்காரர் கீழ்குறிப்பிடப்படும் தொகைகளைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களை 29.11.2011 -08.12.2011 ஆம் திகதி வரை காலை 8.30 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர்/ செயலாளர், கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ 09.12.2011 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும்.

03. கேள்விகள் 09.12.2011 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும் அவ்வேளையில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல | வேலையின் பெயர் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம்(ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதிசேர்வரி( VAT 12%) NBT(2% ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | முரசுமோட்டைமாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 02 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 03 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 04 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 05 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 06 | இரணைமடுச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 07 | உருத்திரபுரம் D10 மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 08 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 09 | அம்பலப்பெருமாள்சந்தி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 10 | வன்னேரி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 11 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |

**நிபந்தனைகள்:**

01. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.
02. கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்களாவர்.
03. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

*29.11.2011*

(சி/6450)(3,6,9)

*வைத்திலிங்கம் குகராசா( தவிசாளர்)*
*கரைச்சிப் பிரதேச சபை,கிளிநொச்சி.*

---

# 10 ஆவது பிறந்த நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த
**குருசாமி (ரூபன்) தமிழ்ப்பிரியா**
தம்பதியரின் செல்வப் புதல்வியும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியுமான
**செல்வி கஜானி** 2011 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகள் பெற்று சித்தி யடைந்ததையிட்டு பாராட்டுவதுடன் அவர் கல்வியிலும் வாழ்விலும் சிறந்து மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ அவரது இன்றைய பிறந்த நன்நாளில் வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி/6454)(3,6,9)

வாழ்த்துபவர்கள்:
*உற்றார், உறவினர்.*

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## இ.எயூயின் மசனட்



(கிராம அலுவலர், J/196) சுன்னாகம் நகர் தெற்கு) எம து சக நண்பன்
அவர்கள் கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய மட் ல் தெரிவு செய்யப்பட்டு அலரி மாளிகையில் ஜனாதிபதியால் பாராட்டி வாழ்த்தப்பட்டமையை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(11050)(2-6-9)

*வாழ்த்துவோர்:*
பே.மயூரதன், செ.சசிகலா, த.கிர்த்திகா.
சககிராம உத்தியோகத்த நண்பர்கள்.

வலிகாமம் தெற்கு பிரதேச
செயலகம், உடுவில்.

---



ஜெய் குருதேவ்

# ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அருளிய
# சஹஜ் சமாதி தியானம்

ஒவ்வொருவருக்கும் தனியான மந்திரம் மூலம் செய்யப்படும் எளிமையான அதிசக்தி வாய்ந்த தியானம்


**வடமராட்சியில் இன்று ஆரம்பம்**

இடம்:- மூத்த விநாயகர் கோயில் மண்டபம், கரவெட்டி.
திகதி:- 02.12.2011 - 04.12.2011
நேரம்:- மாலை 4மணி T.P: 0770474757

(10996) (2-6-9)

---

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **இராசையா விக்கினேஸ்வரன் (ரவி)**

தாயின் மடியில்:- 23.12.1970
ஆண்டவன் அடியில்: 27.11.2006

ஐந்து ஆண்டுகள் ஆனதப்பா
நிலவுலகில் ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் நிழல் தந்த பெருமரம்
நீங்கள் இன்று இல்லையே அண்ணா
நீரின்றிய தாவரம் போல் உம் பிரிவால்
தவிக்கின்றோம் எம் அப்பா

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(11000)(2-6-9)


கற்பகப் பிள்ளையார்
கோயிலடி, உடுவில் கிழக்கு.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
05 - 01 - 1956



மரணம்
14 - 12 - 2010

## அமரர் கதிரவேலு மோகனராசா

எமது குடும்பத்தின் மூத்த புதல்வனாய்
அவதரித்து நிழல் பரப்பி இன்று
விண்ணுலகில் சஞ்சரிக்கும்
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல எம் விநாயகப்
பெருமானைத் தொழுகின்றோம்.

பொன்னாலை வீதி,
மானிப்பாய் மேற்கு.

(11077)

என்றென்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னத்தைச்...

# ...சொல்ல?!

### பாழாகிப் போன காணி உறுதிகள்

"Justice Delayed is Justice Denied" தமிழில் சொல்வதானால், "தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்" இந்த உண்மை, எல்லா நாடுகளுக்கும், எல்லா வேளையும் பொருந்தும் உண்மை.

நீதி தாமதிக்கப்பட்டால், அதன் விளைவுகள் எண்ணில் அடங்காத விபரீதத்தை விளைக்கும்.

உலகில் இந்தியாவுக்கு அடுத்ததாக, தீர்ப்பு வழங்காத வழக்கேடுகள் தூசியேறி, பூச்சிகள் அரித்து, பக்கங்கள் பழுதடைந்து, பாவனைக்கே உரித்திழந்து, மூடை கட்டி நீதிமன்றுகளில் மூலைகளில் கிடக்கின்றன.

ஏதோ, இப்போது அவற்றைப் பொறுக்கி எடுத்துத் தூசி தட்டி எமது நீதிபதிகளின் கருணையினால், அரை உயிரோடு, ஆன்மா பிரியாமல், சேடம் இழுக்கும் நிலையில் பல வழக்கேடுகள் செத்தும் சாகாமலும் கிடக்கின்றன.

காணிப்பதிவகத்தில், பல்வேறு புத்தகத் தொகுதிகள் அமைதி காத்த இந்தியப் படையால் தலையணையாக உபயோகிக்கப்பட்டு, தூக்கி வீசப்பட்டு தூய்மையிழந்து பக்கங்கள் பற்பலவும் பறிபோய் பழாகிவிட்ட கதை பழைய கதையாகும்.

எத்தனை புத்தகங்களை எலி தின்றது, எத்தனை புத்தகங்கள் உருக்குலைந்து விட்டன, எத்தனை புத்தகங்கள் தொட்டாலே "கிறீம் கிறாக்கர்" விசுக்கோத்துப் போன்று நொருங்கி விடுகின்றன என்பது காணிப்பதிவகத்தார் ஒழிக்காது காட்டும் புத்தகங்கள் சொல்லும் வரலாறு. எத்தனை "வொல்யூம்" இடர்பட்டு நொந்து போய் மறைந்து விட்டன என்பதனை வெறும் பதிவுகளாகக் காணிப் பதிவகத்தில் பார்க்க முடிகிறது.

இப்புண்ணிய கைங்கரியத்தால், ஆண்டேன் அனுபவித்தேன், ஆளுமையால், அப்பன் ஆச்சி வாய்ச் சொல்லால், என்னை வந்தடைந்த இந்த ஆதனம்;- தேடினேன், தேடித் தேடி, தாய் உறுதியைக் கண்டறியேன், என்போரும் சத்தியக் கடுதாசியால் ஊரார் சொத்தை அபகரிக்கும் கும்பல்களும் இங்கு இருக்கத்தான் செய்கிறார்கள். மூலப் பிரதிகள், பதிவேடுகள் கொட்டும் மழையில் நிர்க்கதியாக வழிவகுத்தது அக்காலப் போராட்டம்.

பத்திரிகைகள் பதறிப்போய், ஒரு செய்தியை வெளியிட்டன. பதினேழு நீதிபதிகள் இல்லை. நீதிவான்கள் நியமிக்கப்பட உள்ளனராம். அவர்களில் ஓரிரண்டு பேர் தானாம் தமிழ் நீதிவான்கள். இத்தனைக்கும் ஒரு சட்டத்தரணியான, அனுபவமிக்க தமிழ் பேசும் இஸ்லாமியரே, சட்டத்துறைக்கு நியாயமான நீதிபதி என்பதும் நாடறிந்த உண்மையாகும்.



முன்பு மல்லாகம் நீதிமன்றம் சங்கானையில் சுற்றுலா நீதிமன்றம் Circuit Court நடத்தியதும் மயிலிட்டியில் ஒரு கிராமக்கோட்டைப் பொறுப்பேற்றுச் சுற்றுலா நீதிமன்றம் நடத்தியதும், ஊர்காவற்றுறை நீதிமன்று வேலணை வரை சென்று வந்ததும், யாழ்ப்பாணம் நீதிமன்றம் புத்தூர் வரை சென்று வந்ததும் இன்றைய இளைய தலை முறையும் ஏன் இளைய சட்டத்தரணி களுமே அறியாத புதினம்.

இப்படி நீதியை சுடச்சுட வழங்கிய காலம் போய், இன்று மூடை கட்டி வழக்குகளை மூலையில் போடும் காலம் வந்துள்ளது. இதன் தார்ப்பரியத்தை தமிழ்ச் சட்டத்தரணிகள் தங்கள் சங்கங்கள்மூலம் எடுத்துரைத்தால் பயன்கிடைக் கக்கூடும். இதே நிலைதான் கிழக்கிலும் வன்னியிலும். போதிய நீதிபதிகளை நியமித்தால் பல்லாயிரக்கணக்கான வழக்குகளுக்கு முடிவுகிட்டி விடும்.

அன்று அமரர்கள், ஜி.ஜி.பொன்னம்பலம் (Q.C), திரு. செல்வநாயகம் (Q.C), திரு.நடேசன் (Q.C), திரு.சுந்தரலிங்கம் போன்றவர்களும் திரு அமிர்தலிங்கம், திரு.கதிரவேற்பிள்ளை, திரு.நவரத்தினம் போன்றவர்களும், நாடாளுமன்றத்தையும் செனற் சபையையும் அலங்கரித்து நீதிகேட்ட நியாயவாதிகளாவார்கள். இன்று நாடாளுமன்றத்தில் நமது பற்றாக்குறை பிரதிபலிக்கப்படவில்லை.

நீதித்துறை எம்மவரைக் கைவிட்டு விடுமோ என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது. இன்னமும் காலம் கடந்து விடவில்லை.

பிரசண்டன் 

# வடக்கு, கிழக்கை கட்டியெழுப்புவோம் புலம்பெயர் தமிழர்களே வாருங்கள்!

### மீண்டும் அழைக்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,டிசெ.2

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கை இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடுகள் மூலம் மீளக்கட்டியெழுப்பவேண்டும் என்று மீண்டும் ஒரு தடவை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.



வெளிநாடுகளில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்தநிலையில் அவர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என்று ஜனாதிபதி கோரியுள்ளார்.

வடக்கு,கிழக்கில் மக்களுக்காகப் பல்வேறு அபிவிருத்தித் திட் டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. விளையாட்டுத்துறை உட்பட்ட அனைத்து துறைகளிலும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



பொறியியல் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டடத்துக்கு முன்னால் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் ஊழியர்களை பலவந்தமாக ஓய்வுபெறச் செய்யும் அரசின் நடவடிக்கையைக் கண்டித்தே நடைபெற்றது.

# பாதுகாப்புச் செலவைக் குறைக்கக் கோருவோர் பயங்கரவாதத்துக்கு ஆதரவானவர்களே!

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் பஸில்

கொழும்பு,டிசெ.2

நாடு ஒன்று என்று ஏற்றுக் கொண்டால் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட வேண்டும். அதனை தவிர்க்கமுடியாது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்போரே பாதுகாப்புச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும் என்று கோரி வருகின்றனர்.



பாதுகாப்புச் செலவுகளை ஒரு முதலீடாகவே கருதப்படுகின்றது. உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது - என்றார். (ச)

# வழங்கிய காணியையே பறித்துவிட்டது அரசு

### சாடுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு,டிசெ.2

போரில் வெற்றியீட்டியமைக்காக அரசு சரத்பொன்சேகாவுக்கு 25 பேர்ச்சஸ் காணியை வழங்கியிருந்ததாகவும், இந்தக் காணியை அரசு மீளப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறைச்சாலைக்கு திரும்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் காணியை சுற்றி பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். எனவே காணிக்குள் யாரும் பிரவேசிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியினால்கூந்த செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் வரவேற்கப்பட வேண்டியது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# ஆணைக்குழுவின் தலைவர் இந்திராணி சுகததாஸ ராஜினாமா

கொழும்பு,டிசெ.2

இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் இந்திராணி சுகததாஸ பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தனது ராஜினாமாக் கடிதத்தை திறைசேரிச் செயலாளரிடம் நேற்று வியாழக்கிழமை காலை கையளித்துள்ளார்.

தான் ராஜினாமாக் கடிதத்தை கையளித்தபோதிலும், இதுவரை தமக்கு திறைசேரி செயலாளரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் அடுத்த தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழில் அதிபருமான திலக் கருணாரட்ண நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# லஞ்சம் வாங்கும் நாடுகளில் இலங்கை 86 ஆவது இடத்தில்

குறைந்த அளவு லஞ்சம் வாங்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை 86 ஆவது இடத்தில் உள்ளது.

ஊழல் கண்காணிப்பு சர்வ தேச அமையம் வெளியிட்டுள்ள குறைந்த அளவு லஞ்சம் வாங்கும் நாடுகள் குறித்த 2011 ஆம் ஆண்டு அறிக்கையிலேயே இலங்கை இவ்வாறு முன்னேற்றம் கண்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு அறிக்கையில் 91ஆவது இடத்தைப் பிடித்த இலங்கை 2011ஆம் ஆண்டு அறிக்கையில் மூன்று இடங்கள் முன்னோக்கி 86 ஆவது இடத்தைப்பிடித்துள்ளது.

ஊழல் கண்காணிப்பு அமையம் வெளியிட்ட அறிக்கையின் படி இலங்கை 3.3 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

178 நாடுகளை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்ட இந்தக்கணிப்பீட்டில் இலங்கையுடன் 86 ஆவது இடத்தை ஜமேக்கா, பனாமா, பல்கேரியா மற்றும் சேர்பியா ஆகிய நாடுகள் பகிர்ந்து கொண்டுள்ளன.

இந்த அறிக்கையில் இந்தியா 95 ஆவது இடத்திலும் சீனா 75 ஆவது இடத்திலும் உள்ளதுடன் முதல் இடத்தை நியூசிலாந்து பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிடர் போற்றும்
கொடை வள்ளல்
"சமூக ஜோதி"

உயர்திரு.
**வாமதேவா தியாகேந்திரன்**
அவர்களின்

# மணி விழா வாழ்த்து

**02.12.2011**

மார்கழித் திங்கள் மதி கொஞ்சும் நாளில் வானத்து மீன்கள் வண்ண ஒளி வீச வடகிழக்கின் விடி வெள்ளியென வாமதேவா சொர்ணாம்பிகை மடிதனில் ஆண்டு ஐம்பத்தி ஒன்று திகதியிரண்டில் உதித்தனன் தியாகி என்னும் அன்பு நாமம் கொண்ட தியாகேந்திரன். நானிலம் போற்றும் நாவலர் உதித்த நல்லூர்ப்பதியாம் அத்தியடியில் பிறந்ததால் பெற்றது பெருமை அவ்வூரும். அறக்கொடையால் இன்று அதனாலும் மணிவிழா நாள் திருவிழாக்காண ஊர் கூடி நிற்க நாணிக் கதிரவன் தன் ஒளிக்கரம் ஒழித்தான். கார் முகிலிடையில் அறிவும் உயர் அற நெறியாற்றலும் வளர்த்த கல்லூரியாம் யாழ் பரியோவானும் மத்தியதாயும் ஆகி நிற்க ஆண்டு 81ல் இணைந்த வாழ்வு உயர்ந்த வாழ்வாகிட, சந்ததி பெற்று தொழிலிடை ஏகினர் சுவிஸ்சில் ஆண்டு 84ல் தளராத அறச்சிந்தனை விடாமுயற்சியாய் உயர்ந்திட, உயர்ந்தது செல்வம் பாலெனப் பொங்கிட காராம் பசுவானார் எம் தியாகி உலக மாந்தர் பலருக்கு அதில் ஒன்றாய் ஆனது இவ்விடம். ஞான வைரவன் துணையால் வைத்தியராய் வளர்ந்த புதல்விகளிருவரும் வணிகப் பட்டதாரி மகனும் இம்மணிவிழா நாளில் ஞாலம் புகழும் வள்ளலாய் வாழ்த்துப் பெறும் அப்பாவின் மக்கள் என்பதனாற் பெருமை பெற்றோம் என அகமகிழ தாயும் தன் பங்கிற்காய் அகமகிழ்கின்றாள். மெழுகாய் உருகி ஒளியாய்த் திகழும் தியாக தீப ஒளியால் ஒளிரும் முதியோர், இளையோர், மாணவர், விதவைகள், மாற்று வலுவோர் ஆதரவற்றோர் இன, மத, குலபேதம் கடந்து நாடு கடந்து எண் திசையிருந்து வரும் வாழ்த்தொலி வள மூட்டும் தியாகியின் வாழ்வில் பல்லாண்டுகள் வாழிய வாழிய வெனவே! மகரஜோதி எங்கள் தியாகி "சமூகஜோதி" என்னும் பட்டம் பெற்ற நாளும் என்றும் திருநாள் எம்மவர்க்கு.

மணி விழா நாயகனால் கடந்த 20 ஆண்டுகளில் தாய் நாட்டினதும், பிறநாட்டினதும் நலிவுற்றவர்களுக்கும், கல்வி கற்றலுக்கான உதவி தேவைப்படுவோருக்கும் ஆற்றிய பேருதவிகள் நினைவு கொள்ளப்பட வேண்டியவை. அந்த வகையில்

## 1. கல்வி உதவித் திட்டம்

- **முன்பள்ளிக்கான உதவி**
  பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளி பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு உதவியாக தலா 500/- வழங்கப்படுகின்றது.
- **பாடசாலை மாணவர்களுக்கான உதவி**
  மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் தலா 250/- வழங்கப்படுகின்றது.
- **போரினால் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான உதவி**
  போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வாழும் மிகவும் வறுமையான குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு உதவியாக மாதாந்தம் தலா 250/- வழங்கப்படுகின்றது.
- **பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி**
  பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வி தேவைக்காக மாதாந்தம் தலா 750/- வழங்கப்படுகின்றது.

## 2. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான உதவித் திட்டம்

- கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்ட தொடங்கும் வரை அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்குகேற்ப மாதாந்தம் தலா 200-400/- வரை வழங்கப்படுகின்றது.
- பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

## 3. மருத்துவ உதவித்திட்டம்

- **புற்று நோயாளருக்கான உதவி**
  புற்று நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா 500/- வழங்கப்படுகின்றது.
- **முதியவர்களுக்கான மருத்துவ உதவி**
  பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர், சமூகநலத்துறை திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக்கஞ்சியும், போக்குவரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றது.

## 4. ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவித்திட்டம்

- ஆதரவற்று வறுமை கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா 500/- வழங்கப்படுகின்றது.
- சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலகத்தினால் கொண்டாடப்படும் முதியோர் தின விழாவிற்கு அன்பளிப்பு பொருள்கள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றன.

## 5. சிறுவர் இல்லம்

- எம்மால் நடாத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லத்தில் ஆதரவற்ற பாடசாலை செல்லும் 20 பெண் பிள்ளைகள் நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். இவ்வுதவி பெறும் பயனாளிகள் யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, காரைநகர், வேலணை, மருதங்கேணி போன்ற பிரதேச செயலக எல்லைக்குட்பட்டவர்களாக அமைந்துள்ளதுடன் மேலும் இதில் விசேடமாக முல்லைத்தீவு மாவட்டமும் தலவாக்கொல்லை, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளும் உதவி பெறுவோர் பகுதிக்குள் அடங்குகின்றது. இங்கு சிறப்பு என்னவெனில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பயனாளிகளாக உள்ளமை இன,மத,குல பேதமற்ற செயற்பாட்டாளர் மணிவிழா நாயகன் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதி வளங்கள்

- ***எமது ஸ்தாபகர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நன்கொடை***
- ***ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் இருந்து கிடைக்கும் வருமானம்***
- ***ரிசிரி விருந்தினர் விடுதி மற்றும் சொர்ணாம்பிகை மண்டபம்***

எமது உதவித்திட்டங்களுக்கான நிதியை பெறும் வழியாக ஆரம்பிக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் மூலம் கிட்டத்தட்ட 80 பேர் வரையிலான இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

**கடந்த 20 வருடகாலத்தின் ஆரம்பம் தொடங்கி இன்று வரை மேற்காட்டப்பட்டவற்றுக்கு மேலதிகமாகவும் தியாகி அவர்களால் பல்வேறு வாழ்வாதார வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை நினைவு கூரப்பட வேண்டியவை ஒன்றாகும்.**

- கை, கால் வழங்காதவர்களின் விசேட தேவையை இனங்கண்டு உதவி செய்யப்பட்டுள்ளது.
- வலுவிழந்தவர்களுக்கு வருமானம் தரும் செயற்பாட்டிற்கான உதவிகள்
- தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளின் கல்வி, சுகாதாரத்திற்கு உதவுதல்
- இந்தியாவின் தமிழ் நாட்டின் ஒரு தொகை ஏழைச் சிறார்களுக்கும், ஆந்திராவின் ஒரு தொகை சிறார்களுக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது.
- பல்வேறு நூலகங்களுக்கு பெருமளவு புத்தகங்கள் கொள்வனவு செய்து கையளித்தமை
- யாழ்.பரியோவான் கல்லூரியின் ரெனிஸ் பந்து விளையாட்டு மைதான விருத்திக்கு 100,000/- வழங்கியமை
- கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் நலிவுற்ற மக்களின் சுயதொழில் விருத்திக்காக ரூபா 10 இலட்சம் வழங்கி உதவியமை
- சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கச்சாய் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ரூபா 10,000/- வழங்கியமை.
- 2004ம் ஆண்டு நலிவுற்ற மக்களின் சுயதொழில் கடனாக ரூபா 17 இலட்சம் வழங்கியமை
- மலையகத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கியமை
- 2003ல் தரம் 5இல் புலமைப்பரிசில் சித்தி பெற்ற 125 மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 250 வழங்கியமை
- மகரகம புற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளில் தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்கு மாதாந்தம் 400 ரூபா வழங்கியமை
- பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கான இலவச ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டது.
- மிகப் பின்தங்கிய கிராமங்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன
- தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரோக்கியம் குறைந்த மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது.
- பின் தங்கிய கிராமங்களுக்கு சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டது.
- புற்று நோய், இதயமாற்று சிகிச்கை, சிறுநீரக மாற்றுச் சிகிச்சையாளர்களுக்கு பாதை மூடப்பட்டிருந்த காலத்தில் போக்குவரத்து வசதிகள்
- வறிய கிராம மக்களுக்கு மலசலகூடங்கள் கட்ட உதவி வழங்கப்பட்டது
- தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு இலவச தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- வன்னி மாணவர்களுக்கு பிரபல ஆசிரியர்கள் மூலம் இலவச வகுப்புக்கள் நடத்தப்பட்டது.
- யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளர் தங்குவதற்கான சிறு கொட்டகை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- கைதடி முதியோர் இல்லத்திற்கு முதியோருக்கான பொழுது போக்கு இருக்கைகள் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள், கழுத்துப்பட்டிகள் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கான இசைக்கருவிகள் வழங்கப்பட்டது.
- இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பாடசாலை மாணவர்களுக்கான தற்காலிக கொட்டகை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டமை.
- சுயதொழிலுக்கான நுன்கடன் திட்டம், வாழ்வாதார உதவிகளாக ஆடு, மாடு, தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.
- சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.
- வசதி குறைந்த குடும்பங்களில் நடைபெறும் அந்திகைகால கிரிகைகளுக்கான உதவி வழங்கப்பட்டது
- வசதி குறைந்த பெண்களுக்கு திருமணத்திற்கான நிதி உதவி வழங்கப்பட்டது.
- மீளக்குடியமர்ந்த மக்களுக்கு காணிகளினை துப்பரவு செய்வதற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.
- நல்லூர் தேர் திருவிழாவினை முன்னிட்டு பேச்சுப் போட்டி நடாத்தப்படுகின்றது.
- பெண்களுக்கான அழகுக்கலைப்பயிற்சி அளிக்கப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டன.
- 2005ம் ஆண்டு குருநாகல பிரதேசத்தில் சமாதான நிகழ்ச்சி திட்டத்தில் மூவின மக்களுக்குமான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

**தன்னால் உழைக்கப்படும் பணத்தின் பெரும் பகுதி ஏழைகளின் நலத்திற்காகவே செலவு செய்து வரும் மணி விழா நாயகன் தியாகி அவர்கள் பணி மேலும் வளர வேண்டும் என்றும் அவர் நோய்கள் இன்றி ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும், தம் குடும்ப உறுப்பினர்களுடன் நீடூழி வாழ இந்நாளில் இறைவனின் ஆசியை வேண்டி, வாழ்த்துகின்றேன்.**

**சி. மாணிக்கராசா**
*கோட்டக்கல்விப்பணிப்பாளர், நல்லூர்.*

(சி-6449)(1,6,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை தமிழனுக்கு வாக்களிக்கக் கேட்பது ஒருபோதும் இனவாதமாகாது; அது உரிமை

தேர்தலில் போட்டியிடும் தமிழர் ஒருவர் தனது மக்களைப் பார்த்து ''தமிழர்கள் எல்லோரும் எனக்கு வாக்களிக்க வேண்டும்'' என்று வாக்கு கேட்கும் போது அவரை இனவாதி என்று பிரிவுக்குள் அடக்க முடியாது. வாக்குகேட்பது அவருடைய அடிப்படை உரிமை. இன்று நாட்டில் அடிப்படை மனித உரிமை முற்றாக மறுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் ஜனாதிபதியின் செயலகம், பிரதமர் அலுவலகம், நீதிமன்றம், தேர்தல் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் உட்பட 22 திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றது. அதன்போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

கடந்த ஏழு தினங்களாக ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரை தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான பொது விவாதம் நடைபெற்றது.

நேற்று முதலாம் திகதி முதல் ஒவ்வொரு அமைச்சுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது. 21 ஆம் திகதி வரை இது தொடரும்.

நாடாளுமன்றில் குழுநிலையில் விவாதித்து நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்படும் அமைச்சுக்களுக்கு மேலதிகமாக 21 அமைச்சுக்கள் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு மட்டத்தில் பரிசீலனை செய்யவுள்ளது. அமைச்சுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும் அவற்றைத் தனித்தனியாக விவாதித்து அங்கீகரிக்க காலம் போதாது என்பதாலும் ஆளும் கட்சியும் - எதிர்க்கட்சிகளும் இணைந்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை தெரிவுக் குழுமட்டத்தில் பரிசீலனை செய்வதெனத் தீர்மானித்தன.

**வசை பாடல்களும் சேறு பூசுதலும்**

வழமையாகக் குழுநிலை விவாதத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் குறை நிறைகள் தொடர்பாகவும் தமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள், ஏற்பட்டுள்ள பாதிப்புகள், அதற்கான நிவாரணம் தொடர்பாகவும் விவாதிக்கப்படும்.

தமது பிரதேச, பிரச்சினைகளை, அமைச்சர்களதும், திணைக்களத் தலைவர்களதும் கவனத்துக்குக் கொண்டு வருவதே குழுநிலை விவாதத்தின் நோக்கம். ஆனால், நேற்று ஆரம்பித்த குழுநிலை விவாதத்தின் போது கூச்சல் குழப்பங்கள் வசைபாடல்கள் மற்றும் ஒருவருக்கு ஒருவர் சேறு பூசுதல் என்று அமைதியற்று இருந்தது. இடைக்கிடை ஒரு சிலர் பயனுள்ள கருத்துக்களையும் வெளியிட்டனர்.

**சர்ச்சையில் முடிந்த ரணிலின் உரை**

நேற்றுமுன்தினம் சபாநாயகர் வழங்கிய தீர்ப்பின் படி எதிர்க்கட்சித் தலைவர் சில திருத்தங்களுடன் இன்று உரையாற்ற அனுமதி இருந்தது. எனினும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப் பினார். அதாவது தனது உரையில் திருத்தப்பட்ட பிரதி தனக்குக் கிடைக்கவில்லை என்றும் பதிலாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் கை எழுத்துடன் ஒரு கடிதம் கிடைத்துள்ளது என்றும் அதில் சரத் பொன்சேகா தொடர்பான விடயங்கள் மட்டுமன்றி மேலும் பல முக்கியமான விடயங்களும் வெட்டப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

''சபாநாயகரின் கையொப்பம் இல்லாத இடத்தில் எப்படி அந்தத் திருத்தப்பட்ட பிரதியை ஏற்றுக்கொள்ளமுடியும்'' என்று சர்ச்சை எழுப்பினார் ரணில் விக்கிரமசிங்க.

**சபாநாயகரின் தீர்ப்புக்கு சவால் விடமுடியாது**

ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்குப் பதிலளித்த சபாநாயகர்,''இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே என்னால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனது தீர்ப்புக்கு மாற்று கிடையாது. நாடாளுமன்ற நடைமுறையின் படி சபாநாயகரின் அறிவிப்புகள் அனைத்தும் செயலாளர் நாயகத்தின் மூலமாகவே வழங்கப்படும் இதுதான் வழமை என்றார்.

எனது உரையில் திருத்தம் செய்யவும் முற்றாக தடை செய்யவும் கூடிய உரிமையும், அதிகாரமும் சபாநாயகருக்கு உண்டு. என்னை நீங்கள் பேச வேண்டாம் என்றால் நான் பேசாமல் நிறுத்திவிடுவேன் ஆனால் செயலாளர் நாயகத்துக்கு அந்த அதிகாரம் இல்லை'' என்று வாதிட்டார் எதிர்க்கட்சித் தலைவர்.

அந்த சர்ச்சைக்குப் பின் விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார் கரு ஜயசூரிய.

**அபிவிருத்தி எல்லாம் ஏட்டில் மட்டுமே**

''ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட வரவு-செலவுத்திட்டம் என்று கூறுகின்றனர். ஆனால் அபிவிருத்தி எல்லாம் எழுத்தில் மட்டும் தான் காணப்படுகின்றது. அதனைச் செயல்படுத்துவதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. நாட்டு மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. வறுமையை ஒழிப்பதற்கு திட்டங்கள் ஏதும் இல்லாத நிலையில் ஜனாதிபதிக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரவேற்கத்தக்கது அல்ல'' என்று கரு ஜயசூரிய கூறினார்.

**அதிவிரைவில் பொலிஸ் ஆணைக்குழு**

எதிர்கட்சியினரின் கூற்றுக்களை மறுத்தார் சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா ''எல்லோரும் கூறுகின்றார்கள் ஜனாதிபதிக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக. ஆனால், அது தவறு ஜனாதிபதியின் கீழ் இயங்கும் 22 திணைக்களங்களுக்கே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் விமர்சனம் செய்வது போல் பொலிஸ் ஆணைக்குழுவை அரசுகைவிட்டுவிடவில்லை. விரைவில் பொலிஸ் ஆணைக்குழுவும் ஏற்படுத்தப்படும். அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என்று அவர் தெரிவித்தார்.




**மனித உரிமைகள் என்ற பேச்சைக் கேட்டாலே அலறி ஓடும் அரசு**

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மனித உரிமைகள் தொடர்பான ஒரு விடயத்தை சபையில் கிளறி விட்டார். ''ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை சீரழிக்கும் தீர்மானத்தில் இலங்கையின் சார்பில் கை எழுத்திட மறுத்தது ஏன் மனித உரிமைகள் என்ற பெயரைக் கேட்டவுடனேயே ஏன் இப்படி அலறித்துடிக்கின்றீர்கள்'' என்றார் ரணில்.

**நாம் எதிர்க்கவில்லை பிற்போடக் கோரினோம்**

சபாநாயகரே... நமது எதிர்க்கட்சித் தலைவர் அடி நுனி தெரியாமல் குற்றம் சுமத்துகின்றார். பொதுநலவாய மாநாட்டில் நாம் எதிர்க்கவில்லை. அதை விட முக்கியமாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றே கேட்டோம். அதுவரை மனித உரிமைகள் ஆணையாளருக்கான பிரேரணையைப் பிற்போட வேண்டும் என்றுதான் வலியுறுத்தினோம்'' என சாதுரியமாக பதிலளித்தார் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்.

**சந்திரிக்காவையும்-மஹிந்த ராஜபக்ஷவையும் நாயே பேயே என்றவர் இன்று நாயாக வாலாட்டுகின்றார்**

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஹரின் பெர்னான்டோ தமது பழைய சகாக்களைப் பற்றி விமர்சனம் செய்தார். ''நேற்று இந்தச் சபையில் பேசிய எனது முன்னாள் நண்பர் ஒருவர் இந்தச் சபையில் ஜனாதிபதியின் அதி விசுவாசி போன்று பேசினார். ஆனால் அவர் முன்பு எமது பக்கம் இருந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவையும் இன்றைய ஜனாதிபதி ராஜபக்ஷவையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் திட்டித் தீர்த்தார். ஆனால் இப்போது ஏதோ தான் ஜனாதிபதிக்கு மிகவும் விசுவாசமானவர் போல் துதி பாடி வாலாட்டிக் கொண்டிருக்கின்றார்'' - என்றார்.

**ஐந்து லட்சம் கொடுக்கும் போது பல்லை இளித்து வாழ்த்தியவர்**

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட அமைச்சர் லக்ஷ்மன் செனிவிரத்ன, '' நான் உண்மையைத் தான் கூறினேன்'' என்றார். '' நான் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. நீங்கள் தொப்பியை மாட்டிக் கொண்டீர்கள். இப்போது எனது பெற்றோர் உங்களுக்கு வேண்டாதவர்களாக தெரிகின்றனர். தேர்தல் காலத்தில் எனது தந்தை வந்து 5 லட்ச ரூபாவை தூக்கி கொடுத்த போது பல்லை இளித்துக் கொண்டு கை நீட்டி வாங்கியதை நான் இன்னும் மறந்துவிடவில்லை'' என்று பதிலடி கொடுத்தார் ஹரின் பெர்னாண்டோ.

**நீதிமன்றங்களும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவும் அரசுடைமை**

எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆட்சி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் எல்லாம் போக இப்போது நீதிமன்றங்களும் நீதித்துறையும் அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டினார்.

''இன்று அரசு தமக்கு வேண்டியவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளது. வேண்டாதவர்கள் மீது வழக்குகளை சோடித்து வருகின்றது. முன்பு பத்து மில்லியன் ரூபா மோசடி செய்தார் என்று அமைச்சர் காதர் சிறையில் அடைக்கப்பட்டார். அரசுடன் ஒட்டிக் கொண்டதும் வழக்கு வாபஸ் பெறப்பட்டது'' என்று கூறினார் தயாசிறி ஜயசேகர.

**சாரத்தை கட்டிக்கொண்டு தலைகீழாக நிற்கக் கூடாது**

தயாசிறியின் இந்த கூற்று அமைச்சர் டிலான் பெரேராவுக்குக் கோபத்தைக் கிளப்பிவிட்டது.

''ஐயா! உறுப்பினர் சாரத்தை கட்டிக்கொண்டு தலைகீழாக நிற்கின்றார். அவரைப் பற்றி அவரே கூறிக்கொள்கின்றார். சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை பற்றி இவர் பேசினார். அவர்களுடைய காலத்தில் நடந்த விடயங்களைக் கூறினால் பெரும் வெட்கம். பல பெண்களை மானபங்கப்படுத்தி பாலியல் இம்சைகளுக்கும் வல்லுறவுக்கும் உட்படுத்திய கோனவல சுனிலுக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டம் பெற்றுக்கொடுத்தார். பல சட்ட விரோதச் செயல்களைச் செய்த சொத்தி உப்பாலிக்கு சுதந்திரமாக நடமாடும் உரிமையை வழங்கினார் அன்று பிரதமராக இந்த ரணில் விக்கிரமசிங்க. இதை நாடே அறியும்'' எனப் பதிலடி கொடுத்தார் டிலான் பெரேரா.

இப்படி ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் இடையில் விவாதம் தொடர்ந்தது. பிரதமர் டி.எம்.ஜயரத்ன பதில் அளித்தார். ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப் பட்டன. (உ-02)

# அபிவிருத்தி வேலைகள் மீண்டும் ஆரம்பம்

குருநாகல்,டிசெ.2

குருநாகல் மாவட்டத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் பொருளாதார அமைச்சின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாவட்டச் செயலாளா ஏ. ஏ. குசும் ஹெட்டியே தெரிவித்தார்.

அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் இந்த வேலைத் திட்டங்கள் முடிவும் தறுவாயில் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி வேலைத் திட்டத்ங்களுக்காக 9 கோடி 22 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்டம் முழுவதிலும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளனஎன அவர் மேலும் தெரிவித்தார்.

# அனைத்து இலங்கையர்களுக்கும் கணினி வழங்குவதற்கான புதிய திட்டம் அறிமுகம்

கொழும்பு, டிசெ.2

இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்கும் கணனிகள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் திட்டம் ஒன்று அமுல்செய் யப்பட்டுள்ளது.

இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. இதன் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு 2341 ரூபாவை மாத்திரம் செலுத்தி இலங்கையர் எவரும் கணனிகளைக் கொள்வனவு செய்யலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் 8 மணித்தியாலங்களில் ஒருவருக்கு கணனிச் சொந்தக்காரராக முடியும்.

எச்பிரகத்தின் 5 மடிக்கணனிகள் இந்த திட்டத்தின் கீழ் இலங்கையர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபன தலைவர் பிரதீப் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கேற்ற நபரைத் தேடித் தரும் தொலைபேசி மென்பொருள்

ஒரே ஈடுபாடு மிக்க இன்னொருவரைத் தேடிக்கொள்ள விஞ்ஞானிகள் புதிய மென்பொருள் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். ஓர் உணவு விடுதிக்குச் செல்லும்போது உங்களது தொலைபேசிக்கு அழைப்பு வந்து ஒத்த ஈடுபாட்டுடன் உள்ள ஒருவர் எங்கு இருப்பார் என்று தெரிவித்தால் எப்படியிருக்கும்! இது கற்பனையல்ல. உங்களுக்குப் பொருத்தமானவர்கள் எங்கு கூடுவார்கள் என்பதைத் தெரிவிக்கும் தொலைபேசிகள் விரைவில் அனைவரின் கையிலும் கிடைக்கும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இது இந்து சாஸ்திரவியலின் சமஸ்கிருதச் சொல்லான ஜோதிடம் என்பதிலிருந்து உருவான Jyotish என்று அழைக்கப்படுகின்றது. இந்த மென்பொருள் பத்து மீற்றர்களுக்குள் உள்ள wi&fi மற்றும் Bluetooth தொடர்புகளைத் தடந்தொடர்வதினால் ஒருவரின் நகர்வுகளை வரைபடமாக்குகின்றது.



இறுதியில் இது அவர்களது அடையாளத்தையும் சமூகப் பக்கங்களின் விவரங்களையும் கொண்டு ஒருவருக்குப் பொருத்தமான நபரை அல்லது தொழில் உதவியாளரைத் தெரிவு செய்ய உதவும் என்கின்றனர். இந்த மென்பொருள் போயிங் விஞ்ஞானிகளால் அவர்களது பெரிய விமானத் தொழிற்சாலைகளில்வேலைசெய்பவர்களின் நகர்வுகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இதில் 79 பேரில் அவர்களது விருப்பத்திற்கிணங்க இந்தப் பரிசோதனையை அன்றொயிட் தொலைபேசிகளில் செய்துபார்த்தனர். இது ஒருவரது Facebook நகர்வுகளைக் கண்டுபிடித்து ஏனையவர்களிடம் கூறியது.


ஆனால் இதில் தனிப்பட்ட இரகசியங்கள் எதற்கும் பாதிப்பு வராது என்பதை பிரபல பல்கலைக்கழக கணினி விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

# வெப் கமராவை கண்காணிப்பு கமெராவாக மாற்றுவதற்கு

இணையத்தளம் வாயிலாக பல அதிசயங்கள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் இன்று வெப் கமராவைக் கண்காணிப்புக் கமராவாக மாற்றலாம். புதிதாக எந்தக் கருவியும் வாங்க வேண்டாம், எந்த மென்பொருளும் தேவையில்லை எளிதாக சில நிமிடங்களில் எம்மிடம் இருக்கும் வெப் கமராவைக் கண்காணிப்புக் கமராவாக மாற்றலாம். எமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. இந்தத்தளத்துக்குச் சென்று புதிதாக ஒரு பயனாளர் கணக்கு உருவாக்கிக் கொண்டு உள் நுழையலாம். அடுத்து முகப்புத் திரையில் இருக்கும் Protect now என்று இருக்கும் பொத்தானை சொடுக்கி ஒரே நிமிடத்தில் எமது வெப் கமராவைக் கண்காணிப்புக் கமராவாக மாற்றலாம்,

ஒரே மாதிரியாக படம் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும் கமராவில் ஏதாவது மாற்றம்(detects motion) நிகழ்ந்தால் உடனடியாக எமக்கு மின்னஞ்சல் மூலம் அல்லது குறுஞ்செய்தி மூலம் நினைவூட்டும். அந்த மாற்றமும் பதிவு செய்யப்பட்டு இருக்கும், நாம் எப்போது வேண்டுமானாலும் அதை திரும்பப் பார்த்துக் கொள்ளும் வசதியும் இருக்கிறது. ஆள் இல்லாத இடம் அல்லது முக்கியமான லாக்கர் இருக்கும் இடங்களில் இது போன்ற வெப் கமராவை கண்காணிப்புக் கமராவை மாற்றினால் பெருமளவு குற்றம் குறையும். இணையத்தள முகவரி http://cammster.com/

# உடல் அசைவால் செயற்படும் அதிசய தொழில்நுட்பம்



*மனிதர்களின் அசைவு, உணர்ச்சி மற்றும் முக பாவத்தை முப்பரிமாணத்தில் அறிந்து அதற்கேற்ப கணினி விளையாட்டுக்களை செயற்படுத்தும் தொழில்நுட்பத்தை மைக்ரோசாப்ட் தனது எக்ஸ்பாக்ஸின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்தது. இதற்கு அமோக வரவேற்பு இருந்து வரும் நிலையில் தற்போது இந்தத் தொழில்நுட்பத்தை எதற்கெல்லாம் உபயோகிக்கலாம் என்ற புதிய வீடியோ விளம்பரத்தை வெளியிட்டு மேலும் ஆச்சரிப்படுத்தியிருக்கிறது அந்த நிறுவனம்.*


# கைதிகளை கண்காணிக்கும் புதிய வகை ரோபோக்கள் தயாரிப்பு

கைதிகளைக் கண்காணிக்க விஞ்ஞானிகளின் உதவியுடன் ரோபோக்கள் ஒன்றை தென்கொரியாவின் பொஹாங் சிறை நிர்வாகம் உருவாக்கியுள்ளது.

அதிநவீன கமராக்கள், சென்சார்கள் 4 சக்கரங்களுடன் இந்த வகை ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கைதிகளின் வழக்கமான நடவடிக்கைகள் மென்பொருள் உதவியுடன் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதை மீறி எந்தச் செயலிலாவது கைதிகள் ஈடுபட்டால் ரோபோ உடனே அலாரம் அடிக்கும்.

இதன்மூலம் கைதிகள் தப்பிப்பது, தற்கொலை முயற்சி, மற்றவர்களுடன் சண்டையில் ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகள் குறைவடையும் என்கின்றனர் அதிகாரிகள்.



# ஒக்ஸிஜனுக்கு வயது 2.48 பில்லியன் ஆண்டுகள்

ஆய்வில் தகவல்

ஒட்சிசனுக்கு வயது 2.48 பில்லியன் ஆண்டுகள் இருக்கலாம் என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

ஆஸ்திரேலியாவின் பில்பாரா பாறைகளில் இருந்து எடுக்கப்பட்ட மூலக்கூறுகளின் துணையுடன், 2.48 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முதல் முதலில் உருவான ஒட்சிசனின் தோற்றத்தைக் கண்டறிந்ததாக சர்வதேச ஆய்வுக்குழு ஒன்று விவரிக்கிறது.

பேராசிரியர் மார்க் பார்லே தலைமையிலான குழு ஒன்று இதுதொடர்பான ஆய்வை மேற்கொண்டு அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது. இந்த விவரம் நேச்சர் என்ற அறிவியல் இதழில் வெளிவந்துள்ளது.

பூமியில் முதல் முதலில் ஒட்சிசன் கடந்த 2.48 பில்லியன் ஆண்டுகளுக்கும், 2.32 பில்லியன் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுவதாக இந்தப் புவியியல் ஆய்வு தெரிவிக்கிறது.

# உங்கள் பகுதியில் நிகழும் நிலநடுக்கம் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்வதற்கு

அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் உலகம் முழுவதும் ஏற்படும் நிலநடுக்கங்களைக் கண்காணித்து வருகின்றது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மைய இணையத்தளம் சில நிமிடங்களில் உங்கள் பகுதிகளில் ஏற்படும் நிலநடுக்கங்கள் பற்றிய எச்சரிக்கை தகவல்களைத் தருகின்றது.

https://sslearthquake.usgs.gov/ens/ என்ற முகவரிக்குச் சென்று Subsribe செய்த பின்னர் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு வந்து சேரும்.

அந்த மின்னஞ்சலில் உள்ள இணைப்பில் சென்று தளத்தில் தெரியும் கூகுளின் வரைபடத்தில் நீங்கள் வசிக்கும் பகுதியை வரைந்த பின்னர் சேமித்து விடவும். இனிமேல் நிலநடுக்க எச்சரிக்கை உங்கள் மின்னஞ்சலில் வந்து சேரும்.

மேலும் அமெரிக்காவில் ஏற்படும் நிலநடுக்கம் பற்றிய தகவல்கள் 2 - 8 நிமிடங்களில் கிடைத்துவிடும் என்றும், ஆனால் ஏனைய பகுதிகளுக்கானவை 20 நிமிடங்கள் வரை ஆகலாம் என்றும் தெரிவிக்கின்றது இந்த தளம்.

# இன்டர்நெற் எக்ஸ்புளோர் 10 இன் புத்தம் புதிய வசதிகள்

மைக்ரோசொப்ட் நிறுவனம் இதுவரை தன் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் உலாவியில் இல்லாத இரண்டு புதிய வசதிகளை இதன் பதிப்பு 10 இல் அறிமுகப்படுத்துகிறது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10 இல், Spell Checker and Auto Correct வசதிகளை இணைத்துள்ளது.

இது குறித்து மைக்ரோசொப்ட் நிறுவனம் தன் இணையத்தள வலைமனையில் விண்டோஸ் 8 ஒபரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும் அப்ளிகேஷன் புரோ கிராம்கள் அனைத்திலும் இன்டநெட் எக்ஸ்புளோரர் 10 உட்பட இந்த இரண்டு வசதிகளையும் தந்துள்ளதாக அறிவித்துள்ளது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9ல் Spell Checker வசதி இல்லை. பல மைக்ரோசொப்ட் வாடிக்கையாளர்கள் இதனாலேயே இந்த உலாவியை பயன்படுத்துவதில்லை என்று தெரிவித்திருந்தனர். எனவே தான் மைக்ரோசொப்ட் நிறுவனம் இதனைத் தன் புதிய புரோகிராம்களில் தந்துள்ளது.

Spell CheckerUP,hß, Auto Correct வசதியும் தரப்படுகிறது. இதன் மூலம் வேர்ட் தொகுப்பில் நாம் எந்த சொற்களின் எழுத்துப்பிழைகள் எல்லாம் தானாக திருத்தப்படுகின்றனவோ, அவை எல்லாம் இன்டர்நெட் எக்ஸ்ப லோரர் பதிப்பு 10இல் தானாகவே திருத்தி அமைக்கப்படும்.

இந்த புதிய வசதிகளுடன் கூடிய இன்டர்நெட் எக்ஸ்புளோரர் எப்போது வெளியிடப்படும் என்று மைக்ரோசொப்ட் இன்னும் அறிவிக்கவில்லை.

வெளியானவுடன் இந்த இரண்டு வசதிகளும் எத்தனை வாடிக்கையாளர்களை இழுக்கும் என்று நாம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் சுகாதாரமுறை பேணப்படாத உணவுச்சாலைகளை மூடுமாறு பணிப்பு

## மாகாண சுகாதார அமைச்சர் அவசர நடவடிக்கை

மட்டக்களப்பு,டிசெ.2

கிழக்கு மாகாணத்திலுள்ள சுகாதார முறை பேணப்படாத உணவுச்சாலைகளை உடனடியாக மூடிவிடுமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் அறிவித்துள்ளார்.



கிழக்கு மாகாணத்திலுள்ள தேநீர்க் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், உணவு விடுதிகள் போன்றவற்றில் தரம் குறைந்த உணவுகள், பானங்கள் விற்பனைசெய்யப்படுகின்றன.

இதனால் தொற்று நோய்களுக்கு மக்கள் முகம்கொடுக்க நேரிடுகின்றது. பல்வேறு தரப்பிலிருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்தே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்த பணிப்புரை உடன் நடைமுறைக்கு வருகின்றது. எந்தவித தயவும் காட்டாது இந்த விடயத்தில் கண்டிப்பாக நடந்து கொள்ளுமாறும் அவர் தனது பணிப்புரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வெளிக்கள சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருக்கு தெளிவூட்டல் கருத்தரங்குகளை உடன் மேற்கொள்ளுமாறு அவர் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிராந்திய, பிரதேச ரீதியில் குழுக்களை அமைத்து உணவுச்சாலைகளைப் பரிசோதிக்குமாறும், உணவுச்சாலைகளைத் தரம் பிரிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# புனித ஹஜ் யாத்திரைக் காலத்தை விசேட விடுமுறையாக்க வேண்டுகோள்

அம்பாறை,டிசெ.2

புனித ஹஜ் யாத்திரைக் காலத்தை விசேட விடுமுறையாக்குமாறும், இதற்கெனத் தரிசனக் கோவையில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போதிய பண வசதியும், தேகாரோக்கியமும் உள்ளபோது, முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டிய கட்டாயக் கடமைகளுள் ஒன்று புனித ஹஜ் ஆகும்.

இதற்காக மக்கா நோக்கிப் பயணிக்கும் யாத்திரிகர்கள் நாற்பது நாள்கள் வரை அங்கு தங்க வேண்டியுள்ளது.

இதற்கென இலங்கைக்கு வெளியே சம்பளமற்ற விடுமுறையில் செல்ல அனுமதி பெற்றுக் கொள்வதில் கிழக்கு மாகாண முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

சவூதி அரசின் கட்டுப்பாட்டால் ஆண்டுதோறும் விஸா பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கும் ஹஜ் யாத்திரிகர்கள் கிழக்கு மாகாண ஆளுநரின் கட்டுப்பாட்டால், கிடைக்கும் விஸாவில் பயணிக்க சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொள்வதில் அதைவிட அதிக சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

போதிய பண வசதியுள்ளபோது மேற்கொள்ளும் புனித ஹஜ் யாத்திரைக்கான வெளிநாட்டுப் பயணத்துக்குச் சம்பளமற்ற விடுமுறைபெற முன்னைய ஆண்டுகளில் போதிய சேமித்த பணி விடுமுறை இல்லை என்ற காரணத்தினாலேயே இவர்களது பயண அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

போதிய பண வசதிவரும் போது, போதிய பணி விடுமுறை சேமிப்பில் இருப்பதென்பது சாத்தியமற்றது. இதனால் கடமையான ஹஜ் யாத்திரையா? தொழிலா? என முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் திண்டாடுகின்றனர். சென்று வந்தவர்கள். பணி நீக்கம் செய்யப்பட்டு விடுவோமா? என அஞ்சும் நிலையுமுள்ளது.

நாட்டின் எந்தவொரு மாகாணத்திலுமில்லாத தாபனக் கோவையை மீறிய கிழக்கு மாகாண ஆளுநரின் இந்தப் பொருத்தமற்ற நடைமுறைகளைத் தளர்த்தக் கோரி ஜனாதிபதிக்கும், முஸ்லிம் கட்சித் தலைவர்களுக்கும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி மாத்திரம், கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பொருத்தமான நடவடிக்கைக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இற்றைவரை எந்த நடவடிக்கையும் எவராலும் எடுக்கப்படவில்லை-என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

# வைத்தியசாலை வளாகத்திலேயே டெங்கு அபாயம்

கேகாலை, டிச.2

கேகாலை பொது வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு நுளம்புகள் பெருகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசித்து வந்த 11 பேருக்கு அண்மையில் டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

20 ஏக்கர் கொண்ட கேகாலை வைத்தியசாலை வளாகம் மோசமான சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதாக பொதுமக்கள் விசனிக்கின்றனர்.

வைத்தியசாலையில் இருந்து அகற்றப்படும் அனைத்துக் கழிவுப் பொருள்களும் வைத்தியசாலையின் வளாகத்திலேயே கொட்டப்படுகின்றன.

இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை வளாகத்தில் அசுத்தமான நீர் நிலைகளும் காணப்படுகின்றன.

எனவே, வைத்தியசாலை வளாகத்தை துப்புரவு செய்யாவிட்டால் நோய்கள் பரவுவதைத் தடுக்க முடியாது என்று கேகாலை மாவட்ட பிரதி சுகாதார அத்தியட்சகர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச)



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் தொடக்கம் பெய்துவந்த மழையினால் வெள்ளநீர் வடிந்தோட முடியாமல் வடிகால்வாய்கள் காணப்படுவதனால் அவற்றில் உள்ள மண்ணை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அகற்றுகின்றனர்.

# வீதி ஒழுங்குகளை மீறிய 200 பேர் கைது

கண்டி,டிசெ.2

கண்டி நகரில் வீதி ஒழுங்குகளை மீறிய சுமார் 200 பாதசாரிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி - பேராதனை பஸ் தரிப்பிடம் முன்னாள் மற்றும் கண்டி மணிக் கூண்டுக் கோபுர பகுதி உள்ளடங்களாக பல பிரதேசங்களில் மஞ்சள் கடவையை பயன்படுத்தாமல் வீதியின் குறுக்கே கடந்தவர்களே இதன்போது கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களுக்கு தலா 750 ரூபா வீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. தண்டப் பணம் செலுத்தாதவர்கள் மீது வழக்கு தொடரப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த நடவடிக்கையில் சுமார் 30 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச)

# கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் இடமாற்றம்

கல்முனை,டிசெ.2

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் சமமின்மையை சீர்செய்யும் நோக்கில் கல்முனைக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 185 ஆசிரியர்கள் கல்முனையிலிருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கல்முனை கல்வி வலயத்திலிருந்து 126 ஆசிரியர்களும், சம்மாந்துறைக் கல்வி வலயத்திலிருந்து 43 ஆசிரியர்களும,; அக்கரைப்பற்று கல்வி வலயத்திலிருந்து 16 ஆசிரியர்களும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் கூடுதலானோர் கிண்ணியா, மூதூர், திருகோணமலை கல்வி வலய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இட மாற்றம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்ப டுத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ச)

# உரம் மானியமாக விநியோகம்

மட்டக்களப்பு,டிசெ.2

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கென 160 கோடி ரூபா பெறுமதியான உரம் மானியமாக வழங்கப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் டாக்டர் ஆர்.ருஷாங்கன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கண்டி வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவு

கண்டி,டிசெ.2

கண்டி பிரதான வைத்தியசாலையில் 700 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புற்றுநோய் பிரிவுக்கான கட்டடப் பணிகளை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கட்டடப் பணிகளுக்கு நிதியுதவி சேர்ப்பதற்கான கலந்துரையாடல் கண்டி வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து புற்றுநோயாளர்களுக்கும் கண்டி புற்றுநோய்ப் பிரிவு அதிக பயனாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கூட்டுறவு ஆணையாளருக்கு தொலைபேசி மூலம் மிரட்டல்

திருகோணமலை,டிசெ.2

கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை ஆணையாளர் எம்.சீ.எம்.சரீப்புக்கு இனந்தெரியாத நபரொருவரினால் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தலைமைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத்தொலைபேசி இலக்கம் மட்டக்களப்பு மாவட்டத் தின் தொலைபேசி குறியீட்டு இலக்கத்தில் இருந்த வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவர் கைது

கிரிஹெல்ல,டிசெ.2

சட்டவிரோதமான முறையில் மதுபான தயாரிப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் நபரொருவரை மதுபானங்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளதாக கட்டுநாயக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கமல் கிரிஹெல்ல தெரிவித்தார்.

இந்தச் சந்தேகநபர் கட்டுநாயக்க பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தல்கத்தொட்டஓய பிரதேசத்தில் நீண்டகாலமாக சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்டு வந்ததாகவும் இதன்போது 80 மதுபான பரல்களும் மதுபானம் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் 168,000 கிராம் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# திண்ம கழிவகற்றலுக்கு 10 கோடி ரூபா நிதியுதவி

மட்டக்களப்பு,டிசெ.2

காத்தான்குடி நகர சபை எல்லைக்குள் திண்ம கழிவகற்றல் முகாமைத்துவ செயற்பாட்டிற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பத்து கோடி ரூபாய் நிதி வழங்கவுள்ளதாக காத்தான்குடி நகர சபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்வர் தெரிவித்தார்.

இந்தநிதி கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி நகர சபைக்கு மாத்திரமே திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உங்களின் யோசனைகளுக்கு உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும். நீங்கள் கேட்ட உதவியை சக ஊழியர் ஒருவர் மறுக்காமல் செய்யலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள்.

**இடபம்:**
வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். சில பிரச்சினைகளை நினைத்து மனம் வெறுப்படைந்தாலும், மற்றொரு விடயத்தில் சந்தோஷம் அடைவீர்கள். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களின் வீடு தேடி வரலாம்.

**மிதுனம்:**
எந்த வேலையையும் மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் செய்ய நினைப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆரம்பித்த சில வேலைகளை இடைநடுவில் விட்டு விட்டு, வேறு வேலையைச் செய்வீர்கள். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம்.

**கடகம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள். மற்றவர்கள் செய்யும் தவறுகளால், ஒரே வேலையை இரு முறை செய்ய நேரிடலாம். அடுத்தவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவீர்கள். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
உங்களின் துணிச்சலான செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் வியப்படைவர். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். வெளியூர் பயணம் செல்லும் சிலருக்குத் துணையாக இருப்பீர்கள். இரண்டு நாள்களுக்கு முன் எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று வந்து சேரலாம். அடகு வைத்த பொன், பொருள்களை மீட்க நேரிடலாம்.

**கன்னி:**
மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக பகட்டாக நடந்து கொள்வீர்கள். குடும்ப விவகாரங்களை நண்பர்கள் சிலரிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். மன உளைச்சலை கொடுத்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**துலாம்:**
என்னதான் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டாலும் யாராவது ஒருவர் உங்களை குறை சொல்லலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சில பிரச்சினைகளை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் ஏற்படலாம். உடல் உபாதைகள் தோன்றலாம்.

**விருச்சிகம்:**
உறவினர்கள் சிலர் உங்களின் உதவியுடன் வேலைகளை முடிப்பர். மற்றவர்களுக்காக நீங்கள் சில செலவுகளைச் செய்யலாம். முக்கிய பொருள் ஒன்றை மறதியாக எங்காவது வைத்து விட்டு தேடலாம். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு அலைச்சல் கூடும். உதிரி வருமானங்களைப் பெற வாய்ப்பு உண்டு.

**தனுசு:**
மன உறுதி, தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். நண்பர்கள், உறவினர்களிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். குடும்ப உறுப்பினர்கள் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். நீங்கள் செய்த உதவி ஒன்றை நினைத்துப் பார்த்து ஒருவர் பதில் உதவி செய்யலாம்.

**மகரம்:**
உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பரிவுடன் நடந்து கொள்வீர்கள். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். கடன் விவகாரங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். சிலரை வெறுப்பேற்றும் வகையில் பேசி, அதில் இன்பம் காண்பீர்கள். எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.

**கும்பம்:**
நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவுகள் இன்று கைக்குக் கிடைக்கலாம். சுய தொழில் புரிவோர் கூடுதல் வேலைகளால் அவதிப்படலாம். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும்.

**மீனம்:**
உங்களின் சில வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையும். சில விடயங்களில் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற முடியாமல் போகலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.

# சர்வதேச குற்றச்சாட்டி... இலங்கையை காப்பார்... ஆணைக்குழு அறிக்கை...

'புறொன்ட் லைன்' இந்திய மாத இதழில் வெளி...

இலங்கையில் 2009 மே மாதத்தில் முடிவடைந்த நான்காம் ஈழப்போர் தொடர்பாக அனைத்துலக சமூகம் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது கருத்தை வெளிப் படுத்தி வருகிறது. இந்தப் போரில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறி இலங்கை ராணுவம் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் உயிர்களைப் பறித்தமை தொடர்பிலும் அனைத்துலக சமூகம் தனது கண்டனத்தைத் தெரிவித்து வருகிறது.

இதற்குப் பரிகாரம் தேடும் வகையில் இலங்கை அரசு உள்நாட்டுப் போர் தொடர்பாகவும், விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் விசாரித்து அறிக்கையிடுவதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தது.

இந்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு நவம்பர் 20, மாலை ஆறு மணிக்குக்குத் தனது இறுதி அறிக்கையை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்துக் கையளித்தது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கொண்டு இலங்கை அரசு செயற்பட வேண்டியுள்ளது. அத்துடன் அனைத்துலக சமூகத்திற்குத்தான் எதையும் மறைக்கவில்லை என்பதையும் அது காண்பிக்க வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு உண்டு.

இந்த அடிப்படையில், படிப்பினைகள் ஆணைக்குழுவால் ஆராய்ந்து கண்டறியப்படும் போர்க் குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கைக்கு முன்பாகவே ஜனாதிபதி அறிவித்திருந்தார். ஆனால், இந்த ஆணைக்குழுவானது தனக்காக வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் செயற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கவில்லை.

**போர்க் குற்றத்தை விசாரிக்காத ஆணைக்குழு**

இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பணிகளில் போர்க் குற்றங்களை ஆராய்வது இருக்கவில்லை. இதனால் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கண்டனத்திற்கு அது உள்ளாகியது. போர் தொடர்பில் எவரும் தம்மிடம் சாட்சியங்களை முன்வைக்கலாம் என ஆணைக்குழு தெரிவித்த போதிலும் சாட்சியமளிப்பதற்குப் பலர் மறுத்தனர்.

ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை எவற்றைக் கொண்டிருக்கும் என்பது தொடர்பான சாராம்சத்தை உள்ளூர் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. இந்த அறிக்கை 400 பக்கங்கள் கொண்டது.

''நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது, இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தால் புலிகள் தோற்கடிக்கப்பட்டபோது இடம்பெற்ற சம்பவங்களை விசாரணை செய்யுமாறு இலங்கை அரசிடம் கேட்டிருக்கிறது'' என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

''படிப்பினைகள் ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்ட ஆணையாளர்களுக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களைக் கொண்டே அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், போர்க் குற்றங்களுடன் தொடர்புபட்ட நபர்கள் மற்றும் குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பான விளக்கம் இந்த அறிக்கையில் காணப்படவில்லை. ஆனால், பிரிட்டனின் சனல்-04 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' ஆவணப்படம் மற்றும் காணொளிகளில் காட்டப்படும், இராணுவத்தினரால் புலிகளும் பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கூறப்படும் காட்சிகள் அனைத்தும் போலியானவை என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது'' என்று அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றில் இந்த அறிக்கை முன்வைக்கப்பட்ட பின்னரே அது பகிரங்கப்படுத்தப்படும் என்று அரசு தெரிவிக்கின்றது. நவம்பர் 21 அன்று ஆரம்பமாகிய வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தின் அடுத்த கட்டங்களில் ஆணைக் குழுவின் இந்த அறிக்கையும் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ''ஜனாதிபதி செயலகம் முதலில் இந்த அறிக்கையை முழுமையாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. அதன் பின்னர் இது நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்'' என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எப்படி இருப்பினும் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் பொது மக்களின் பார்வைக்கு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

**அறிக்கை தயாரான விதம்**

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கி-மூன் இலங்கைக்கு வருகை தந்தபோது, போர் தொடர்பாக ஐ.நா. விசாரணை ஒன்றை நடத்தும் என்ற தீர்மானத்தை எடுத்திருந்தார். அதன் பின்னர், கடந்த ஆண்டு மே மாதத்தில் இலங்கை ஜனாதிபதியால் நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பொது வழக்கறிஞர் சீ.ஆர்.டீ.சில்வா இருந்தார்.

40 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட 57 விசாரணைகள், சம்பவம் இடம்பெற்ற 12 இடங்களைப் பார்வையிட்டமை ஆகியவற்றின் பின்னரே ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையைத் தயாரித்துள்ளது.

11 மாதங்களுக்கும் மேலாக இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களை இந்த ஆணைக்குழு சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. இவற்றைவிட, எழுதப்பட்ட 5,100க்கும் மேற்பட்ட சாட்சியங்களை இந்த ஆணைக்குழு பெற்று அவற்றை ஆராய்ந்துள்ளது.

திடீர் மக்கள் சந்திப்புக்கள் சிலவற்றையும் ஆணைக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்கள் போன்றவற்றிலேயே இவ்வாறான சந்திப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன.

தனக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்கள் தொடர்பாக மேலதிக ஆதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் ஆணைக்குழு வடக்கு-கிழக்குப் பகுதிகள் சிலவற்றுக்கு மீளவும் பயணம் செய்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், சட்ட ஒழுங்குகள், நில விவகாரம், சட்ட ரீதியற்ற ஆயுதக் குழுக்கள், மொழி போன்ற விடயங்களை உள்ளடக்கிய உள்ளகப் பரிந்துரைகளை ஆணைக்குழு அறிக்கை வழங்கியுள்ளது. ஆணைக்குழுவுக்கான தவணை நவம்பர் 15ஆம் நாளுடன் நிறைவுக்கு வந்தது.

**அறிக்கையின் அவசியம்**

இலங்கையில் நல்லிணக்கத்தையும் அமைதியையும் கட்டி எழுப்புவதை நோக்காகக் கொண்டு கற்றுக் கொண்ட பாடங்களுக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவானது, தனது விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைத்துலக மற்றும் உள்ளூர் மட்டங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளையும் ஆராய்ந்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, இந்தியா போன்ற உலக நாடுகள் பல படிப்பினைகள் ஆணைக்குழு என்ன சொல்கிறது என்பதைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தன.

நடந்து முடிந்த போரை அடிப்படையாகக் கொண்டோ அல்லது ஆணைக்குழு வழங்கப்பட்ட பணி தொடர்பான விளக்கவுரையை அடிப்படையாகக் கொண்டோ சர்வதேசம் அவசரப்பட்டுத் தீர்மானங்களுக்கு வரக்கூடாது என்று சில உலக நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை முதலில் நிறைவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதே இந்த நாடுகளின் ஒருமித்த கருத்தாக உள்ளது. ஐ.நா. மற்றும் ஏனைய உலக அமைப்புக்களுடன் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பகிர்ந்து கொள்ளத் தயார் என்று இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. அத்துடன் உள்நாட்டுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிலிருந்து ற்றுமா கை?

வெளியான கட்டுரையின் தமிழாக்கம்

இணக்கப்பாட்டு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

அதாவது மனித உரிமை விவகாரங்கள் என்ற நிலைப்பாடு வரும் போது சக்தி வாய்ந்த உலக நாடு ள் அனைத்தும் தனக்கு ஆதரவான நிலைப்பாட்டை டுத்துக் கொள்ளவேண்டும் என்ற உள்நோக்குடன் இலங்கை அரசு தற்போது காய்களை நகர்த்தி வருகிறது.

ஆணைக்குழுவின் அறிக்கையைத் தாம் பார்வை விடும்வரை அது தொடர்பாக எந்தவொரு கருத்துக் களையும் வெளிப்படுத்துவதில்லை என்று சில மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. ஆனால் இந்த ஆணைக்குழுவானது இலங்கையில் மேற்கொள்ள ட்ட வன்முறைகளுக்குச் சரியான பொறுப்புக் கூறாது ன்று அனைத்துலக மன்னிப்புச் சபை போன்ற சில றுவனங்கள் தெரிவித்துள்ளன.

### மன்னிப்புச் சபை சீற்றம்

கடந்த செப்ரெம்பர் மாதம், "அவர்களுக்கு எப் போது நீதி கிடைக்கும்?" என்ற தலைப்பில் அனைத் துலக மன்னிப்புச் சபை அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

"இலங்கை அரசானது கடந்த இரு ஆண்டுகளாக ல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை சுயாதீன அனைத்துலக விசாரணைக்கு எதிரான துரும்பாகப் பயன்படுத்தி வருகின்றது. நீதியை நிலைநாட்டி, இணக்கப்பாட்டை அதிகரிப்பதற்கான நம்பகத் ன்மையான பொறுப்பு வாய்ந்த பொறிமுறையாகவே இந்த ஆணைக்குழுவை அரசு அதிகாரிகள் சித்திரித் துள்ளனர். ஆனால் உண்மையில் இந்த ஆணைக் குழுவின் விளக்கவுரை, தொகுப்பு, நடைமுறை போன்றவற்றைப் பார்க்கும்போது இது கையாலாகாத ன்று என்பதைக் காணமுடியும்" என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் சாம் சரீப் சுட்டிக்காட்டியிருந்தார்.

சட்ட ரீதியற்ற படுகொலைகள், ஆள்கடத்தல்கள், மருத்துவமனைகள் போன்ற மக்கள் கூடிய இடங்கள் து நடத்தப்பட்ட கடும் எறிகணைத் தாக்குதல்கள், பாதுமக்கள் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப் ட்டமை போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வ ற்கு இந்த ஆணைக்குழு தவறியுள்ளதாக அனைத் துலக மன்னிப்புச் சபையின் ஆய்வு அறிக்கையில் றிப்பிடப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசை வளிப்படையாகப் பாதுகாத்த முன்னாள் அரச அதிகாரிகள் இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அனைத்துலக மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது அமர்வில், "கடந்த காலத்தை மறந்துவிடு மாறு" ஆணைக்குழுவின் தலைவர் சாட்சியமளிக்க முன்வந்தவர்களிடம் கேட்டிருந்தார். அந்த அமர்வில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எவ்வித கருத்துக்களும் அவரால் முன்வைக்கப்படவில்லை எனவும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கல்வி, மருத்துவம், வீடமைப்பு போன்ற வற்றை அடைவதில் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்குமாறும் மக்களிடம் ஆணைக்குழுவின் தலைவர் கோரியிருந்தார் என்றும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரச படை களுக்கு உள்ள தொடர்பு மற்றும் பங்களிப்பு குறித்து அறிந்து கொள்ளத்தக்க வகையிலான முக்கிய வினாக் களை சாட்சிகளிடம் கேட்பதில் ஆணைக்குழு அக் கறை காட்டவில்லை என சாம் சரீப் சுட்டிக்காட்டுகிறார்.

### குற்றங்கூறிய அறிக்கை

2009 மே மாதத்தில், புலிகள் உத்தியோகபூர்வ மாகத் தோற்கடிக்கப்பட்டனர். அதற்கு முன்னர் - போர் உக்கிரம் பெற்றிருந்த மாதங்களில் - இலங்கைப் படை களாலும், விடுதலைப் புலிகளாலும் மேற்கொள்ளப் பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் இந்த நிபுணர் குழுவை நியமித்திருந்தார். 2011 ஏப்ரல் மாதத்தில் அதன் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதில் அரசு மற்றும் புலிகள் இரு தரப்பினருமே போர்க் குற்றங்கள் புரிந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் போதியளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்தப் போர்க் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான அனைத்துலக சுயாதீனப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரைத்திருந்தது. ஆனால் இந்த அறிக்கையை இலங்கை அரசு கடுமையாக விமர்சித்ததுடன், குழுவின் தலை வரான மர்சுகி டருஸ்மன் "இலங்கையர்களுக்கு எதிரான உணர்வுகளைக் கொண்டவர்" எனவும் விமர்சிக்கப்பட்டிருந்தார்.

"இது டருஸ்மன் அறிக்கை என்பதால் தட்டிக்கழிக்கிறோம்" என்று கூறிய இலங்கை அரசு, ஐ.நா. அறிக்கையாக இதனை ஏற்றுக்கொள் ளவும் மறுத்துவிட்டது. தமது அறிக்கையை இறுதியாக்குவதற்கு முதல் இலங்கைக்குச் சென்றுவர ஐ.நா. நிபுணர் குழு விரும்பியிருந்தது. ஆனால் அதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கவில்லை.

இந்த அறிக்கையை இலங்கை அரசு தட்டிக்கழித்த போதும், ஐ.நா. இதனை முக்கிய அறிக்கையாக ஏற்றுக்கொண்டது.

"இலங்கையில் போர் இடம்பெற்றபோதும் அதற்குப் பின்னரும் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு விளக்கவுரைகளின் பரிந்துரைகளின் பிரகாரம் கண்டறியப்பட்டுள்ள விடயங்களைச் செய லாளர் நாயகம் தனது கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது.

### தயாராகும் மற்றொரு அறிக்கை

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது ஐ.நா. அமைப்புக்கள் மேற்கொள் ளத் தவறிய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஐ.நா மக்கள் நிதியத்தின் முன்னாள் தலைவரான தோரயா ஒபெய்ட் செப்ரெம்பர் 24 அன்று நியமிக் கப்பட்டார். இவரது நியமனம் நிபுணர் குழுவின் பரிந்து ரையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

நான்காம் கட்ட ஈழப்போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் இலங்கையில் ஐ.நா. மனிதாபிமானப் பாதுகாப்பு நடைமுறைகளை நடைமுறைப்படுத்தத் தவறியதா என்று ஒபெய்ட் ஆராய்வார். அடுத்த மாதத்தில் அவரது அறிக்கை தயாராகி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. எவ்விதத் தவறையும் இழைக்கவில்லை என இலங்கை அரசு கூறிவருகின்றது. எனினும் "ஐ.நா. தனது அதிகாரிகள் மீது விசாரணை மேற் கொள்ள விரும்பினால் அதனைச் செய்யலாம்" என இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

"இலங்கைக்கான ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிநிதி நீல் பூனே, போர் இடம் பெற்ற காலத்தில் இலங்கையில் பணியாற்றியவர். உண்மையில் இங்கு என்ன நடந்ததென்பது அவருக் குத் தெரியும்" எனவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் "இங்கு செயற்பட்ட வேற்றுநாட்டுத் தூதுவர்களுக்கும் இலங்கையின் நிலவரம் தொடர்பாக நன்கு தெரியும். போர்க் குற்றச்சாட்டுக் கள் உண்மையில்லை என்பதை அவர்கள் நன்கறிவர்" எனவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

### நெருக்கடிக்குள்ளாகும் இந்தியா

இலங்கை மீதான தமது அழுத்தத்தை அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகள் கைவிடப்போவதில்லை. இந்தியாவானது இலங் கையுடன் இது தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்ள முயற்சிக்கின்றது. அனைத்துலக அரங்கில் இலங்கையை ஆதரித்தே இந்தியா செயற்பட்டுவருகின்றது.

தோராயா ஒபெய்ட்டின் அறிக்கை, இலங்கை யில் ஐ.நாவின் செயற்பாட்டைக் குறைகூறுமாக இருந்தால் அது போர்க் குற்ற விவகாரத்திற்கு மேலும் பலத்தைச் சேர்ப்பதாக அமையும். இதனை எதிர்ப்பதென்பது இலங்கைக்கு மிகக் கடினமான விடயமாகும். ஆகவே பிறக்கப் போகும் புத்தாண்டு இலங்கைக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வரும் மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடக்க உள்ளது.

தமிழர்கள் பிரச்சினைக்கு இலங்கை எந்தவொரு பொருத்தமான தீர்வையும் முன் வைக்காவிட்டால், அனைத்துலக அரங்கில் பல புதிய சவால்களுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். இந்த விடயத்தில் இந்தியா மேலும் உதவ முடியாத நிலை தோன்றும்.

(நன்றி: புதினப்பலகை)

# சம்பவம் ஒன்று அனுபவம் வேறு



"நீ ஏழ்மையாக இருந்தால் வருத்தப் படாதே. உன்னைவிட ஏழையோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ச்சி கொள்" என்பார்கள் இது தவறு நான் எண்ணம் என்கிறேன் நான்.

"காலுக்குச் செருப்பில்லை என்று வருத்தப்பட்டேன். காலே இல்லாதவ னைப் பார்க்கின்றவரை" என்று ஒரு பொன்மொழி எழுதிவைத்திருக்கிறார் கள். அதாவது நம்மைவிடக் கஷ்டப்படு கிறவர்களைப் பார்த்து நாம் திருப்திப்பட வேண்டும் என்றுதான் கற்றுக் கொடுத் தார்கள்.

இது தவறானது. காரணம் மிகவும் நுட்பமானது. நம்மிடம் நிம்மதியை உருவாக்குவதற்காக ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கத்தைச் சமூகம் எமக்குச் சொல்லி வைத்தது. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கிற இயல்பு இருக்கிறவரை துளிர் கூட எமக்கு நிம்மதி ஏற்படவே முடியாது என்கின்றது உளவியல். மனிதர்களுடைய சகல துன்பங்களுக் கும் காரணமே மனப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வது தான். ஒப்பிட்டுப் பார்க்கும் குணமே நமக்குத் துளிகூட இல்லை என்றால் நமது நிம்மதியை யாராலும் குலைக்க முடியாது.

ஆ.... ஏழையோடு, கஷ்டப்படுகிறவனோடு வெகுவாகத் துன்பப்படுகிறவனோடு இல்லாதவனோடு தானே நம் பெரியவர்கள் ஒப்பிடச் சொல்கிறார்கள். பணக்காரனோடும் வசதியானவனோடும் மிகப் பெரியவனோடு ஒப்பிட்டுக் கொண்டால்தானே துன்பம் வரும் என்று எண்ணுகிறீர்களா?

எப்போது ஒப்பிடுதல் தொடங்கிவிட்டதோ... அதன்பின் கீழ் என்ன? மேல் என்ன? ஒப்பிட்டுப் பார்க்கின்ற பழக்கம் தொடங்கிவிட்ட பின் அதைக் குறிப்பிட்ட எல்லையோடு நிறுத்த முடியுமா . நிச்சயம் முடியவே முடியாது. தீப்பிடிக்கத் தொடங்கிவிட்ட பின்னால் அது கீழ் நோக்கித்தான் பிடிக்கும் என்பதில்லை. மேல் நோக்கியும் பாயும்... காற்றடிக்க தொடங்கிவிட்ட பிறகு அது குளிர்ச்சி மட்டும்தான் தரும் என்று சொல்ல முடியாது. அது குப்பையையும் சேர்த்துத்தான் சுழற்றி அடிக்கும்.

எனவே வளர்ச்சியை அளக்க உன்னை யாரோடும் எப்போதும் ஒப்பிடாதே. நீ நீயாகவே இரு. உயர்வுகளையும் சிறப்புக்களையும் நீ பெறுவதற்கு ஒப்பிட்டுப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்றில்லை. வேறு பல அளவுகோல்கள் இருக்கின்றன.

ஒரு கட்டட வேலை நடந்து கொண்டிருந்தது. காலை எட்டு மணிக்கு வந்து பத்துப் பேர் வேலையைத் தொடங்கியிருந்தார்கள். பத்து மணிக்கு வந்து பார்த்த முதலாளி இன்னும் இரண்டு பேர் இருந்தால்தான் மாலைக்குள் தான் நினைத்த அளவு வேலை முடியும் என்று நினைத்து இன்னும் இரண்டு பேரை அழைத்து வேலை செய்யச் சொன்னார். அவர்கள் இருவரும் "பத்து மணிக்குத்தான் வேலை தொடங்கினோம் என்று கூலியைக் குறைக்கக் கூடாது. முழுநாள் கூலி இருநூறு தர வேண்டும்" என்றனர். " சரி தருகிறேன். வேலையைப் பாருங்கள்" என்றார். வேலை நடந்தது. முதலாளி புறப்பட்டுப் போனார்.

நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் வந்து பார்த்தால் நினைத்த வேகத்தில் வேலை நடக்கவில்லை என்று தெரிந்தது. இன்னும் இரண்டு பேரை வேலைக்கு விட்டார். அவர்களும் "கூலி குறைக்கக் கூடாது. முழுநாள் கூலி தருவீர்களா?" என்று கேட்டார்கள். வேலையை முடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் 'சரி' என்றார் முதலாளி. வேலை முடிந்துவிட்டது.

மாலையில் எட்டுமணி, பத்து மணி, பன்னிரெண்டு மணிக்கு வந்த எல்லோருக்குமே இருநூறு ரூபா கூலி கொடுத்த போது அங்கு பெரிய பிரளயமே வந்துவிட்டது. பிரச்சினையைத் தொடங்கியது பத்துமணிக்கு வந்த நபர். "பன்னிரெண்டு மணிக்கு வந்தவனுக்கும் இருநூறு... எனக் கும் இருநூறா.. கூட கொடுங்கள்" என்று சண்டை போட்டார். ஆனால் பத்து மணிக்கு வந்தவருக்குச் சமமாக மட்டும் அநியாயம் என்று அவருக்குத் தோன்றவே இல்லை. உடனே எட்டு மணிக்கு வந்தவ ருக்கோ தான் மற்றவர்களை விடவும் கூடுதலாக உழைத்துவிட்டோமே என்று வருத்தம் வந்துவிட்டது. நாள் கூலி. நமக்குரிய கூலி இல்லை. நாம் கேட்ட கூலி கிடைத்துவிட்டதே என்ற திருப்தி பத்து மணிக்கார ருக்கு இல்லை. நம்மைவிடக் குறைவான நேரம் உழைத்து நமக்கு நிகராகப் பன்னிரெண்டு மணிக்காரன் கூலி பெற்று விட்டதை அவரால் சகிக்க முடியவில்லை.

சண்டை எதற்கு... சந்தோஷமாகப் போகட்டுமே என்று நினைத்த முதலாளி சமாதானம் செய்ய எட்டு மணிக்கு வேலைக்கு வந்தவருக்கு ஒரு ஐம்பது ரூபாவைக்- கூடுதலாகக் கொடுத்தார். அவ்வளவுதான்., உடனே பன்னிரெண்டு மணிக்காரர் தனக்கும் அந்தத் தொகை தரவேண்டும் என்று சண்டைக்கு வந்தார்.

இலவசம் என்பது கொடுப்பவர் விருப்பப்பட்டுத் வழங்குவது. ஆனால் இங்கு வாங்குபவர் தம் விருப்பப்படி தந்தால் என்ன என்று சண்டைக்கு வந்தார். தான் நிர்ணயித்த கூலி கிடைத்துவிட்டது என்ற திருப்தி எவருக்குமே இல்லை. தன்னைவிட மற்றவருக்குக் கூடுதலாகக் கிடைத்துவிடக் கூடாதே என்கிற கவலையும் கிடைத்துவிட்டதே என்ற வருத்தமும் ஆட்டிப் படைக்கிறது. தான் சம்பாதித்த தொகையை மற்றவன் தன்னைவிட குறைவான உழைப்பில் பெற்றுவிட்டால் மகிழ்ச்சி போய் விடுகிறது. எப்படியோ வருத்தம் வருகிறது. அல்லது மகிழ்ச்சி போய்விடுகிறது. காரணம் ஒப்பிடுதல்... ஒப்பிடுதல்..... ஓயாமல் ஒப்பிடுதல். இந்த மனநோயிலிருந்து தயவு செய்து வெளியே வாருங்கள்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 டிசெம்பர் 2011 வெள்ளிக்கிழமை



யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கை சிறப்புக் கலை இரண்டாம் வருட மாணவர்களின் 'சாரல்' இதழியல் புகைப்படக் கண்காட்சி பல்கலைக்கழக கலை வரலாற்றுத்துறை கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நாடாவெட்டி திறந்து வைக்கிறார். (ம-311)

# தொற்று நோய்களின் பரம்பல் அண்மைக் காலமாக அதிகரிப்பு

## மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி தெரிவிப்பு

வடமராட்சி, டிசெ.2

தொற்றுநோய்களின் பரம்பல் அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகிறது.

உடலில் தொற்று நோய்க் கிருமிகள் உணவு அருந்தும் கைகள் மூலமாகவே நுழைகின்றன. பல வழிகளாலும் எமது கைகளில் தொற்றுநோய்க் கிருமிகள் பற்றிப் பிடிக்கின்றன. தொற்று நோய்க் கிருமிகள் எமது கைகளை அணுகாமல் இருக்க அல்லது உடலுக்குள் செல்லாதிருக்க கைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறு மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா, அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற கைகழுவுதல் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அதிபர் பொ.சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

சிறுவயது முதலே மாணவர்கள் கைகழுவும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். இப் பழக்கத்தின் மூலம் உடலில் தொற்று நோய்க் கிருமிகள் உட்செல்லாமலும் தொற்று நோய்கள் அணுகாமலும் தடுக்க முடியும்.

அண்மைக்காலமாக தொற்று நோய்கள் அதிகரித்துள்ள இவ் வேளையில் தற்போது நிலவும் மழையால் நோய்களின் தாக்கம் மேன்மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன. ஆதலால் கை கழுவுதல் என்பது மிக அவசிய மாகும்.

கைகள் கழுவும் போது சவர்க்காரத்தை மட்டுமன்றி, தொற்று நீக்கிகளையும் பயன்படுத்தலாம். மாணவர்கள் கைகழுவும் 5 படிமுறைகளுக்கேற்ப கைகளைக் கழுவப் பழகிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் தொற்று நோய்த் தாக்கங்கள் ஏற்படாது தம்மைப் பாதுகாத்துக் கொண்டு, ஆரோக்கியமானநிலையில் சிறந்த கல்வியைப் பெற்று உயர்ந்து வாழ வேண்டும். -என்றார்.

நிகழ்வில் மாணவர்களுக்கு சவர்க்காரம் இட்டு கைகழுவும் செய்முறை படிமுறை ஒழுங்கில் அம்பன் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோவினால் செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் ஆசிரியர்களின் மேற்பார்வையில் அனைத்து மாணவர்களும் கைகழுவும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். (ம-236)

# பின்தங்கிய பிரதேசங்களில் பணியாற்ற ஆசிரியர்கள் தாமாக முன்வர வேண்டும்

## யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்

யாழ்ப்பாணம், டிசெ.2

ஆசிரியப் பணியில் தம்மை இணைத்துக் கொள்வோர் வளர்ச்சி அடைந்த பிரதேசங்களை விட பின் தங்கிய பிரதேசங்களில் பணியாற்றும் சேவை மனப்பாங்கை வளர்க்க வேண்டும் என யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் இயங்கி வரும் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற "வாழ்வால் உதாரணமாகி" என்ற ஆய்வரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

குறிப்பாக வன்னிப் பகுதியில் பாதிக்கப்பட்ட கல்வித் துறையை மீளக் கட்டியெழுப்ப ஆசிரிய சமூகம் முன்வர வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் அருட்திரு ஞா.பிலேந்திரன், கல்லூரி அதிபர் எஸ்.கே யோகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

ஆய்வரங்க உரைகளில் 'வாழ்வால் உதாரணமாகி' என்ற கருப்பொருளில் மெய்யியல் நோக்கில் யாழ் சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் போல் றொகான் அடிகளாரும், "வாழ்வியல் நோக்கில்" வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் பேனாட்டும் கருத்துக் களை வழங்கினர்.

ஆசிரிய மாணவரால் தயாரிக்கப்பட்ட 'என் ஆசான்' என்னும் காணொளி காட்சிகளும் கலந்துரையாடலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

500ற்கும் மேற்பட்ட பல்வேறு மதங்களைச் சேர்ந்த முகிழ்நிலை ஆசிரியர்கள் இந்த ஆய்வரங்கில் கலந்து கொண்டனர்.

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினரின் 'நிலவினைக் குருடாக்க முடியாது' என்ற நாடகமும் இடம்பெற்றது. (எ-135)

# பொலிஸார்-பொதுமக்கள் இடையே நல்லுறவு மேம்பாடு அடைந்தால் அச்சமற்ற சூழல் உருவாகும்

## காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

அச்சுவேலி, டிசெ.02

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நல்லுறவுகள் சகல மட்டத்திலும் மேம்பாடு அடைவதன் மூலம் சமாதான நல்வாழ்வுக்கான ஆரோக்கியமான சூழல் உருவாகும். மக்கள் அச்சமின்றி வாழலாம்.

இந்த வகையில் நல்லுறவுக்கான நடமாடும் சேவைகள் நடைபெறுகின்றன. இதனை மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி தங்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.

இவ்வாறு கூறினார் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பண்டார ட.போவத்த.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தால் நடமாடும் சேவை ஒன்று இடைக்காடு மகாவித்தியாலயத்தில் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஸங்க ஜயரத்ன தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

பொலிஸ் நிலையங்களுக்கு மக்கள் சென்று பொலிஸாரின் சேவைகளைப் பெற்ற நிலை மாறி பொலிஸார் மக்களைத் தேடி வந்து சேவையாற்றுகின்ற ஆரோக்கியமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

பொலிஸார் மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு இத்தகைய நடமாடும் சேவையை உரியகால இடைவெளியில் தொடர்ந்து நடத்த வேண்டும். இந்தச் சேவையைப் பொது மக்கள் உரியமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சட்டத்தை மதித்து வாழும் சமூகத்தில் அமைதியான வாழ்க்கை நிலை மேம்பாடு அடையும். மக்கள் பொலிஸாரைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. நடமாடும் சேவைகள் மூலம் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நல்லுறவு வளர்க்கப்படும். பொது மக்கள் தமது வாழ்விடங்களில் தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

பொலிஸார் பொதுமக்களுக்கான சேவை முன்னெடுப்புகளை அச்சுறுத்தல் நிலையில் மேற் கொள்ளாமல் ஆரோக்கியமான சமூகச் சூழ்நிலையில் மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் பொது மக்கள் அச்சமில்லாமல் பொலிஸாரிடம் தமது குறைபாடுகள், தேவைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். - எனக் கூறினார். (ம-11)

# யாழ்-தெல்லிப்பழை பயணச் சீட்டு நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் சேவையிலீடுபடும் யாழ்-தெல்லிப்பழை ஊடான தனியார் சிற்றூர்திகள் (இல.769) பயணிகளுக்கு அச்சிடப்பட்ட பற்றுச் சீட்டுக்களை விநியோகித்து வருகிறது.

இதன் காரணமாக மேற்படி சிற்றூர்திகளில் பயணம் செய்பவர்கள் தாம் செல்லுமிடத்துக்கான பணத்தைச் செலுத்தி பயணச் சீட்டுக்களைப் பெற்று பயணம் செய்ய முடிகின்றது என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பயணச் சீட்டுக்களை முன்னர் வழங்காத காலத்தில் பயணத்துக்கான பணத்தை செலுத்திய பின்னரும் கூட சில நடத்துநர்கள் பயணத்துக்கான பணத்தைக் கேட்டு தொந்தரவு செய்ததுடன் பயணம் முடிந்து தாம் இறங்கும் இடம் வந்து சிற்றூர்தியை விட்டு இறங்கும்போது சிற்றூர்தி வாயிலில் நின்று அதை வாங்குவதில் மும்முரமாக நின்றதனால் இறங்குவதில் கூட சிரமத்தை எதிர் நோக்க வேண்டி யிருந்தது.

தற்போது இந்தச் சிரமம் இல்லை என்றும் சகல சிற்றூர்திகளிலும் பயணச் சீட்டு வழங்கும் நடவடிக்கையை தனியார் சிற்றூர்தி சங்கங்கள் மேற்கொள்ளவேண்டும் என்றும் பயணிகள் தெரிவித்தனர். (வ-300)

# இடமாற்றம்

பளை, டிசெ.2

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றிய கணபதிப்பிள்ளை வித்தியானந்தன் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்தினால் சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# நெடுந்தீவில் விடுதிகள் அமைக்க நிதி

யாழ்ப்பாணம், டிசெ.2

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபருக்கான விடுதி மற்றும் உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படவுள்ளதாக நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.சிறி கூறினார்.

உதவி அரச அதிபருக்கான விடுதி 10 லட்சம் ரூபா செலவிலும் ஆண்களுக்கான விடுதி 10 லட்சம் ரூபா செலவிலும் பெண்களுக்கான விடுதி 12 லட்சம் ரூபா செலவிலும் அமையவுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கம் கெட்டவர்கள்




சுன்னாகத்தில் இருக்கும் எனது நண்பனை ஒரு வேலை சம்பந்தமாக பார்ப்பதற்காகக் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றிருந்தேன். மருதனார்மடத்தில் இருந்து சுன்னாகத்திற்கு இடைப்பட்ட கே.கே.எஸ்.வீதியில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இந்த வீதியைத் தாண்டித்தான் நான் செல்ல வேண்டியுள்ளது. எப்படியடா இந்த வீதியைத் தாண்டிச் செல்வேன் என்று எனது மனம் படபடத்துக் கொண்டிருந்தது. மருதனார்மடச் சந்தியில் சிவப்புக் கொடியுடன் ஒரு இளைஞர் நின்று கொண்டு வாகனங்களை மறிப்பதும் நெருக்கடி குறைய விடுவதுமாக செயற்பட்டுக் கொண்டிருந்தார். அதாவது அவ்வழியே போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்.

வீதியோ போக்குவரத்துக்கு இடம் கொடுக்காமல் முழுமையாக கிளறப்பட்டு புனரமைப்பு வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. அவ்வழியே போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான சீரான மாற்றுப் பாதையில்லாமல் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. மருதனார்மடம் பக்கம் செல்பவர்களும், சுன்னாகம் பக்கம் செல்பவர்களும் அன்றைய தினம் பட்டபாடு இருக்கே அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது பாருங்கோ.

மழையும் பெய்து கொண்டிருக்கிறது. உழுது விட்ட நிலம் போல் வீதி காட்சியளிக்கிறது. ''ஸ்டாட், கமெரா, அக்சன்'' சொல்லத்தான் யாரும் இல்லை. மற்றும்படி சாதனையாளர்கள் தான் அவ்வழியே வாகனங்களில் பயணத்தை மேற்கொண்டார்கள். எப்படியடா இவ்வீதியூடாக சுன்னாகம் சென்று திரும்பி வரப் போறேனோ எனக்கே தெரியவில்லை என்று மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டு நின்றது. அடுத்ததாக நான் நின்ற வரிசை அவ்வழியே செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

எனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு மெதுவாக நகர்ந்தேன். ஒன்றன் பின் ஒன்றாக அட்டை ஊர்வது போல் நகர்ந்து சென்றோம். ஒருவாறு அந்த இடத்தை விட்டு நகர்ந்து சுன்னாகம் சென்று விட்டேன். அங்கே எனது வேலையை முடித்துக் கொண்டு திரும்பி மீண்டும் அதே வீதியால் மருதனார்மடம் நோக்கி வருகின்றேன். மழையில் சேறும் சகதியுமாக இருக்கும் மாற்றுப் பாதையூடாக மீண்டும் வரிசைப்படி நானும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தினேன். 20 கிலோ மீற்றர் வேகத்தில் எனது மோட்டார் சைக்கிள் முதலாவது கியரில் சென்று கொண்டிருந்தது. எனக்கு முன்னே ஒரு மோட்டார் சைக்கிளில் இளைஞர் சென்றுகொண்டிருந்தார். எனக்குப் பின்னே ஒரு முதியவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

எனக்கு முன்னே சென்று கொண்டிருந்த இளைஞர் மெதுவாக சென்று கொண்டிருந்தார். அந்த இளைஞனுக்கு முன்னே சென்றவர்கள் 100 மீற்றர் தாண்டிச் சென்று விட்டார்கள். நான் என்ன செய்ய முடியும்? முன்னே செல்லும் இளைஞனைத் தாண்டிச் செல்ல முடியாது. அந்த அளவுக்கு மாற்றுப் பாதை சேறும் சகதியுமாக காணப்படுகிறது.

முன்னே செல்லும் இளைஞனைத் தாண்டிச் செல்ல முற்பட்டால் கண்டிப்பாக அந்தச் சேற்றுக்குள்தான் விழுந்து கிடக்க நேரிடும் என்ற பயத்தில் அந்த இளைஞனுக்குப் பின்னே சென்று கொண்டிருந்தேன். இவ் வீதியின் மாற்றுப் பாதையின் சீரின்மையைப் புரிந்து கொண்டு எனக்குப் பின்னே வந்த முதியவர் என்னைப் பார்த்து ''தம்பி வேளைக்கு எடும்'' என்றார். நானோ அவரை திரும்பிப் பார்த்து விட்டு பேசாமல் வந்து கொண்டிருந்தேன். அந்த முதியவருக்கு கோபம் வந்து விட்டது. ''நான் சொல்லுறது விளங்கவில்லையா? பேசாமல் போறீர்'' என்று மறுபடியும் சொன்னார்.

உடனே நான் அந்த முதியவரைத் திரும்பிப் பார்த்து எனக்கு முன்னே போகும் இளைஞனை சைகை மூலம் கையால் காட்டினேன்.

அந்த முதியவரோ ''அவரை முந்திப் போமன்'' என்றார். நான் இதற்கு எப்படிப் பதில்சொல்ல முடியும். அந்த இளைஞனை வேகமாகப் போகும்படி என்னால் சொல்ல முடியாது. ஏனெனில் அந்த இடத்தில் சறுக்கி விழுந்து அந்த இளைஞனுக்கு ஏதாவது ஒன்று நடந்தால் என்ன ஆகும். அதனால் பேசாமல் அந்த இளைஞன் பின்னே வந்து கொண்டிருந்தேன். ஆனால் எனக்குப் பின்னே வந்த முதியவர் என்னை முந்திச் செல்ல முடியாமல் என்னைத் திட்டிக்கொண்டு வந்தார். ''மோட்டார் சைக்கிள் ஓடத்தெரியாததுகள் எல்லாம் இப்ப மோட்டார் சைக்கிள் ஓடுதுகள்'' என்று திட்டிக் கொண்டு வந்தார்.

அவருக்கு ஏதோ ஒரு அவசர வேலை இருப்பது தெரிகிறது. அதனால் அவரின் திட்டை தாங்க முடியாமல் எனக்கு முன்னே சென்ற இளைஞனை ஒருவாரு தாண்டிச் சென்று மருதனார் மடத்துக்கு வந்து சேர்ந்தேன். சிறிது நேரம் விட்ட மழை மீண்டும் பெய்யத் தொடங்கியது. மருதனார் மடத்துச் சந்தியில் உள்ள ஒரு கடையில் ஒதுங்கினேன். அப்போது எனக்குப் பின்னே வந்த முதியவர் மழையில் நனைந்து கொண்டு வந்து நான் நிற்கும் அந்தக் கடையில் ஒதுங்கினார்.

நான் அங்கு நிற்பதைப் பார்த்ததும் வெட்கத்தில் ஒரு புன்னகையோடு தலை குனிந்து நின்றார். நான் அவர் பக்கம் சென்று ''ஐயா இதில யார் வெட்கப்பட வேண்டும். நீங்களும் இல்ல, நானும் இல்ல. நீங்கள் என்னை விரைவாகப் போகும்படி சொன்னதால்தான் நான் மழையில நனையாமல் வந்து சேர்ந்து விட்டேன். அதேபோல்தான் இந்த வீதியின் புனரமைப்பில் ஈடுபடுபவர்களுக்கும் ஒரு உந்து சக்தி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த வீதி உறுதியாகவும், நீண்ட காலத்துக்குப் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். இந்த வீதியைப் போட வெளிக்கிட்டவைதான் வெட்கப்பட வேண்டும்.

வீதியைப் புனரமைப்புச் செய்ய வெளிக்கிடும்போது மாற்றுப் பாதையை அறிவித்துவிட்டுத்தான் புனரமைப்பு வேலையில் இறங்க வேண்டும். ஆனால் இங்கே அப்படி எதுவும் நடப்பதில்லையே என்றேன். அந்த முதியவரோ விளங்கிக் கொண்டு ''அங்கு நான் உங்களுடன் கதைத்தவற்றுக்காக வெட்கமடைகின்றேன்'' என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA SRILANKA
# VACANCIES

Applications are invited by me up to 31st December, 2011 from suitably qualified applicants for the following posts:

**1. POST – UNIVERSITY MEDICAL OFFICER – UMO 1 (VACANCIES EXIST AT UNIVERSITY OF JAFFNA & VAVUNIYA CAMPUS)**

The University is looking for a highly motivated individual capable of working as a team member with a group of Doctors. Training in counselling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**Note**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale : Rs.27,485-10X585;22X735-49,505/- p.m.**
**Selection By : Interview.**

**2. PUBLIC HEALTH INSPECTOR, GRADE II(U-MT 1 (III)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health and at least three years experience since qualifying.

**Salary Scale : Rs.16,260-5X130;2X155;10X185-19,070/- p.m**
**Selection : By Aptitude test and Interview**

**3. POST – AUDIO VISUAL TECHNICAL OFFICER – UMN4(II)**

**Qualifications :**

a. Diploma in Technology of the Open University or Special Engineering Apprenticeship Certificate issued from 1975 or National Diploma for Engineering technicians issued from 1989 by the National Apprentice Board or National Diploma in Technology or City and Guilds Final Certificate in the fields of Electronics or Power, together with one year's experience in relevant video work.
-OR-
b. Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with 01 year experience in relevant video work.
-OR-
c. Pass 03 subject at the G.C.E(A/L) examination in Science in one sitting and 06 years experience in Audio Visual Work.

**Salary scale : Rs.21,475-10x290;1x420-24,795 p.m**
**Selection : By Interview**

**4. POST-FULL TIME SUB-WARDEN GRADE II (MALE) [U-MN 3 (III)] (VACANCY EXISTS AT VAVUNIYA CAMPUS)**

**Qualifications :**

A graduate of a recognized University.
Preference will be given to those with experience in administration and management of hostel.
Preference will be given to those who have experience in handling the matters related to students' welfare and disciplines.

**Note1:**

The successful applicant should reside in the hostel. But, he/she cannot reside with his/her family.
The successful candidate should pay a refundable security deposit of Rs.10,000/=, This amount shall be deducted from his/her salary in 10 instalments.

**Salary Scale : Rs.21,475 – 10 x 290 ; 1X420– 24,795 p.m**
**Selection : By Test and Interview**

**5. POST - SUPERVISOR (CIVIL) GRADE III [U-MT 1 (III)] (VACANCY EXIST AT UNIVERSITY OF JAFFNA)**

**Qualifications**

1. National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT Course
OR
2. G. C. E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings with at least 5 years experience as a Supervisor, in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Salary Scale : Rs.16,260-5X130;2X155;10X185-19,070/- p.m.**
**Selection : By Test and Interview**

**6. POST – MARSHAL – GRADE II [U – MN1(I)] (VACANCY EXISTS AT VAVUNIYA CAMPUS)**

**Qualifications:**

1. A Graduate from a recognised University
2. Age – Between – 30- 45 years.
3. Physique: Height: 5' 5"
Chest : 32" deflated

**Note:**

Preference will be given to those with Police Armed Forces background and active Participation in Sports Activities, Social Welfare Activities within the University and at National Level.

**Salary Scale : Rs.19,095 – 5x185; 16 x 245 – 23,940 p.m**
**Selection : By Interview**

**STATUTORY BENEFITS**

1. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
2. Gratuity payments.
3. Employment Trust Fund benefits.
4. Free medical service

*** Age limit for all the above posts 45 years except Post of Marshal

**Note** : In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid to all posts.

Applications should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on a payment of Rs.100/- for each application form at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna , together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x 10 c.m., in size. Applications sent on specified forms will only be accepted. Applicants from Government Departments/State Corporations and Statutory Bodies should apply through their Head of the Department. Age limit is not applicable to those who are in service.
Applications received after the closing date will be rejected without intimation.


**REGISTRAR**
**University of Jaffna**
**30.11.2011**

(c/6441)(5-6,9)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
## 02.12.2011

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திரு.திருமதி
**லவகீசன் - தர்ஷிபா** தம்பதியினரின்
செல்வப் புதல்வி **ரக்ஷயா** தனது முதலாவது பிறந்த
தினத்தை இன்று (02.12.2011) வெள்ளிக்கிழமை தனது
இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா,
பூட்டிமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், தாத்தாமார்,
அம்மம்மாமார், பெரியப்பா, பெரியம்மா, மாமாமார்,
சித்தப்பாமார், அத்தைமார், சித்தி, அக்கா (பர்ஷியா),
தம்பி (நவ்தீஸ்) அனைவரும் எல்லாம் வல்ல வண்ணை
வைத்தீஸ்வரன் வாலாம்பிகை அருள்
பெற்று சீருடனும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றார்கள்.

**ம.லவகீசன் (லவன்)**




ல. ரக்ஷயா

இல.67/32,சீனிவாசகம் வீதி,
"தர்மலிங்கம் அவனியூ"
, யாழ்ப்பாணம்.

[1107З][2-6-9]

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Work / Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Rehabilitation and refurbishment of a Seminar Hall, Language and E-Learning Laboratories for Staff Development Centre | 40,500.00 | 500.00 | 4.05 | C8 |

Bid forms may be obtained from the ***Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna from **December 02, 2011** until **December 08, 2011** from **9.00 hrs. to 15.00 hrs.**

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till ***10.30 am on 12.12.2011*** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

**P.O Box 57,**
**Thirunelvely, Jaffna.**
**30.11.2011**

(சி/6448) (2-6-9)

**Registrar**
**University of Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றங்கள் மூலமாக மாணவரின் திறனை வளர்ப்பதில் சிறப்பாகச் செயற்படும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

*(சென்றவாரத்தொடர்ச்சி)*




சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரிய வளமும் காணப்பட்டமையால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, க. பொ. த உயர் தரப்பரீட்சை போன்றவற்றில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக்கொண்டு வருகின்றமை பாடசாலையின் இன்னொரு சிறப்பம்சமாகும்.

பாடசாலையின் தற்போதைய மாணவர் தொகையானது தரம் 1 முதல் தரம் 13வரை ஆயிரத்து 601 ஆக உள்ளது.

இந்த மாணவர்களின் பெற்றோர்கள் நிரந்தர தொழில்களையும், பொருளாதார வளத்தையும் தம்மகத்தே கொண்டு காணப்படாவிட்டாலும், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டு காணப்படுவது ஆசிரியர்களின் சிறந்த கற்றல் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக உள்ளது.

மாணவர்கள் தமது பாடத் திட்டங்களுக்கு ஏற்ப சகல துறைகளிலும் கல்வி கற்பதற்கு ஏற்றதாக இங்கு 53 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்த ஆசிரியர்களில் இரு ஆசிரியர்கள் தற்காலிக இணைப்பிலும், 7 ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்கள் தமது கற்றல் பணிகளுடன் மட்டும் நின்று விடாமல் கல்வித்தர மேம்பாட்டு அபிவிருத்தித்திட்டங்கள், பயிற்சிகள் போன்றவற்றையும் பெற்று வருகின்றனர்.

மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதிலும், தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்வதிலும், எமது பண்பாடு, கலாசார விழுமியங்களைப் பேணுவதிலும், கல்லூரியில் பல மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

உயர்தர மாணவர்களின் ஆற்றல்களையும், பன்முக ஆளுமையையும் வளர்க்கும் செயற்பாட்டை உயர்தர மாணவ மன்றமும், இந்துக் கலாசார பண்பாடுகளை மாணவர்களிடையே ஊக்குவிக்க இந்து மன்றமும், தமிழ் மொழியின் தாற்பரியத்தை விளக்கத் தமிழ் மன்றமும், அறிவியல் ரீதியான பாடரீதியான தகவல்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ள கணித, விஞ்ஞான மன்றமும், சமூக செயற்பாடுகளைக் கொண்டு வர சமூகவியல் மன்றமும், ஆங்கில மொழித்திறனை வளர்க்க ஆங்கில மன்றமும், வணிகத்துறை சார்ந்த விளக்கங்களைக் கொண்ட வணிக மன்றமும், ஆரம்பப்பிரிவு மாணவர்களின் திறன்களை விருத்தி செய்ய ஆரம்பப்பிரிவு மன்றமும் செயற்பட்டுவருகின்றது.

அத்துடன் சிரமதானங்கள், டெங்கு ஒழிப்பு செயற்றிட்டங்கள், கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்வு, சுகாதாரக் கண்காட்சி, பாடசாலையின் தூய்மையைப் பேணுதல், மாணவர்களின் உடல் நல ஆரோக்கியத்தை வலுப்படுத்தல், கருத் தரங்கு, விழிப்புணர்வுக் கூட்டங்கள் போன்ற செயற்பாடுகளை சுகா தாரக்கழகம் மேற்கொண்டு வருகின்றன.

### சோபனா

அத்துடன் மாணவர்களின் அறிவுத் தேடல்களுக்குச் சிறந்த இடமாக நூலகம் தனது செயற்பாடுகளை வழங்கிவருகின்றன. கல்லூரியில் இடம் பெறும் விழாக்களை மெருகூட்ட மேலைத்தேய வாத்தியக் குழு சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் சிறப்பான சேவைகளை வழங்கி வருகின்றது.

(தொடரும்)




அகில இலங்கை சபரிமலை

ஸ்ரீ சாஸ்தாபீடம்

மகரஜோதிப் பெருவிழா 18 ஆம் நாள்

மஹிஷி சங்காரம்

ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் - கொழும்பு - 13

(கொச்சிக்கடை - தம்பையா சத்திரம்)

கார்த்திகை 18 ஆம் நாள் (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை

மாலை 4 மணிமுதல் - 6 மணிவரை

இலங்கைத் திருநாட்டில் வேறெங்கும் காணமுடியாத வகையில் அதிபயங்கர வாள் விளையாட்டு, வில் விளையாட்டுக்களுடன்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி - சபரிமலைக் குருஜீ

ஆன்மீக அருள் ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்

தலைமையில் வேட்டைத் திருவிழா நடைபெறும்.



சுபஸ்ரீ.சாம்பசிவ மணிகண்டசர்மா
(ஸ்ரீசாஸ்தாபீட இளவரசன்)

நித்ய. சுதானந்தசர்மா
(J.D.M. சங்கானை
நிர்வாகப் பொறுப்பாளர் - ஸ்ரீசாஸ்தாபீடம்)

[10918][2-6-9]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிலும் இறப்பர் செய்கை

## மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.2


இறப்பர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக வடக்கிலும் கிழக்கிலும் இறப்பர் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதிகளிலும் மலையகப் பகுதிகளிலும் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இறப்பர் செய்கைகளை வடக்கு, கிழக்குக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்கீழ் வடக்கு, கிழக்கில் இறப்பர் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது தொடர்பாகத் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வின் பின்னர் ஆரம்ப கட்டமாக முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்பு கிழக்குக்கும் விஸ்தரிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தருமாறு வலியுறுத்தி பல்கலைக்கழக அனைத்து மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த கறுப்புப்பட்டி அணிந்த போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம் பெற்றது.

# வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

## பணிப்பாளர் சமரசிங்க கூறுகிறார்

கொழும்பு,டிசெ.2

இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களத்தில் வானிலை ஆய்வு நிபுணர் பதவிகளில் 6 வெற்றிடங்கள் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் எம்.டி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பலர் திணைக்களப் பதவிகளுக்குத் தெரிவாகின்றபோதும் பின்னர் வேறு உயர் சம்பளம் கிடைக்கக்கூடிய தொழில்களுக்குச் சென்று விடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட கால நிலை அனர்த்தம் தொடர்பில் வானிலை அவதான மையம் முன் கூட்டியே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசத்தில் தாழ்ந்த காற்றமுத்த மண்டலமே உருவாகியிருந்தது. காற்றழுத்த மண்டலம் இந்தளவு சேதங்களை உருவாக்கும் என்று தாம் எதிர்பார்க்கவில்லை- என்றார்.

தென்பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட காலநிலை அனர்த்தத்தின்போது வளிமண்டலவியல் திணைக்களம் உரிய முறையில் செயற்படவில்லை என்று கூறி, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர விசாரணைக்குழு ஒன்றை அமைக்கப் போவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 42,000 பட்டதாரிகள் வேலையில்லாது நிர்க்கதியில்

நாட்டில் 42,000 பட்டதாரிகள் வேலையற்று நிர்க்கதி நிலையில் இருக்கின்றனர் என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 4 லட்சம் இளைஞர், யுவதிகளும் வேலையற்று இருக்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்த நிவாரணம் கிடைக்க வில்லை என்று அவர் குறிபிட்டுள்ளார்.

2012 வரவு - செலவுத் திட்டத்தில் எவ்வித நிவாரணமும் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# காட்டு யானை தாக்கியதில் ஒருவர் பலி

கொழும்பு,டிசெ.2

தம்புள்ளை, சீகிரியாப் பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை சீகிரியா, தாயம்வலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

யானை தாக்கியதில் மரணமடைந்தவரின் சடலம் தற்போது சீகிரியா, கிம்பஸ்ஸ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# 3 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:
25.01.1947



மறைவு:
05.12.2008

## அமரர் லயன் தணிகாசலம் ஜெயநாதன்

(உரிமையாளர், கமக்கார மாளிகை - சுன்னாகம், உழவர் களஞ்சியம் - திருநெல்வேலி)

திதி: கார்த்திகை ஸப்தமி
(2.12.2011)

நல்வழி காட்டிய எங்கள் குடும்பத்தின்
ஒளி விளக்கே எங்கள் அப்பா
ஆறாத் துயரத்தில் எங்களை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயிலில் எங்கே மறைந்தாய் அப்பா
ஊர் உறங்கும் பொழுது கூட
நீர் உறங்காது பெயர் சொல்லி கூப்பிட்டு
பரிவு காட்டுவீர்களே அப்பா
தங்கள் சுகம் தேடாது எங்களது நலனுக்காய்
வாழ்ந்தீர்களே அப்பா
எது நிகழ்ந்து விடக் கூடாது என
நினைத்து ஆண்டவனை மன்றாடினோமோ
அது நிகழ்ந்து விட்டது அப்பா
புன்னகை வெள்ளமாய் திரிந்த
உம் மனைவி பிள்ளைகளை நீர்
கண்ணீரும் கம்பலையுமாய்
ஆக்கிவிட்டு எங்கு சென்றீரோ
நாம் இருட்டில் இருக்கின்றோம்
எப்படி உம்மால் தனியே போக முடிந்தது அப்பா???
நீர் போன நாள் முதலாய் நிம்மதி இல்லை அப்பா
நினைவிழந்து செயலிழந்து நிர்க்கதியாக நிற்கின்றோம்
பாசம் கொண்டாடி மகிழும் உங்கள்
முகம் காணவே துடிக்கின்றோம் - அப்பா
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
நாம் வாழும் காலம் வரை உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்கா - அப்பா
உமது ஆத்மா சாந்தி அடையட்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


இணுவில் கிழக்கு, இணுவில். குடும்பத்தினர்

(11059)(1,6,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கருத்தரங்குக்குச் செல்ல தமிழக பேராசிரியர்களுக்கு அனுமதியளிக்கக் கூடாது

### ஜெயலலிதாவிடம் வைகோ வலியுறுத்து



கொழும்பில் நடைபெறவுள்ள மனிதவளக் கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தமிழகத்தில் உள்ள பல் கலைக்கழகங்கள், கல்லூரிகளில் இருந்தும், அரசு நிறுவனங்களில் இருந்தும் யாரையும் இலங்கை செல்ல அனுமதி அளிக்கக்கூடாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடம் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டிசம்பர் 14, 15 ஆம் திகதிகளில் கொழும்பில் 'இன்ஸ்டியூட் ஒவ் ஹியூமன் டெவலப்மென்ட் அன்ட் டிரெய்னிங், ஸ்ரீலங்கா' என்ற நிறுவனத்தின் சார்பில் மனிதவளக் கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல கொழும்பு பல்கலைக் கழகம் டிசம்பர் 19, 20, 21 ஆம் திகதிகளில் கொழும்பில் ஒரு கருத்தரங்கத்தை நடத்துகின்றது.

இதில் பங்கேற்க லட்சக் கணக்கான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டது குறித்து எவ்வித கவலையும் கொள்ளாத, இந்தியாவின் பல பல்கலைக் கழகங்களில் இருந்தும் விரிவுரையாளர்கள் செல்கிறார்கள். அதேபோல தமிழ்நாட்டின் சில பல்கலைக்கழகங்களில் இருந்தும் விரிவுரையாளர்கள் கலந்து கொள்ள ஆயத்தமாகி வருகிறார்கள். கருத்தரங்கம் நடத்தும் அமைப்பினர் அவர்கள் பெயர்களை வெளியிட்டு இருக்கிறார்கள்.

இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ள நிலையில், தமிழகப் பல்கலைக் கழகங்களில் இருந்தும், அரசுக்கல்லூரிகளில் இருந்தும் விரிவுரையாளர்கள் இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வது, கோடிக்கணக்கான தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக உள்ளது.

எனவே, தமிழகத்துப் பேராசிரியர்கள் இலங்கை செல்வதைத் தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசும் தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் இருந்தும், அரசு நிறுவனங்களில் இருந்தும் யாரையும் இலங்கை செல்ல அனுமதி அளிக்கக்கூடாது என்று ம.தி.மு.க. சார்பில் வலியுறுத்துகிறேன். -என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு தீவிரம்

மதுரை, டிசெ.2

பாபர் மசூதி இடிப்பு தினம் எதிர்வரும் 6ஆம் திகதி கடைப் பிடிக்கப்படுவதை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம் உள்ளிட்ட அனைத்து ரயில் நிலையங்களும் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ரயிலில் பொதிகள் அனுப்ப 3 நாள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

டிசெம்பர் 6 ஆம் திகதி பாபர் மசூதி இடிப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. இதனால் நாடு முழுவதும் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். சென்னை சென்ட்ரல், எழும்பூர், மூர் மார்க்கெட், தாம்பரம் ஆகிய ரயில் நிலையங்களில் தமிழக ரயில்வே பொலிஸாரும், ரயில்வே பாதுகாப்புப் படையினரும் இணைந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் நவீன கமராக்கள் மூலம் பயணிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

ரயில் நிலையங்களுக்கு வரக்கூடிய அனைத்து வாசல்களும் அடைக்கப்பட்டு முக்கிய நுழைவு வாயில் வழியாக மட்டுமே பயணிகள் அனுமதிக்கப் படுகின்றனர். பயணிகளின் உடைமைகள் ஸ்கேனர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டு மெட்டல் டிடெக்டர் கருவி பொருத்தப்பட்ட நுழைவு கதவுகள் மூலம் உள்ளே அனுமதிக்கப்படுகின்றன.

இந்த கண்காணிப்பு எதிர்வரும் சனிக்கிழமை முதல் மேலும் தீவிரப்படுத்தப்படும். பாபர் மசூதி இடிப்புத் தினத்தையொட்டி ரயிலில் பொதிகள் அனுப்ப 3 நாட்களுக்கு தடை விதிக்கப் படுகிறது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் பொதிகள் பதிவு செய்யப் படமாட்டாது. வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர்களின் வேலை நிறுத்தம் 2 ஆவது நாளாகத் தொடர்கிறது

ராமேஸ்வரம், டிசெ.2

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் நடத்தும் வேலை நிறுத்தம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர் கிளாடுவின் படகிலிருந்த எமர்சன், பிரசாத், வில்சன் உள்ளிட்ட 5 மீனவர்களை இலங்கை கடற் படையினர் படகுடன் சிறைப் பிடித்துச் சென்றனர். இலங்கை நெடுந்தீவு கடற்படை முகாமில் கடற்படை வசம் உள்ள ஐந்து மீனவர்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்ற தகவல் கிடைக்கவில்லை என்பதால் அவர்களது வேலை நிறுத்தம் தொடர்கிறது.




உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு ஒரிசா மாநிலம் புவனேஸ்வர கடற்கரையில் பிரபல மணற் சிற்ப கலைஞர் சுபல்மோக ரானா, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைத்த மணற்சிற்பம் பார்வையாளர்களைக் கவர்ந்தது.

# அந்தமான் நிக்கோபார் தீவுகளில் நிலநடுக்கம்

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நேற்றுக் காலை 5.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்தியாவின் யூனியன் பிரதேசங்களில் ஒன்றான அந்தமான் நிக்கோபார் தீவுகளில் நேற்றக்காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ஏற்பட்டபோது மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆக பதிவாகியது. இருப்பினும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை.

## மாவோயிஸ்ட்டுகள் வன்முறையைக் கைவிட்டால்

# பேச்சுக்கான திகதி 72 மணி நேரத்தில் வெளியிடப்படும் என்கிறார் சிதம்பரம்



மாவோயிஸ்ட்டுகள் வன்முறையை கைவிட்டு பேச்சுக்கு வர வேண்டும். அவ்வாறு வன்முறையைக் கைவிட்டால், 72 மணி நேரத்தில் பேச்சுக்கான திகதி வெளியிடப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் சிதம்பரம் கூறுகையில்:

மாவோயிஸ்ட்டுகள் பேச்சுக்கு வருவர் என்று நாம் நம்புகிறோம். வன்முறையால் எந்தப் பலனும் கிடைக்காது. யாருக்கும் அரசு அடிபணியாது. மாவோயிஸ்ட் தலைவர் கிஷன்ஜி, பொலிஸ் என்கவுன்டரில் தான் சுட்டுக் கொல்லப்பட்டார். என்கவுன்டர் களை ஊக்கப்படுத்த மத்திய அரசு விரும் பவில்லை. அதனால், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் டைரக்டர் ஜெனரலை, நான் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு பேசினேன்.

மேலும், கிஷன்ஜி கொல்லப்பட்டது தொடர்பாக, விசாரணைக்கும் மேற்குவங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மாவோயிஸ்ட்டுகளும், வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பயங்கரவாதிகளும் வன்முறையை கைவிட்டு, பேச்சு வந்தால், கௌரவமாகவும், மரியாதையாகவும் நடத்தப்படுவர். அவர்களின் அரசியல் கோரிக்கை பேச்சுகள் மூலமாக தீர்க்கப்படும் -என்றார் அவர்.

# தமிழக மீனவருக்கு எதிரான காவல் படையின் மனுவை உடன் திரும்பப் பெற வேண்டும்

### மன்மோகனிடம் தி.மு.க. வலியுறுத்து

புதுடில்லி, டிச.2

குறிப்பிட்ட கடல் பகுதியில் மீன்பிடிக்கத் தடை விதிக்க வேண்டும் என்ற இந்திய கடலோரக் காவல் படையின் பதில் மனுவைத் திரும்பப் பெற வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து வலியுறுத்தினர். அவர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இரண்டு கோரிக்கை களை முன்வைத்தனர்.

தமிழக மீனவர்கள் மீது நடைபெறும் தாக்குதல்களைத் தடுக்க கடலோர எல்லைப் பகுதியில் 5 மைல் தூரப் பகுதியை 'மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்ட பகுதி' என்று அறிவிக்கவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் கடலோர காவல் படையினர் பதில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இதனால் மீனவர்களின் உரிமை பறிக்கப்படுகிறது. இதில் பிரதமர் தலையிட்டு நீதிமன்றத்தில் கடலோரக் காவல் படையினர் தாக்கல் செய்துள்ள மனுவைத் திரும்பப்பெற உத்தரவிடவேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த உச்சநீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை கேரள அரசு நடைமுறைப்படுத்தவில்லை. இந்த விவகாரத்தில் கேரள அரசு தவறான பிரசாரத்தைப் பரப்பி வருகிறது. 'டேம் 999' திரைப்படத்தை இந்தியா முழுவ தும் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தி.மு. கவின் எம்.பிக்கள் மன்மோகனிடம் வலியுறுத்தினர்.

# உலகிலேயே அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடு இந்தியா

உலகிலேயே இந்தியா தான் மிக அதிகமான ஆயுதங்களை இறக்குமதி செய்து வருவதாக பிரபல வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் பத்திரிக்கையான, Foreign Policy magazine தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் இந்தப் பத்திரிகை கடந்த ஆண்டில் இடம்பெற்ற, வெளியில் தகவல் தெரிய வராத சில முக்கிய உலக நிகழ்வுகள் குறித்து செய்தி வெளியிடவுள்ளது. இந்தக் கட்டுரையில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்களாக:

ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட மாபெரும் விமானம் தாங்கிக் கப்பலை பல்லாயிரம் கோடி செலவில் நவீனப்படுத்தியுள்ள சீனா, அதன் சோதனை ஓட்டத்தையும் ஆரம்பித்துவிட்டது. இது தவிர தானே புதிதாக விமானம் தாங்கிக் கப்பலைக் கட்டும் வேலைகளையும் சீனா ஆரம்பித்துள்ளது. கிழக்கு ஆசியா, சீனக் கடல் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த சீனா தீவிரமாக களமிறங்கியுள்ளது.

சீனா மட்டுமல்ல, இந்தியாவும் தனது ஆயுத பலத்தைப் பல மடங்கு அதிகரித்து வருகிறது. குறிப்பாக சீன எல்லைப் பகுதியில் இந்தியாவின் படை பலம் இதுவரை இல்லாத அளவுக்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. எல்லையின் சில இடங்களில், சீனாவைவிட இந்தியாவின் படை-ஆயுத பலம் அதிகமாக உள்ளது.

2011 ஆம் ஆண்டில் உலகிலேயே மிக அதி கமாக ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடும் இந்தியா தான். 2006-2010 ஆண்டுகளில் உலகின் மொத்த ஆயுத கொள்முதலில் 9 சத வீதத்தை இந்தியா தான் மேற்கொண்டது. அதில் பெரும்பாலான ஆயுதங்கள் ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டன.

2015ஆம் ஆண்டுக்குள் தனது படை, ஆயுத பலத்தை நவீனப் படுத்த இந்தியா 4 லட்சம் கோடி ரூபாயை (80 பில்லியன்) செலவிட உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி தாமோதரம்பிள்ளை சின்னப்பிள்ளை

தாயின் மடியில்
14.06.1930

ஆண்டவனடியில்
13.12.2010

ஆண்டு ஒன்று ஆன போதும்
ஆறவில்லை அம்மா எம்துயரம்
பாசத்தின் உறைவிடமாய் இருந்த
உங்களை எப்படி அம்மா
மறக்க முடியும்? உங்கள்
நினைவுகள் என்றென்றும்
எம்மை விட்டு அகலாது.

என்றென்றும் உங்கள் நினைவுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

தையிட்டிப்புலம்,
வித்தகபுரம்,
தெல்லிப்பழை.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள், பேட்டுக் குஞ்சு கள், ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு செய்யவும். தொடர்பு:

1. நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், சந்தையடி, கிளிநொச்சி. 0776225944

(10964)(9-6-8)

## 100 ஆவது பிறந்த தினமும் 22 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும்



பிறப்பு:
02.12.1911

இறப்பு:
25.01.1990

### அமரர் வே.திருமேனி ஐயாத்துரை

(கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி
பிறந்த இடம் - உசன்)

உங்கள் நினைவுகள் என்றும் எங்கள்
இதயங்களில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் குல தெய்வமாகிய வைரவப் பெருமானையும்
சந்தன முதலச்சிபுலம் முருகமூர்த்திப் பெருமானையும்
பிரார்த்திக்கின்றோம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(11704)(1,6,9)

## அறிவுறுத்தல் கூட்டம்

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கடமையாற்றும் பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறும்.

மேற்படி கூட்டத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தென்மராட்சி மற்றும் தீவக வலயத்தைச் சேர்ந்த இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், பரீட் சை நிலைய மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம)

## FOR SALE

New window Type
Room air conditioner

Trade mark - UGINE
Power input rating - 2560W
Cooling capacity -18000 Btu/h
Contact - 0778002591

(14021)(9-6-8)

## தவறிவிட்டது

இரவீந்திரகுமார் விஷ்ணுகா என்பவரது வைத்திய அறிக்கை அடங்கிய கோவை(FILE) 01.12.2011 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் புன்னாலைக் கட்டுவன் யாழ்ப்பாணம் பஸ் பயணத்தின் போது தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

இரவீந்திரகுமார், செபஸ்ரியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் OR 0214904889

## வீடு வாடகைக்கு

கொக்குவில், குளப்பிட்டி சந்தியில் இருந்து ஆனைக்கோட்டை செல்லும் வீதியில் 7 பரப்புக் காணியில் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்/ அலுவலகங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0217900205, 0776944105

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உனது திருநாமம் அச்சிர்க்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இந்தச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எந்தக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உமில் நிலையத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

(10940)(6.3.9) அடியாள்.

## எட்டாம் திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நலம் வேண்டி பிரார்த்தித்து மாதாந்தம் நாயன்மார் நால்வரை எழுந்தருளச்செய்து நடத்தி வரும் பன்னிரு திருமுறை முற்றோதலில் எட்டாம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் முற்றோதல் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறுகிறது.

இவ்வோதல் தினமும் காலை 8 மணிக்கு ஆலயப் பூஜையைத் தொடர்ந்து இடம்பெறுகின்றது. (வ)

## அர்ச்சனா அக்கடமி

கைவழி அச்சுக்கலை பயிற்சிநெறி

தென்மராட்சி யுவதிகளுக்கு அரிய வாய்ப்பு



சாறி, சுடிதார், ரீசேட் போன்ற சகல துணிகளிலும் கைவழி முறையில் ஸ்கிரீன் பிறிண்டிங் செய்யும் 2 நாள் பயிற்சிநெறி சிதானந்தா அக்கடமியால் நடத்தப்படவுள்ளது.(சான்றிதழ் வழங்கப்படும்)

இடம்: சாவகச்சேரி நகரசபை மண்டபம்
காலம்: டிசெம்பர் 3,4 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு)
முற்பதிவு: டிசெம்பர் 1,2 ஆம் திகதிகள் (வியாழன், வெள்ளி)

தொடர்புகள்: 077513 2255, 0719062847 (11058)(1,6,25)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இந்திராணி சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு, இல. 19 பண்டாரக்குளம் ஒழுங் கையைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி சுந்தரலிங்கம் (29.11.2011) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொறியியலாளர் ஆர். சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், கனடாவில் வசிக்கும் லிங்கேந்திரன், காலஞ்சென்ற டாக்டர் யோகேந்திரன் மற்றும் இரவீந்திரன், அமிர்தா ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
ஜெயவாணி குகானந்தன்,
புத்தளம்.

(11074)(6/9/8)

### சுப்பையா சறோஜினிதேவி (பேபி)



தொண்டமானாறு, செல்வச்சந்நிதி கோயிலடியைச் சேர்ந்த சுப்பையா சறோஜினிதேவி (28.11.2011) திங்கள் அகால மரணமானார்.

அன்னார் சுப்பையாவின் அன்பு மனைவியும் நாகவதனி (பிரான்ஸ்), ரமேஸ் (பிரான்ஸ்), ஜரேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2011) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

தகவல்:
சி.சுப்பையா (கணவர்)

(11079)(3,6,9)

## அரியதோர் சந்தர்ப்பம்

புதிய வகை Foton வாகனங்கள்

8,95,000.00 மட்டுமே

மிகக் குறைந்த ஆரம்பக் கட்டணமாகிய 100,000.00 ரூபாய் உடன் மிகக்குறைந்தளவு வட்டி வீதத்தில் Bank Of Ceylon மூலம் இலகு Leasing முறையில் இவ் வாகனங்களை பெற்றுக் கொள்ளலாம்.....!!

மேலதிக விபரங்களுக்கு :- 0777911442

இச்சலுகை குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே...




Name : Foton Forland truck , Engine capacity:Four-cylinder, In-line, Water Cooling, Four-stroke, Diesel Engine 1809cc japan Technology, load capacity : 1250kg, box size :8 1/2' * 5' mileage :up to 20KMPL, warranty : 1 year or 50,000 km, option : 3 drop side, 5 forward, digital crstal, rear sig wheel,single bettery,LED Light ,front spring,spring up,for lamp,fabric seat, air conditioned,FM radio .

JOHN DEERE
MASSEY FERGUSON
SAJEE MOTORS
DAVE
Mata Group of Companies

DEALES IN Brand-new & Recondition Tractors, Motorcycle, Spareparts and Agriculture products

121,KANDY ROAD,KILINOCHCHI. Tele No:- 94-492-5623/4, Fax No :-+94-228-5376 , Email:- sajeemotos@live.com

## இதயம் மறவா 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி இராசரத்தினம் பாக்கியம்

மலர்வு
07.08.1932

உதிர்வு
08.12.2005

திதி: பூர்வபட்ச அட்டமி
(02.12.2011 வெள்ளிக்கிழமை)

தடைக் கற்களை படிக் கற்களாக்கி தரணியில்
தலை நிமிர வைத்த தங்க அம்மாவே
புன்னகை பூக்கும் பூமகளே
கண்ணெனக் காத்த கண்மணியே
ஆண்டு ஆறு ஆனாலும் உங்கள்
அன்பு முகத்தை மறக்க முடியவில்லையே அம்மா
உங்கள் நினைவுகள் எம்மனதை
விட்டு என்றும் அகலாது நிறைந்து இருக்கும்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நிரந்தர முகவரி:
'மலர்வாசம்
மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
இல.43ஏ, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(11062)(6,8,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் நாட்டு இராஜதந்திரிகள் அனைவரும் நாடு கடத்தப்படுவர்

## பிரிட்டன் அறிவிப்பு

தெஹ்ரான்,டிசெம்.02

தெஹ்ரானில் அமைந்துள்ள பிரிட்டன் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து பிரிட்டனில் கடமையாற்றி வரும் சகல ஈரானிய இராஜதந்திரிகளும் நாடு கடத்தப்பட உள்ளதாக அந்தநாட்டு அரசு அறிவித்துள்ளது.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் அமைந்துள்ள பிரிட்டன் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்ததாவது;

பிரிட்டனில் உள்ள சகல ஈரானிய இராஜதந்திரிகளும் நாடு கடத்தப்படுவதுடன் பிரிட்டனில் அமைந்துள்ள ஈரானிய தூதரகத்தை மூடிவிடுமாறு உத்தரவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் மீது மேலதிக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என பிரிட்டன் அறிவித்ததைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஈரானியர்கள் தெஹ்ரானில் அமைந்துள்ள பிரிட்டன் தூதரகம் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இதனையடுத்தே எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் லண்டனில் அமைந்துள்ள ஈரானிய தூதரகம் மூடப்பட வேண்டும் எனவும், சகல இராஜதந்திரிகளும் நாடு கடத்தப்பட வேண்டுமெனவும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

குறிப்பிட்ட நாட்டில் எம்மால் ராஜதந்திரப் பணிகளை மேற்கொள்ள முடியாவிட்டால் சுதந்திரமாக இயங்க அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த அவர் ஈரானுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் பலவீனமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரிட்டன் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வருத்தமளிப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

விமானத் தளத்திலிருந்து வெளியேறுமாறு விடுத்த

# 15 நாள் காலக்கெடுவை நீடிக்க பாக். ஜனாதிபதி சர்தாரி மறுப்பு

இஸ்லாமாபாத்,டிசெம்.2

ஆப்கன்-பாகிஸ்தான் எல்லைப்பகுதியிலுள்ள தீவிரவாதிகளின் இலக்குகளை ஏவுகணைகளைக் கொண்டு தாக்கப் பயன்படுத்தி வரும் ஷம்சி விமானத்தளத்தை விட்டு வெளியேறுவதற்கு பாகிஸ்தான் அரசு கொடுத்துள்ள 15 நாள் கெடுவை நீடிக்க அந்நாட்டு அதிபர் ஆசிப் அலி சர்தாரி மறுத்துள்ளார்.

சமீபத்தில் நேட்டோ விமானங்கள் நடத்திய தாக்குதலில் 28 பாகிஸ்தான் ராணுவவீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பலுசிஸ்தான் மாகாணத்தில் அமைந்திருக்கும் ஷம்சி விமானத் தளத்தை விட்டு 15 நாள்களுக்குள் வெளியேற வேண்டும் என அமெரிக்காவுக்கு பாகிஸ் தான் அரசு உத்தரவிட்டது.

இந்த நிலையில் திடீர் பயணமாக பாகிஸ்தான் வந்த ஐக்கிய அரபு அமீரக வெளியுறவுத்துறை அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் ஜயீத் அல் நஹ்யான் அந்நாட்டு அதிபர் சர்தார் மற்றும் ராணுவத்தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வேஸ் கயானி ஆகியோரை சந்தித்து பேசினார்.

அப்போது பலுசிஸ் தான் மாகாணத்தில் உள்ள ஷம்சி விமானத் தளத்தைவிட்டு வெளியேறுவதற்கு அமெரிக் காவுக்கு அளித்துள்ள 15 நாள் அவகாசத்தை நீடிக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அவரது கோரிக்கையை ஏற்க சர்தாரி மறுத்துவிட்டார். (ந)

## ஹொங்கொங்கில் தீ விபத்து: 9 பேர் உடல் கருகிச் சாவு

ஹொங்கொங்,டிசெம்.2

ஹொங்கொங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி ஒன்பது பேர் பலியாகினர்.

ஹொங்கொங்கின் மோங் ஹோங் வியாபார நிலையப் பகுதியில் அமைந்துள்ள அடுக்கு மாடியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ அருகில் இருந்த கடைகளுக்கும் பரவியதால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

இந்தத் தீவிபத்து குறித்து பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். கடந்த ஆண்டு இதே பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 30க்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ந)



மியன்மார் வந்திருந்த அமெரிக்க வெளியுறவுச் செயலர் கிலாரி கிளின்டனை, அந்த நாட்டு வெளியுறவுத் துறை இணை அமைச்சர் மையோமின்ட் யோஸ்கோன் விமான நிலையத்தில் வரவேற்றார்.

## ஹிலாரி கிளிண்டன் மியன்மார் சுற்றுப் பயணம்

பீஜிங், டிசெ.2

கடந்த 50 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக அமெரிக்காவின் வெளியுறவுத் துறை செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மியன்மார் நாட்டுக்கு மூன்றுநாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து சீனாவில் இருந்து வெளிவரும் இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது: மூன்றுநாள் சுற்றுப் பயணமாக மியன்மார் சென்றுள்ள ஹிலாரி கிளிங்டன் இரு நாடுகளிடையே நல்லுறவை மேம்படுத்துவது, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்கள் குறித்தும் அதிபர் தெயின் செயின், வெளியுறவுத் துறை அமைச்சர் ஊனாமவூங் மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் யூகின் ஆகியோரையும் சந்தித்துப் பேச உள்ளார். மேலும் தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆங்சாங் சூகியையும் சந்தித்துப் பேச உள்ளார் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தனது 3 வயதுக் குழந்தையை கொடூரமாகக் கொன்ற தந்தை!

பரிஸ்,டிசெம்.2

பிரான்ஸ் தலைநகர் பரிஸ் அருகேயுள்ள பயாஸ் என்ற நகரை சேர்ந்த கிறிஸ்டோபிசேம் தனது 3 வயது குழந்தையை சலவை இயந்திரத்துக்குள் போட்டு கொடூரமான முறையில் கொலை செய்துள்ளார்.

பஸ்டியன் என்ற 3 வயதுச் சிறுவன் முன்பள்ளியில் படித்து வந்தான். குழப்படிகார இந்தச் சிறுவன் தன்னுடன் படிக்கும் சக மாணவனின் ஓவியத்தை வீணாக்கியதாகக்கூறி, முன்பள்ளி நிர்வாகம் கிறிஸ்டோபியை அழைத்துக் கண்டித்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அவர் தனது மகன் பஸ்டிய னின் கை, கால்களை கட்டி சலவை இயந்திரத்துக்குள் போட்டு துணி சலவை செய்வது போன்று அவனைத் துவைத்து எடுத்தார்.

இதனால் அவன் தலை மற்றும் கை, கால்களில் அடிபட்டது. இதை சிறிது நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவரது மனைவி சார்லின் இதுகுறித்து அயல் வீட்டினரிடம் தெரிவித்தார்.

அவர்கள் வந்து கிறிஸ்டோபியை தடுத்து நிறுத்தி பஸ்டியனை சலவை இயந்திரத்துக்குள் இருந்து மீட்டு, படுகாயங்களுடன் இருந்த அவனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து கிறிஸ்டோபியை கைது செய்தனர். இந்தச் சம்பவத்தை தடுக்காமல் வேடிக்கை பார்த்த அவரது மனைவி சார்லினும் கைதானார். (ந)

# ஈரான் ஏவுகணைத் தளம் முற்றாக நாசம்

## அமெரிக்கப் பத்திரிகை பரபரப்புத் தகவல்

வாஷிங்டன்,டிசெம்.2

ஈரானில் உள்ள ராணுவ ஏவுகணைத் தளம் முற்றாக அழிந்து விட்டதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று பரபரப்பான தகவல் வெளியிட்டுள்ளது.

ஈரான் உள்ள பின் கனே என்ற ராணுவத் தளம் ஒன்றில், கடந்த நவம்பர் 14ஆம் திகதி, திடீரென வெடிவிபத்தொன்று நிகழ்ந்தது. இதில், ஈரானின் 17 வீரர்கள், அந்நாட்டின் தலைசிறந்த ஏவுகணை விஞ்ஞானி ஹசன் மொகாதம் ஆகியோர் பலியாகினர். இந்தச் சம்பவம் எதிர்பாராமல் நடந்த விபத்து என ஈரான் தெரிவித்தது.அதே நேரம், இதன் பின்னணியில், இஸ்ரேல் உளவுத் துறையான 'மொசாட்' இருக்கலாம் என்ற சந்தேகமும் இருந்து வந்தது.

இந்நிலையில், அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'தி நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை, இந்த வெடிவிபத்து குறித்து வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது; பின் கனே பகுதியை செயற்கைக்கோள் மூலம் படம் எடுத்ததில் அந்தப் பகுதி ராணுவத் தளம் முற்றிலும் அழிந்து போயிருப்பது தெரியவந்துள்ளது. அந்த ராணுவத் தளம், ஈரானின் ஏவுகணை ஆய்வுக் கூடமாகச் செயற்பட்டு வந்திருக்கிறது.

இதுகுறித்து, சர்வதேச பாதுகாப்பு மற்றும் அறிவியல் கழகத்தினர் நடத் திய ஆய்வில், பின் கனேயில் இருந்த ஏவுகணை பொறியியலாளர்கள், ஓர் ஏவுகணையின் இயந்திரப் பகுதியைச் செயற்படுத்திக் கொண்டிருந்த போது இந்த விபத்து நடந்திருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது.

இந்தத் தளத்தில் ஈரான் அதிக தூரம் சென்று தாக்கக் கூடிய, அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லக் கூடிய ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதாக அறிவியல் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறு அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை உறுதிப்படுத்தும் விதத்தில், விபத்து நடந்த உடன், ஈரான் ராணுவத் தளபதி ஹசன் பிரவுசாபதி கூறிய போது,''இஸ்ரேலின் வாயை அடைக்கும் விதத்தில், ஆயுதங்களைப் பொறியியலாளர்கள் ஆய்வு செய்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது'' என்று தெரி வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் பெல்ஜியத்தின் லக்சம்பர்க் முதலிடம்

உலகில் மக்கள் பாதுகாப்புடன் வாழ ஏற்ற நகரங்கள் பட்டியலில் பெல்ஜியத்தில் உள்ள லக்சம்பர்க் நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

உலகத்தில் மக்கள் பாதுகாப்புடன் வாழ ஏற்ற நகரங்கள் எவை என்று ஆண்டுதோறும் மெர்சர் என்ற நிறுவனம் ஆய்வு நடத்தி வருகிறது. இந்நிறுவனம் இந்த ஆண்டு 221 நகரங்களில் நடத்திய ஆய்வில் பெல்ஜியத்தில் உள்ள லக்சம்பர்க் நகரம் முதலிடத்தை பிடித்துள்ளது.

இதே போல் அமைதியான சுற்றுச்சூழல், செலவு, கட்டமைப்பு, போக்குவரத்துவசதி, மருத்துவவசதி கொண்ட வாழ்வதற்கு ஏற்ற நகரங்கள் எவை என்பது பற்றியும் மெர்சர் நிறுவனம் ஆய்வு நடத்தியது. இதில் ஆஸ்திரேலியாவின் தலைநகரம் வியன்னா முதலிடத்தில் உள்ளது. 2ஆவது இடத்தை சுவிற்சர்லாந்தின் ஜூரிச் நகரமும், 3ஆவது இடத்தை நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரமும் பெற்றுள்ளன. (ந)

## பாகிஸ்தானுக்கு மீண்டும் அழைப்பு

ஆப்கானிஸ்தான் தொடர்பான சர்வதேச மாநாட்டில் பாகிஸ்தான் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என அமெரிக்கா மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த மாநாட்டை தாம் புறக்கணிப்பதாகப் பாகிஸ்தான் தெரிவித்திருந்த நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனின் போர்ன் நகரில் அடுத்த மாதம் இந்த மாநாடு நடைபெறவுள்ளதுடன், ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்படவுள்ளது.ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதில், பாகிஸ்தானின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைத் தொழில் நுட்ப அலுவலர் பரீட்சையில் யாழில் ஐந்துபேர் சித்தி



ஜி.டி .மதியழகன் திருமதி சி.சசிதரன் ஆர்.சிறிரமணன் எஸ். சிவச்செல்வன் எம்.சசிகுமார்.

யாழ்ப்பாணம், டிசெ.2

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மெய்வன்மை தொழில் நுட்ப அலுவலர் தரம் I இற்கான பரீட்சையில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 5 பேர் சித்தியடைந்துள்ளனர்.

சர்வதேச மெய்வன்மைச் சங்கங்களின் சம்மேளனத்தின் மெய்வன்மைத் தொழில் நுட்ப அலுவலர் கல்வி மற்றும் தரா தரச் சான்றிதழ் ஒழுங்கு முறை தரம் I இற்கான கற்கை நெறி இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு கொழும்பு தேசிய விளையாட்டு நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கற்கைநெறி வாய்மொழி மூலம் செயல்முறை மூலம் எழுத்து மூலமும் மூன்று பிரிவுகளாக இடம் பெற்றது.

இந்தப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தை சேர்ந்த 5 பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர் ஜி.டி. மதியழகன், திருமதி சிவகௌரி சசிதரன், கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ். சிவச்செல்வன், கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய ஆசிரியர் ஆர்.சிறிரமணன், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர் எம்.சசிகுமார்.

(த-23)



இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தால் கொழும்பில் நடத்தப்பட்ட தேசிய கறுப்புப் பட்டிக்கான தேர்வில் சித்தியடைந்த சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்ரநசனல் சிறிலங்கா கழக பயிற்றுனர்கள் கபில்தேவ், யூடி சிந்துஜன், தம் பிராஜ், அலெக்சான்டர், தியாகு ஆகியோருடன் இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிய சிகான் அன்ரோ டினேஸ். (த-23)



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலரும், திருமதி ஜே.எப்.எ.றூபசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான பரிசினை சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு வழங்கினார். (த-86)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ். உதை பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டியின் லீக் முறையிலான ஆட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை குருநகர் சென்.றொக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)

## வீதி ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்



யாழ்ப்பாணம், டிசெ.2

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் கிளிநொச்சி மாவட்ட செயலக விளையாட்டுத்துறையினருடன் இணைந்து நடத்திய ஆண், பெண் இருபாலருக்கான வீதி ஒட்டப்போட்டி நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றது.

ஆண்களுக்கான வீதியோட்ட போட்டியில்வெற்றிபெற்றோர்விவரம்:-

பி.லோகதரன் (கண்டா வளை பிரதேச செயலகம் - முதலாமிடம்), பி.நிறோச் (கரைச்சி பிரதேச செயகலம் - இரண்டாமிடம்), குயிந்தன் (பூநகரி பிரதேச செயலகம்- மூன்றாமிடம்)எஸ்.சிவதாஸ் (பளை பிரதேச செயலகம், நான்காமிடம்), ரி.டிலக்சன் (பூநகரி பிரதேச செயலகம் - ஐந்தா மிடம்), ரி.கொண்சன் - (பூ நகரி பிரதேச செயலகம் - ஆறா மிடம்),

பெண்களுக்கான வீதியோட்ட போட்டியில் வெற்றி யீட்டியவர்கள் விவரம்:-

எம்.ஜெயந்தினி - (கண்டாவளை பிரதேச செயலகம் - முதலாமிடம்), டி.தர்மினி (கண்டாவளை பிரதேச செயலகம் - இரண்டாமிடம்)

ரி.திவ்வியா (கரைச்சி பிரதேச செயலகம் - மூன்றா மிடம்), ரி.டென்சியா (கரைச்சிப் பிரதேச செயலகம் - நான் காமிடம்) பி.தனுஷா (கரைச்சி பிரதேச செயலகம் - ஐந்தா மிடம்), எம்.கேஜினி - (கரைச்சி பிரதேச செயலகம் - ஆறா மிடம்),

ஆண்களுக்கான வீதி ஒட்டப்போட்டியை கண்டாவளை பிரதேச செயலாளர் சத்திய சீலனும்,பெண்களுக்கானபோட்டியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ் வரனும் ஆரம்பித்துவைத்தனர். (த-23-405)

## பரிசளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கு இடையே இடம்பெற்ற மெய்வன்மை, பெருவிளை யாட்டு போட்டிகளில் வெற் றியீட்டிய போட்டியாளர்களுக்கான பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத் தால் நடைபெறாது எனவும் அந்த நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வடமராட்சி கல்விப்பணிப்பாளர் என்.நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள் ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# அதிகம் தேடப்பட்ட மரியா ஷரபோவா!

2011ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறை சார்ந்தவர்களுள் அதிகம் தேடப்பட்டவர்கள் வரிசையில் ரஷ்யாவின் டென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் பிரபல கோல்வ் வீரரான டைகர் வூட்ஸ் உள்ளார். இவர் கடந்த வருடப்பட்டியலில் முதலிடத்தில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பட்டியலில் ஷரபோவா தவிர, செரீனா வில்லியம்ஸ் (3ஆவது இடம்), கரோலின் வொஸ்னியாக்கி (5), ஹோப் சோலோ (9) ஆகிய வீராங்கனைகளும் முதல் பத்து இடங்களுள் உள்ளனர்.

முதல் 10 இடங்களைப் பிடித்தவர்கள் விவரம் வருமாறு-

1. மரியா ஷரபோவா (டென்னிஸ்)
2. டைகர் வூட்ஸ் (கோல்வ்)
3. செரீனா வில்லியம்ஸ் (டென்னிஸ்)
4. பிரெட் பாவ்ரெ (சொக்கர்)
5. கரோலின் வொஸ்னியாக்கி (டென்னிஸ்)
6. கோவெ பிரையன்ட் (கூடைப்பந்து)
7. லெப்ரொன் ஜமேஸ் (கூடைப்பந்து)
8. லமர் கர்டஷியன் ஒடொம் (கூடைப்பந்து)
9. ஹோப் சோலோ (உதைபந்து)
10. கர்மெலோ அந்தோனி (கூடைப்பந்து)



மரியா ஷரபோவா (1)



டைகர் வூட்ஸ் (2)




செரீனா வில்லியம்ஸ் (3)



பிரெட் பாவ்ரெ (4)




வொஸ்னியாக்கி (5)



கோவெ பிரையன்ட் (6)



லெப்ரொன் ஜமேஸ் (7)



லமர் கர்டஷியன் ஒடொம் (8)



ஹோப் சோலோ (9)



கர்மெலோ அந்தோனி (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தாடியது பாகிஸ்தான்

**பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் அப்ரிடியின் அபார ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.**

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு ஒரு நாள் தொடரில் விளையாடி வருகின்றது. மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஒரு நாள் ஆட்டம் மிர்பூரில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஆட்டம் ஆரம்பத்திலிருந்தே அசத்திய பாகிஸ்தானிய பந்து வீச்சாளர்கள் பங்களாதேஷின் முன்வரிசை வீரர்களை சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்து திணறடித்தனர். 31 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து திணறிய பங்களாதேஷ் அணிக்கு சகிப் அல் ஹசன், நசர் ஹுசைன் புத்துயிர் அளித்தனர். இவர்களது இணைப்பின் மூலம் பங்களாதேஷ் அணி 50 ஓட்டங்களைத் தாண்டியது. 6 ஆவது இலக்குக்காக 36 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் நசர் ஹுசைன் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பங்களாதேஷின் பயணம் முடிவை நெருங்கியது. அதன் பின்னர் சகிப் அல் ஹசன் 15, ரூபெல் ஹுசைன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க இறுதியில் 30.3 பந்து பரிமாற்றங்களில் 91 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பாகிஸ்தான் அணி சார்பில் பந்து வீச்சில் அப்ரிடி 23 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை கைப்பற்றினார்.

இலகுவான இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு, பங்களாதேஷ் அணி மிகச் சிறந்த எதிர்ப்பை வெளிப்படுத்தியது. சகிப் அல் ஹசன், ரூபெல் ஹுசைன் இருவரது பந்து வீச்சிலும் தடுமாறிய பாகிஸ்தான் அணியை அணித்தலைவர் மிஷ்பா, அப்ரிடி மீட்டு வெற்றியை எட்டினர்.

மொஹமட் ஹபீஸ் 22, இம்ரான் பர்கத் 12 ஓட்டங்களையும் பெற்று சிறப்பான ஆரம்பத்தை வழங்கினாலும் மத்திய வரிசையில் யுனிஸ்கான் 2, சப்றாஸ் அஹமட் 2, உமர் அக்மல் 7 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

இறுதியில் மிஷ்பா 16, அப்ரிடி 24 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொள்ள பாகிஸ்தான் 25.4 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றுக் கொண்டது. ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார். (15)



5 இலக்குகளைக் கைப்பற்றிய அப்ரிடி.

## இரண்டாவது ஆட்டம் இன்று

இந்திய-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் விசாகப்பட்டிணத்தில் இன்று பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. ஏற்கனவே கட்டாக்கில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 'த்ரில்' வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

# தடுமாற்றத்துடன் ஆரம்பித்தது நியூஸி.

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளின் பெரும்பகுதி மழையால் பாதிக்கப்பட்டது. இதனால், முதல் நாள் ஆட்டம் 51 பந்து பரிமாற்றங்களுடன் இடைநிறுத்தப்பட்டது. ஆட்டம் நிறுத்தப்பட்ட போது, நியூஸிலாந்து அணி, 5 இலக்குகள் இழப்புக்கு 176 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் 2 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது. இதன் முதலாவது ஆட்டம் நேற்று பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணித் தலைவர் ரெயிலர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 100 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் 5 இலக்குகளைப் பறிகொடுத்தது. முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர்களான மெக்கலம் (34), குப்தில் (13), வில்லியம்ஸன் (19), ரெயிலர் (14), ரைடர் (6) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்து சென்றனர்.

எனினும், பின்னர் ஜோடி சேர்ந்த பிராத் வைட் - வெற்றோரி ஜோடி, அணியை இலக்கு வீழ்ச்சியிலிருந்து காத்தது.

51 பந்து பரிமாற்றங்கள் நிறைவடைந்த நிலையில் மழை குறுக்கிட்டமையால் ஆட்டம் கைவிடப்பட்டது. அப்போது நியூஸிலாந்து அணி, 5 இலக்குகள் இழப்புக்கு 176 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பிராத் வைட் 32 ஓட்டங்களுடனும், வெற்றோரி 45 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்ரார்க் 2 இலக்குகளையும், பர்ரின்சன், சிடில், லியோன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும். (15)

# அகர்கருக்கு அக்கிரமம் பொங்கினார் சகீர்கான்!

மும்பை வேகப்பந்து வீச்சாளர் அஜித் அகர்கருக்கு முன்கூட்டியே தெரிவிக்காமல் அவர் கட்டாக்கிற்கு ரஞ்சி ஆட்டத்துக்காக வந்த பிறகு அவர் அணியில் இல்லை என்று கூறப்பட்டதையடுத்து அகர்க்கரை இவ்வாறு நடத்தியிருக்கக்கூடாது என்று இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் பொங்கியெழுந்துள்ளார்.

ஒரிசாவுக்கு எதிராக கட்டாக்கில் ரஞ்சி ஆட்டத்தில் மும்பை அணி ஆடி வருகிறது. முதல் இரண்டு ரஞ்சி ஆட்டங்களில் தொடைப்பகுதியில் காயம் காரணமாக இடம் பெறாத அஜித் அகர்கர், கர்நாடகாவுக்கு எதிராக விளையாடினார் ஆனால் அவர் இலக்கெதனையும் வீழ்த்தவில்லை.

இதனையடுத்து ஒரிசாவுக்கு எதிரான ஆட்டத்தில் அவிஷ்கார் சால்வி தேர்வு செய்யப்பட்டார். ஆனால் அகர்க்கர் கட்டாக் வந்த பிறகு அவரிடம் அணியில் இல்லாத விடயம் தெரிவிக்கப்பட்டது. இதில் பலமாக மனமுடைந்த அஜித் அகர்கர் உடனே அங்கிருந்து புறப்பட்டதோடு, அணியின் தேர்வுக்குழுத் தலைவர் ரெகே, சுலக்ஷன் குல்கர்னி, அணித்தலைவர் வாசிம் ஜாபர் என்று தன்னுடன் நெருங்கியவர்கள் ஒருவர் கூட எனக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவில்லை இது வருத்தமளிக்கிறது என்று கூறியதோடு, ஒரு ஆட்டத்தில் இலக்கு வீழ்த்தவில்லை என்பதால் நான் மோசமான பந்து வீச்சாளனாகிவிட்டேனா என்றும் கேள்வி எழுப்பினார்.

நான் இதைப்பற்றியெல்லாம் எதுவும் கூறுபவன் அல்ல, ஆனால் ரெகே மற்றும் சுலக்ஷன் குல்கர்னி மும்பை கிரிக்கெட்டை இதன் மூலம் பின்னடையச் செய்து விட்டனர்- என்றார். (15)

## ஜோன்சனுக்கு தற்காலிக ஓய்வு

ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன், தனது காலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சிகிச்சை பெறவிருப்பதால் அடுத்த 5 மாதங்களுக்கு கிரிக்கெட் விளையாட மாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னாபிரிக்கத் தொடரில் விளையாடிய போது ஜோன்சனுக்கு இடது கால் பாதத்தில் காயம் ஏற்பட்டது. இந்தக் காயத்துக்கு அவர் இப்போது சிகிச்சை பெறவுள்ளார். தேவைப்படும் பட்சத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)




# முன்னே செல்லும் மும் மூர்த்திகள்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மற்றும் மூன்று நாடுகளுக்கிடையிலான பெரும் கிரிக்கெட் தொடரையொட்டி, அங்குள்ள சூழ்நிலைமைகளுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்காக, இந்திய முன்னணி மும்மூர்த்திகள் என்று வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், வி.வி.எஸ். லக்ஸ்மண் ஆகியோர் முன்கூட்டியே ஆஸ்திரேலியா செல்லவுள்ளனர்.

இவர்களுடன் வேகப் பந்து வீச்சாளரான இஷாந்த் சர்மா, சுழற்பந்து வீச்சாளர் பிராக்யன் ஓஜா ஆகியோரும் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)




# போய்விடுங்கள் பொன்டிங்

**ஆலோசனை கூறுகிறார் கிறிஸ் கெய்ன்ஸ்**

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியில் 3 ஆவது வீரராக களம் இறங்கும் ரிக்கி பொன்டிங் சராசரி 27 ஓட்டங்கள் தான் எடுத்து இருக்கிறார். அவர் ஆட்டத்தில் இருந்து விடுபட சரியான நேரம் என்று நான் நினைக்கிறேன் என்று நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கிறிஸ் கெய்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

மார்க் ரெய்லர், இயான் ஹேலி, மார்க் வோக் போன்ற சிறந்த வீரர்கள் தங்கள் ஆட்டத் திறன் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதும் விலகினார்கள். ஆனால் மிகப்பெரிய வீரர் என்பதால் ரிக்கி பொன்டிங் குறித்து யாரும் எதுவும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவர் ஆட்டத்தில் இருந்து ஓய்வு பெற சரியான தருணமாகும் என்று தெரிவித்துள்ளார். (15)

# சிம்பாப்வேயின் சிறந்த வீரர்

**2011 ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரரும் சிறந்த துடுப்பாட்ட வீரரும் அவரே!**

2011 ஆம் ஆண்டுக்கான சிம்பாப்வேயின் சிறந்த கிரிக்கெட் வீரராக அந்த அணியின் தலைவர் பிரன்டன் ரெய்லர் தெரிவாகியுள்ளார். அத்துடன் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதும் அவருக்குக் கிடைத்துள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெட் சபை சார்பாக நடத்தப்பட்ட வருடாந்த விருது வழங்கும் விழாவில் இந்த அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதே வேளை, சிறந்த பந்து வீச்சாளருக்கான விருது தீகன் மேத்துக்கு கிடைத்துள்ளது. மேலும் சில வீரர்களுக்கும் இதன்போது சிறப்பு விருதுகள் கிடைத்தன. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**வீரகத்தி துரைராசா**
(சிங்கப்பூர் ஐயா)

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.12.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்தக்கிரியைகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு
07 - 04 - 1937
உதிர்வு
02 - 11 - 2011

29/4, மீனாட்சி அம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம்



அமரர்
**தம்பையா தர்மலிங்கம்**
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

கடந்த 02.11.2011 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியையில் நேரடியாகப் பங்குபற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (02.12.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மலர்வு
24 - 02 -1939
உதிர்வு
02 -11 -2011

37,திருமகள் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு தெய்வானை



4 ஆம் வட்டாரம் புங்குடுதீவை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.5, உதயநகரை வசிப்பிடாகவும் கொண்ட முருகேசு - தெய்வானை (கண்டியக்கா) நேற்று (01.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாரியாய், இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, மனோன்மணி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் செல்வம், வாணி, சுதா, குகன், நந்தினி, சுகந்தினி, சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலம்சென்ற சண்முகம் மற்றும் சின்னையா, காலஞ்சென்ற விமலா, சிவா, கரன், றேகா, சாந்தி (கிளி.பொது.மருத்துவமனை) அமரா ஆகியோரின் அன்பு மாமியும், சுரேஸ், சுகுமார், சுமன், சுதன், சுயந்தன், சிந்து, மாலா, மதி, மேகலன், சுவி, ரமேஷ், மனேஷ், றமா, றணிஸ், அச்சுதன், கஜி, சங்கவி, சுயா, பிரியா, மீனா, தங்கா, பவி, விதுஷன், பவிசன், துவாரகா, சதுர்ஷிகன் (கிளி.கனகபுரம் ம.வி) கிரு, குவேந்தினி, யாழவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2011) வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கந்தன்குளம் இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:* குடும்பத்தினர்.

### செல்லையா வீரராசா (இரத்தினசிங்கம்)

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை மேற்பார்வையாளர், பிரதேச வைத்தியசாலை வட்வெட்டித்துறை)



அல்வாய் தெற்கு, செல்வகிரியைச் சேர்ந்த செல்லையா வீரராசா கடந்த (30.11.2011) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மீனாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் கணவரும் கிரிதரன் (இ.போ.ச. கிளிநொச்சி), துஷியா (நுண்கலைப் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் தயாளினியின் (ஆசிரியை, யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பங்கு வேம்படி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் தெற்கு,
செல்வகிரி.

*தகவல்:*
குடும்பத்தினர்.

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தோம். எமது நாடு சுதந்திரமடைந்துள்ளது. எமக்கென்று பலம், அறிவு என்பன உள்ளன. போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்பதே அரசின் மாறாத கருத்தாகும். இதில் இன்றும் மாற்றமில்லை.

''நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பாக ஆய்வுசெய்வதற்கு நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கைப்படி குற்றவாளியாக எவர் இனங்காணப்படுவார்களோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்'' - என்றார் அவர்.

இதேவேளை, குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட சிலருக்குத் தண்டனை வழங்கப்படும் என அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டிய ஊடகவியலாளர்கள், அவ்வாறு தண்டனை வழங்கப்பட்டதா என்று கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், ''அவ்வாறு சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த விடயத்தில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிட்டு, குற்றமிழைத்தோர் என இனங்காணப்பட்டோருக்குத் தண்டனை வழங்குவதை நாமும் ஏற்கமாட்டோம். அதேபோன்று இந்நாட்டு மக்களும் ஏற்கமாட்டார்கள்'' என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, போர்க்குற்றம் புரிந்தனர் என இனங்காணப்படும் படையினருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்க அரசு முனைந்தால், அதைத் தடுத்து நிறுத்த மக்களைத் திரட்டி வீதியில் இறங்க நேரிடும் என்று பேரினவாத சக்திகள் போர்க்கொடி தூக்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-சி)

## தவறி விட்டது

அராலி வடக்கு, செட்டியார் மடம் எனும் முகவரியை உடைய செல்வரத்தினம் வனிந்தன் ஆகியவரது தே.அ.அட்டை (811835552V) (23.11.2011) புதன்கிழமை றொட்டியாலடிக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன்./ 0774483206, 0771175915 உடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## வீடு வாடகைக்கு/விலைக்கு தேவை

நவிண்டில் வீதி,வதிரி, நெல்லியடி ம.ம.வி அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு/விலைக்குத் தேவை.

தொடர்பு:0757621331

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது 5'8'' உயரம், வெள்ளை,அழகான செவ்வாய்க் குற்றம் உள்ள பட்டதாரியும் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் நற்பண்புள்ள மணமகனுக்கு அழகான நற்பண்புள்ள படித்த மணமகள் தேவை.

தொடர்பு:0775946187
(சனி,ஞாயிறு)

## வேலைக்கு ஆள்தேவை

கணினியில் அனுபவமுள்ள பழக விரும்பும் பெண் பிள்ளைகள் வேலைக்கு உடன் தேவை. நேரில் சமூகம் தரவும். இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 - 6.00, நாளை சனி காலை 8.30 - 10.00, மாலை 4.30 - 6.00

இயக்குநர்,
**அபிஷேக் மல்ரி ஸ்பொட்**
இராமநாதன் கல்லூரி முன்பாக
மருதனார்மடம், 0718565540

## காணி விற்பனைக்கு

**வரணி வைத்திய சாலைக்கு அருகில் 12 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.**
தொடர்புகளுக்கு: 0778607151
(7862)(9-6-8)

## உமாதவா கல்வி நிலையம்


(அல்லாரை வீதி, மீசாலை)

தரம் 3,4 வகுப்புகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர்
க. தவயோகராஜா

வகுப்பு ஆரம்பம் 05.12.2011
திங்கட்கிழமை 3 மணி
(11081)(6,8,9)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது கிளிநொச்சி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக **க.முருகவேல்** அவர்கள் 01.12.2011 திகதியில் இருந்து நியமிக்கப்பட்டதையிட்டு உளமகிழ்ந்து பாராட்டுவதோடு மேன்மேலும் உயர் பதவிகளைப் பெற்று வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கிளி/ பளை றோ.க.த.க.பாடசாலை,
பளை.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.

(\#/6455) (2-6-9)

## A/L - O/L மட்டும் போதுமானது. இங்கிலாந்து (UK) செல்ல வாய்ப்பு IELTS தேவையில்லை

இலண்டன் குறிப்பிட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பும் பட்டப்பின் படிப்பும் தாதியர் கற்கைநெறிக்கும் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். சனி அல்லது ஞாயிறு நேரில் மிகுதியைப் பேசலாம். தொலைபேசி மூலம் எந்த ஒரு விசாரணையும் மேற்கொள்ள முடியாது.

விசா வியாளம் விளம்பும் பிரிவு
**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்.**
THISAIKADDI (PVT) LTD
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016 0214914527



## யா/ கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் (இந்துக்கல்லூரி, காரைநகர்)

**கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது**

04.12.2011 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி சங்க பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். பழைய மாணவர்கள் தயவு செய்து இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தலைவர்:
பொ.சிவானந்தராஜா

செயலாளர்:
வே.சபாலிங்கம்

## யாழ் நகரில் සිංහල පංති சிங்கள வகுப்புகள்

[எழுத, பேச, வாசிக்க பூரணபயிற்சி]

புத்தம் புதிய ஆரம்பம் DEC 3

சனி, ஞாயிறு தினங்களில் மாணவர்கள் யாதாயினும் ஒரு பிரிவிற்கு சேரலாம்

| | |
|---|---|
| 7.30 -9.00a.m | 2.00 - 3.30 |
| 9.00-10.30a.m | 3.30 - 5.00 |
| 10.30-12.00noon | 5.30 - 7.00 |

O/L, A/L எடுத்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அரச ஊழியர்கள், அனைவருக்கும் ஏற்றவகையில் பாடசாலை மாணவர்கள் ஆண்டு 3முதல் O/L வரையிலான பாடத்திட்ட அடிப்படையில் கற்பிக்கப்படும்.

சிங்கள மொழி மூல கல்விகற்ற 25வருட தலைநகர் பிரபல ஆசிரியர்:

**K.பரமேஸ்வரன்**

ஆசிரியரின் தொடர்புக்கு: 0777 624 510
சகல தொடர்புகளுக்கும்:-

**CAPSTONE (PVT) LTD.**
01, Brown Road, Jaffna
Tel: 021 2220727, 0217200777, 0771250350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகளுடனான பேச்சில் அரச தரப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அப்போதைய அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்த கருத்தின் அடிப்படையில், அஸ்லி வில்ஸ் இந்தத் தகவலை அனுப்பி வைத்துள்ளார். ''தாய்லாந்தில் நடந்த பேச்சுக்களின் போது, இலங்கைப் பிரச்சினையில் எங்கே (எந்தப் பக்கம்) அமெரிக்க அரசு நிற்கின்றது என்று அறிவதற்காக அன்ரன் பாலசிங்கம் என்னிடம் பல கேள்விகளைக் கேட்டார்'' என்று மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

''மிலிந்தவின் கருத்துப்படி இந்த விடயத்தை அறிவதில் பாலசிங்கம் அதிக ஆர்வம் காட்டியுள்ளார் என்று தெரிகிறது. உதாரணத்துக்கு, ஒரு சந்தர்ப்பத்தில் பேச்சு முடிந்த பின்னர் தான் அமெரிக்கா செல்ல உள்ளார் என்று மிலிந்த கூறியுள்ளார். உடனே பாலசிங்கம் *என்னத்துக்கு? ஆயுதம் வாங்கவா?* என்று கேட்டுள்ளார். இதற்கு முன்னர் அமெரிக்கா சென்று வந்தபோதே அந்த வேலையைத் தான் முடித்து விட்டேன் என்று நகைச்சுவையாகக் கூறினார் என்று மிலிந்த தெரிவித்தார்'' - இப்படி அந்தக் 'கேபிள்' செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அந்தக் செய்தியில் இந்த விடயம் பற்றிய தனது கருத்தையும் அஸ்லி வில்ஸ் பதிவு செய்துள்ளார். ''மொறகொடவின் கருத்துக்களைப் பலப்படுத்துவது போன்று வேறு தகவல் மூலங்களில் இருந்து கிடைத்த செய்திகளும் உள்ளன. தமது அமைப்புத் தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பில் புலிகள் கவலை கொண்டுள்ளார்கள் என்று அறிய முடிகிறது. செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர் இருந்து இப்போது வரைக்கும் இந்தக் கவலை இருப்பதாகத் தெரிகிறது. புலிகளின் கவலையின் இதயமாக இருந்ததெல்லாம், என்றாவது ஒருநாள் அமெரிக்கா தங்களுடன் சண்டையிடும் என்பதுதான். அமெரிக்கா குறித்த புலிகளின் இந்தப் பயம்தான் சமாதானப் பேச்சுக்களில் புலிகளைத் தொடர்ந்தும் ஈடுபட வைத்துக் கொண்டிருக்கிறது என்று மொறகொட உட்பட இலங்கையர்கள் பலர் நம்புகின்றனர்'' என்று அமெரிக்கத் தூதர் தெரிவித்துள்ளார். (உ)


## 02.12.2011 இன்று மணிவிழா காணும் எமது ஆசிரியையை வாழ்த்துகின்றோம்



திருமதி சிவயோகம்
பேரின்பபாலசுப்பிரமணியராசா
(B.A. (Hons), Dip in Edu. SLTS - I)

(1) பிறப்பிடம்:-காளிகோவிலடி, குப்பிளான்.
(2) ஆரம்பக்கல்வி:- யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.
(3) இடை நிலைக்கல்வி:-யா/இராமநாதன் கல்லூரி.
(4) உயர்கல்வி:-பேராதனைப் பல்கலைக்கழகம்.

கணித ஆசானாய்......

| | |
|---|---|
| (5) திரு/ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயம் | 12.07.1976 -31.12.1983 |
| (6) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 01.01.1984 -30.11.1984 |
| (7) திருகோணமலை/ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயம் | 01.12.1984-14.02.1985 |
| (8) யா/குரும்பசிட்டி பொன்பரமானந்த வித்தியாலயம் | 15.02.1985 - 31.12.1993 |
| (9) யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் | 01.01.1994 -31.12.1994 |
| (10) யா/ஊரெழு கணேச வித்தியாசாலை | 01.01.1995-இன்று வரை |

ஆசிரியர் கழகம்
யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 24.11.2011
அன்று இங்கிலாந்தின்
Sheffield Hallam
University இல்
நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில்
B.Sc(Hons)
Information
Tecnology(Software
Engineering)
பட்டத்தைப் பெற்ற
அல்வாய் மலர்
மஹாலை சேர்ந்த

**செல்வலிங்கம் தனேந்திரா**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
*அம்மா* - செ.தருமதேவி,
*பாட்டி* - சா.மீனாட்சியம்மா,
*அண்ணா* - சாம்பசிவம்-சுபாஜினி குடும்பம்,
*அக்காமார்*- சிவசங்கர்-சரசா குடும்பம்,
தயேந்திரன்-சர்மிளா குடும்பம், செ.றம்மியா.

மலர் மஹால்,
அல்வாய்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சிவபாதம் நந்தகுமார்

(வலயக்கல்விப் பணிப்பாளர் வடமராட்சி)



வணிகம் தனை வளமுடனே
வாண்மையுடன் ஆற்றி
வரலாற்றில் தடம் பதித்து
நிர்வாக சேவையில்
கல்வித் திட்டமிடலின் கடலனைய
சேவையாற்றி
இன்று வடமராட்சிக்கு வளம்
சேர்க்க
வலயக் கல்விப் பணிப்பாளராய்
உயர்ந்து விட்ட
உத்தமரே!
உங்கள் சேவை பல்லாண்டு தொடர
உளமார வாழ்த்துகின்றோம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
ஆசிரிய ஆலோசகர்கள்,
வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி.


## தெரிவுக்குழுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்து தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு என்னவென்றால், எம்முடனான பேச்சில் காணப்படும் இணக்கம் தெரிவுக்குழு முன் வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். பேச்சில் இணக்கம் ஏற்படாமல் தெரிவுக்குழுவில் நாம் பங்கேற்க முடியாது என்பது எமது நிரந்தரமான தெளிவான முடிவு'' என்றார் சம்பந்தர்.

இதேவேளை, நேற்றைய பேச்சுக்கள் சாதகமான நகர்வுகளைக் கொண்டிருந்ததாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ங-சி)

## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட ஜனாதிபதியின் கீழ் வரும் 21 திணைக்களங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆஸ்திரேலிய பேர்த் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் அடிப்படைத் தனிமனித உரிமைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் மனித உரிமை ஆணையர் நாயகம் ஒருவரை நியமிப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தவறான சில விடயங்களை இந்தச் சபையில் முன்வைத்தார். இவ்விடயம் பரிசீலனை செய்யப்பட்ட சமயத்தில் இதைவிட முக்கியமாக மகளிர் பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டது.

இந்த ஆணைக்குழுவை நியமிப்பதற்கு 500 ஆயிரம் ஸ்ரேலிங் பவுன் செலவிடப்படவேண்டும். இந்தத் தொகை மேற்குறிப்பிட்ட அவசரமான விடயங்களுக்கு செலவிடமுடியும் என்பதால் ஆணைக்குழு நியமிப்பதைப் பிற்போடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான் உட்பட 50 நாடுகள் இதேகருத்தை முன்வைத்தன. நாம் தனிப்பட்ட முறையில் எதிர்க்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நமது நாட்டுப் பிரச்சினைகளை எல்லாம் சர்வதேசத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கருதுகின்றார். அதனை ஏற்க முடியாது. நமக்கு என பண்பாட்டு விழுமியங்கள், இறைமை, நாகரிகம் என்பன உள்ளன. அவற்றை ஒருபோதும் வெளிநாட்டவரிடமோ சர்வதேச சமூகத்திடமோ ஒப்படைக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்க கூறுவதுபோல் நாம் பயந்து ஒதுங்கவில்லை. மாநாடு முடிந்த பின் நாம் சுயமாக ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினோம். அங்கு சனல் - 4 பிரதிநிதிகளும் வந்து கேள்விகளைக் கேட்டனர். அவர்கள் எழுப்பிய எல்லாக் கேள்விகளுக்கும் தெளிவாக விளக்கம் அளித்தோம் - என்றார் அமைச்சர்.

## கைதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியல் கைதிகள் மீது சிறையதிகாரிகள் கடந்த 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இதனைக் கண்டித்து சிறைக்கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர். கடந்த 5 நாள்களாக போராட்டம் தொடர்ந்தது.

நேற்றுக்காலை 9 மணியளவில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், க.யோகேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், பா.அரியநேத்திரன் ஆகியோர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

சிறை அதிகாரிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு நடத்தினர். சந்திப்பில் ''இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என்பதுடன் மேற்படி தாக்குதலை நடத்திய குணபால என்ற சிறைக்காவலர், தமிழ்க் கைதிகள் தங்கியுள்ள விடுதிக்கு இனிச் செல்லமாட்டார் என்ற உறுதி மொழி சிறை அதிகாரிகளினால் வழங்கப்பட்டது'' என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறினார்.

சிறைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கைதிகள் மனு ஒன்றையும் கையளித்தனர். (உ-15)

## எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் தற்போது ஆய்வை நடத்தும் இந்திய நிறுவனத்தைத் தவிர, ரஷ்ய நாட்டின் நிறுவனமொன்று ஆய்வுகளை நடத்தவும் அரசு அனுமதிக்கவுள்ளது. இதற்கு மேலாக சீனாவின் முக்கியமான நிறுவனமொன்றும் ஆய்வு நடத்த அனுமதிகோரியிருப்பதால் அதற்கும் அனுமதி வழங்குவதற்கு இலங்கை அரசு கொள்கையளவில் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், மன்னார் கடற்படுகையில் சீனா எண்ணெய் ஆராய்வுப்பணிகளில் ஈடுபடுமாயின் அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் பல்வேறு வகையிலான தாக்கங்களை உண்டுபண்ணுமெனக் கருதும் இந்தியா, இது தொடர்பில் கடும் அதிருப்தியை வெளியிட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் வடக்கில் எண்ணெய் ஆராய்வுப்பணிகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை சீன நிறுவனத்திடம் கொள்கையளவில் வழங்குவதற்கு அரசு எடுத்த முடிவில் மாற்றஞ்செய்யப்படமாட்டாதென மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றுமாலை தெரிவித்தார். (ங-சி)


## கண்ணீர் அஞ்சலி



உதவிச் செயலாளர்
நாமகள் அவர்களின்
தந்தையார்
காலஞ்சென்ற

**க.பசுபதிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால்
துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள்**
**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
464A,T,B. Jaya Mw, Colombo 10


## மரண அறிவித்தல்கள்



### *மகேஸ்வரி நடனசிகாமணி*

ஊரிக்காடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி நடனசிகாமணி நேற்று (01.12.2011) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வ.வ.இராமசாமிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற எக்கவுண்டென்மாணிக்கம் நடனசிகாமணியின் அன்பு மனைவியும் யோகானந்தவேல், ரஞ்சினி(ராணி), சண்முகவடிவேல், சுலோசனா(லலி), குலேந்திரன் (நோர்வே), மகேந்திரதாஸ், ஜமுனா(லண்டன்), பாலேந்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2011) வெள்ளிக்கிழமை அவரது ஊரிக்காடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வி.யோகானந்தவேல்**
**(மருமகன்)**

பிருந்தாவனம், ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை



### *நீக்கிலஸ் அல்பேட் ஜெறோம்*

யாழ்ப்பாணம் 5ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட நீக்கிலஸ் அல்பேட் ஜெறோம் கடந்த 30.11.2011 புதன்கிழமை காலமானார். அன்னார் லூசியாவின் அன்புக்கணவரும் டெலிஷியா(நிசாந்தி- கனடா), மல்கம் ருசாந்தன் (பிரான்ஸ்), டெஸ்மஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிமல்தேவின் அன்பு மாமனும், டிவானி, டிவோனி ஆகியோரின் நேசமிகு பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**திருமதி லூசியா ஜெறோம்**
**(மனைவி)**

5ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர் யுவதிகள் மற்றும், A/L எழுதிய மாணவர்கான
வார , மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
01.12.2011 வியாழன் : பிரிவு 1 : 9-11 பிரிவு 2 : 4.30-5.30
03.12.2011 சனி : பிரிவு 3 : மதியம் 12.30-2.00
முதல் வகுப்பு அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்
MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456 222 9505

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நாகரத்தினம்

(இளைப்பாறிய மின்சார சபை ஊழியர்)



மல்லாகம் சல்லி ஒடையைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் தெல்லிப் பழையை வசிப்பிடமாகவும் தற்போது சங்குவேலி வடக்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகரத்தினம் நேற்று (01.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கந்தையா-பார்வதி தம்பதியரின் மருமகனும் பார்வதி, தங்கம்மா, நாகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் உதயகுமார்(லண்டன்), ஜெயகுமார்(இத்தாலி), பாலரஞ்சினி, காலஞ்சென்ற பாலரஜனி மற்றும் பாலரவி, காலஞ்சென்ற பாலகௌரி மற்றும் சிவகுமார்(UK), பாலரூபி(UK), பாலசக்தி(UK), பாலஜெயந்தினி(UK), பாலசுதர்சினி(கொழும்பு), பாலசைலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

### தேசிங்கம் குலேந்திரராசா

*(கட்டி,மல்லிகா லொறி உரிமையாளர்)*



உடுப்பிட்டி ஆரியாமலையைப் பிறப் பிடமாகவும் கரணவாய் மேற்கு வல்லி யாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தேசிங்கம் குலேந்திரராசா (கட்டி) கடந்த 30.11.2011 புதன் கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் சரோயினிதேவியின் அன்புக் கணவரும், சிவம் (C.T.B பருத்தித்துறை), ரஞ்சி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெயந்தினி, நிரூஜினி (யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி), வேணுகோபு (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி - வர்த்தகப்பிரிவு 2011), சயந்தினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வேனுகாந் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப10.30 மணியளவில் பூதவுடல் வல்லை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவி பவனம்.*
*வல்லியாவத்தை,*
*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

## முன்னாள்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக வெளிச்சக்திகள் போலிக் கதைகளை கட்ட விழ்த்துவிட்டுள்ளன. இவ்வாறு சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

நேற்று அமைச்சின் தலைமை அலுவலகத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் கூறியவை வருமாறு:-

அனுராதபுர சிறையில் சிறைக்கைதிகள் தாக்கப்பட் டுள்ளனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இதில் எவ்வித உண்மையும் இல்லை. மாவீரர் தினத்தை முன்னிட்டு அநுராதபுர சிறைச் சாலையை சோதனை நடத்த சிறைச்சாலை ஊழியர்கள் கருதினர். சோதனை நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டனர். இதன்போது 'மாவீரர் தினம் கார்த்திகை 27' என்று வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டியும், சுமார் பத்தொன்பது கையடக்கத் தொலைபேசிகளும் கைப் பற்றப்பட்டன. இந்தத் தொலைபேசிகளில் மூன்று 3G கையடக்கத் தொலைபேசிகளும் இருந்தன. புனர்வாழ்வளிக்கப்படுவது தொடர்பாக பல சலுகைகளை அரசு செய்துவரும் வேளையில், இத்தகைய முயற்சிகள் மனமாற்றத்தையே ஏற்படுத்தும். இவர்கள் பழைய போர்ச்சூழலை மீண்டும் உருவாக்க நினைக் கின்றார்கள். யுத்தம் முடிவடைந்து பின்னர் பல இளைஞர், யுவதிகள் மற்றும் சிறார்கள் புனர்வாழ்விற்காக சரணடைந்தார்கள். அவர்களை 29 புனர்வாழ்வு நிலையங்களின் ஊடாக புனர்வாழ்வு, கல்வி, சுயதொழில் எனப் பல முயற்சிகளை வழங்கினோம்.

தற்போது நான்கு புனர்வாழ்வு நிலையங்களில் 723 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். அதேவேளை, இந்த மாதம் 11ஆம் திகதி 100 பேரை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக் கவுள்ளோம். இந்தப் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன் னாள் போராளிகளின் மூலமாக கிரிக்கெட், கால்பந்து, கரப்பந்து மற்றும் இசைக்குழுக்களை உருவாக்கி சமூகத்தோடு இணைத்துள்ளோம். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 50 கோடி ரூபா ஒதுக்கீட்டை சிறைச்சாலை அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பிற்காக ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார். போகம்பர சிறைச்சாலையை பல் லேகல என்ற இடத்திற்கும், வெலிக்கட சிறைச்சாலையை மஹர என்ற பிரதேசத்துக்கும் இடமாற்றம் செய்ய அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மேலும், தண்டப்பணம் செலுத்த முடியாது சிறைக் கைதிகளாக இருக்கும் வறிய குடும்பத்தைச் சேர்ந் தோருக்காக தண்டப்பணத்தைச் செலுத்தி விடுவிக்க வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளிலேயே தண்டப்பணத்தை செலுத்த முன்வந்த ஒரேயொரு அரசு இலங்கை அரசு மட்டும் தான். அதேபோல், அதிக தொகையில் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்த அரசும் எங்களுடையது தான் - என்றார். (ங-சி)

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளில் நீதியாகவும், நேர்மையானதுமான தேர்தலை சுதந்திரமாக நடத்துவதற்கான உத்தரவாதம் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால், இந்த அடிப்படை உரிமை சரத் பொன்சேகாவுக்கு மறுக்கப்பட்டுள்ளது. அவர் தேர்தலில் போட்டியிட்டதாலேயே சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் - என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். ஜனாதிபதியின் நேரடி நிர்வாகத்தின்கீழ் உள்ள 22 திணைக் களங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத் தில் உரையாற்றும்போதே ரணில் இதனைத் தெரிவித்தார். சரத் பொன்சேகா ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும்போதே கைது செய்யப்பட்டார். அதற்கான அனுமதியை சபாநாயகரிடம் பெறவில்லை. இங்கே ஜனாதிபதியும் தனி மனித உரிமையை மீறியுள்ளார்.இங்கு பல ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. கடந்தகாலங்களில் ஜே.ஆர்.ஜெயவர்தன, ஹெக்டர் கொப்பேகடுகவை எதிர்த்தும், நான் சந்திரிகா குமாரதுங்க மற்றும் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை எதிர்த்தும் போட்டியிட்டேன். அப்போது எனக்கு எதிராகவும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்படியான ஒரு நிலைதான் இன்று சரத் பொன்சேகாவுக்கு ஏற்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின்கீழ் சரத் பொன்சேகாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெறவேண்டும். இங்கு அப்பட்டமான அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. என்றார் ரணில்.

O/L
மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு
இடம்:-
எடிசன் கல்லூரி
வலயக்கல்விப் பணிமனை முன்பாக,
கிளிநொச்சி.
காலம்:- 03,04 12.2011 சனி மற்றும் ஞாயிறு.
நேரம்:- காலை 9
அனுசரணை:- ACS கணினிக் கல்லூரி, கிளிநொச்சி.
ஆசிரியர்கள்:- யாழ்.-கிளி.பிரபல ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்
குறிப்பு- வைியடுன் வழங்கப்படும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2011
05.12.2011 காலை 10.00மணி
அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்கமான புதிய பிரிவுகள் எதிர்வரும் 03.12.2011,05.12.2011 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகவுள்ளது.
மாணவர்கள் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road,Jaffna
T.P :021 222 2831 Fax : 021 222 6933
E-Mail : iis@iis.edu.lk

கருத்துக்களம்
தலைப்பு-பெண்கள் வெளிநாட்டலில் ஏற்படும் சவால்கள்
காலம்: 03.12.2011
நேரம்: முற்பகல் 10.00 - மதியம் 12.00
இடம்: விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
இல.23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
ஆர்வலர்கள் அனைவரையும் பங்கு கொள்ளும்படி அழைக்கின்றோம்
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
யாழ்ப்பாணம், தொலைபேசி 0212229866

THE SCIENCE POINT
KANNATHIDDY ROAD, JAFFNA
PHYSICAL CHEMISTRY
ஆரம்பம்:-05.12.2011
Sat,Sun- (12.15-1.15)
சக்தியியல் -
ஆரம்பம்:-08.12.2011
Tue,Thar- (4.00-5.00) p.m.
BY:- அன்பு

CHEMISTRY => S.Vasu
A/L DAY CLASS(வினா விடை வகுப்புகள்)
புதியபிரிவு ஆரம்பம்: 03.12.2011 சனிக்கிழமை
வாயுக்கள், பொது இரசாயனவியல்
sat,sun 9.30 - 11.00am
அடிப்படை இரசாயனவியல் sat,sun - 6.30 - 7.30pm
சக்தியியல்
wed, Thur - 3.30 - 4.30 pm
NEC பருத்தித்துறை ஆனைப்பந்தி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி விநாயகமூர்த்தி சரஸ்வதி

தெல்லிப்பழை, சிவிலாம்பதி ஒழுங்கையை நிரந்தர வசிப்பிடமாகவும், கல்வியங்காடு, குளுக்கண்டி ஒழுங்கையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி விநாயகமூர்த்தி சரஸ்வதி நேற்று (01.12.2011) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், குமரகுரு, பத்மசோதி, ஜெயசோதி, செந்தில்குமரன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக வதிவிடத்தில் இன்றுமாலை வெள்ளிக்கிழமை இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளுக்கண்டி ஒழுங்கை,*
*கல்வியங்காடு.*

*தகவல்:*
செந்தில் குமரன் (மகன்)

Quick Learning Course
Spoken English With Grammar
உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர். மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள். செவ்வாய். வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்
Weekday Courses Start on 3rd of Dec.
Weekend Courses Start on 5th of Dec.
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074
No. 6, Vairavar Kovil Road, Vaiavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே ... வற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து ... தவிர்க்கவும்.

IMMEDIATE VACANCIES
Software Engineers - 2
Degree / Diploma Qualified in Computer Science
Experience in C# and .NET
Marketing Assistants - 2
A Good Knowledge or Equal Qualification, Minimum of 1 Year experience in the field of marketing, Good Communication, Presentation & Negotiation skills
Admin Assistants - 1
Applicants with intermediary qualification in the field of HR & Admin or with a minimum of 1 year experience in the respective field
Please forward your curriculum vitae either by email
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
AJ SYSTEMS I (PVT) LTD
Address : No - 315, 1/2 Palaly Road, Thirunelvely, Jaffna, Sri Lanka.
E-Mail - career@aj-sys.com Tel : 0212219234 M : 0777965596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.